# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28

சுடர் 31 | கதிர் 352 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஐப்பசி 27, சனிக்கிழமை 12.11.2016




## ரேடியோவுக்குள் கைக்குண்டு

யாழ்ப்பாணம், நவ. 12
வவுனியாவில் திருத்துவதற்காக ஒப்படைக்கப்பட்ட ஒலிச் சாதனப் பெட்டியில் இருந்து கைக்குண்டு நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளதாக, பொலிஸார் >> 25

## மாவீரர்களுக்கு சபையில் நேற்று கூட்டமைப்பு அக வணக்கம்

யாழ்ப்பாணம், நவ. 12
போரில் உயிரிழந்த படையினருக்கு சமாதி அமைக்கவும், நினைவு அஞ்சலி செலுத்தவும் சிங்களவர்களுக்கு உரிமை உள்ளது என்றால், எமது மாவீரர்களை - வீரமறவர்களை நினைவு கூருவதற்கு தமிழர்களுக்கு உரிமை இல்லையா என்று கேள்வி எழுப்பிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் க.சிவமோகன், மாவீரர்களை நினைவு கூர்ந்துநாடாளுமன்றில் அகவணக்கமும் செலுத்தினார்.

'கார்த்திகை மாதத்தில் எமது மாவீரர்களையும், போரில் சாவைத் தழுவிக் கொண்ட மக்களையும் நினைவு கூர்ந்து - மனதிலிருத்தி வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன் என்றார்.

நாடாளுமன்றத்தில் நேற்று >> 21

## வடக்கு மக்களின் நம்பிக்கைக்குரிய நீதிப் பொறிமுறை

### உருவாக்கப்படும் என்கிறார் ஜனாதிபதி



யாழ்ப்பாணம், நவ. 12
பன்னாட்டு விசாரணையைக் கோருகின்ற வடக்கு மக்களின் நம்பிக்கையை வெல்லக்கூடிய விசாரணைப் பொறிமுறையையே உருவாக்க முயற்சிக்கின்றோம்.
இவ்வாறு ஜனாதிபதி >> 23

# 65000 வீடுகளுக்கு மாற்றுத் திட்டம்

### உள்ளூர் வங்கிகளின் துணையுடன் முன்வைத்தது கூட்டமைப்பு

யாழ்ப்பாணம், நவம்பர் 12
வடக்கில் அரசால் நிர்மாணிக்கப்படும் 65 ஆயிரம் வீட்டுத் திட்டத்துக்கு மாற்றீடாக புதிய வீட்டுத் திட்டமொன்று உருவாக்கப்பட்டுள்ளது. சிவில் அமைப்புக்களுடன் இணைந்து >> 21

## அமைச்சர்களை விசாரிக்கக் குழு

### தீர்மானம் கோரும் வடக்கு ஆளுநர்

யாழ்ப்பாணம், நவ. 12
வடக்கு மாகாண அமைச்சர் குழாமை விசாரணை செய்யக் குழு நியமிக்கப்படுவது தொடர்பில் வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றிய தீர்மானத்தை அனுப்பி வைக்குமாறு ஆளுநர் ரெஜினோல்ட் குரே கடிதம் மூலம் கோரியுள்ளார். >> 21

## ஐங்கரநேசனுக்கு எதிராக எப்.சி.ஐ.டிக்குச் செல்வேன்

### உறுதியாகச் சொல்கிறார் லிங்கநாதன்

யாழ்ப்பாணம்,
வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசனுக்கு எதிரான நிதி மோசடி ஆவணங்களை அடுத்த வாரம் >> 06

## யாழ்ப்பாணத்தில் பாய்ந்த சட்டம் கொழும்பில் பாயவில்லை ஏன்?

### சபையில் தினேஸ் கேள்வி

யாழ்ப்பாணம், நவ. 12
யாழ். பல்கலை மாணவர்கள் கொலை தொடர்பில் பொலிஸார் மீது பாய்ந்த சட்டம் கொழும்பில் சிறப்புத் தேவையுடைய இராணுவத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுடன் தொடர்புடையோர் மீது ஏன் பாயவில்லை என்று பொது எதிரணியின் >> 25

## காங்கேசன் ரயில் நிலையம் அருகே காணிகள் விடுவிப்பு

யாழ்ப்பாணம், நவ.
12காங்கேசன்துறை ரயில் நிலையத்துக்கு அண்மையாக்வுள்ள சில பகுதிகள் கடந்த வெள்ளிக்கிழமை விடுவிக்கப்பட்டன.
இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் தமது காணிகளைப் >> 21

## பிரபாகரனுடன் ஒப்பந்தம் செய்து அரசமைக்கவில்லை

### பிரதமர் சபையில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 12
நான் துட்டகைமுனுவுடனோ, எல்லாளனுடனோ அல்லது பிரபாகரனுடனோ ஒப்பந்தம் >> 21



உயிர் எடுத்ததையும் ஓடத் துரத்தியதையும் ஒண்டா ஒப்பிடுகினம் பாருங்கோ...

## ஆவா குழு மூலம் அரசுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தினர்

### ரி.ஐ.டி. நீதிமன்றில் அறிக்கை

யாழ்ப்பாணம், நவ. 12
தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்களுடன் சேர்ந்து ஆவா என்ற குழுவை உருவாக்கி, அதன் மூலமாக அரசுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தினர் என்று யாழ்ப்பாணத்தில் கைதுசெய்யப்பட்டவர்களுக்கு எதிராக நேற்று >> 25

## ஒரு நாள் ஆட்டமல்ல இது டெஸ்ட் போட்டி

### நல்லாட்சி குறித்து சபையில் அமைச்சர் கபீர் காசிம்

யாழ்ப்பாணம், நவ. 12
நாம் ஆட்சிக்கு வந்திருப்பது மட்டுப்படுத்தப்பட்ட பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட ஆட்டத்தை ஆடுவதற்கல்ல. டெஸ்ட் போட்டியை ஆடுவதற்கே வந்துள்ளோம். இதன்போது சரியான முடிவுகளை எடுத்து நாட்டின் முன்னேற்றத்துக்காக நாம் செயற்படுவோம்.
இவ்வாறு அமைச்சர் கபீர் காசிம் >> 21

## கிழிந்த மறைப்பினால் நிர்வாணக் கோலத்தை மூடும் பொது எதிரணி

### அமைச்சர் கபீர் காசிம் கிண்டல்



கிழிந்த மறைப்பை வைத்துக்கொண்டு தமது நிர்வாணக் கோலத்தை மூடிமறைக்க பொது எதிரணி முயற்சிப்பதாக நேற்றுச் சபையில் கிண்டலடித்த அரச தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சரும், ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளருமான கபீர் காசிம், அதற்குச் சபையில் சுவையான கதையொன்றையும் கூறினார். >> 04

## யாழ்.நகரில் உணவகங்களை மூடிவிட உரிமையாளர்கள் முடிவு

### குப்பைகள் அகற்றப்படாததை அடுத்து

யாழ்ப்பாணம், நவ. 12
யாழ். நகரில் 5 நாள்களாகத் தேங்கியுள்ள குப்பைகள் அகற்றப்படும் வரையில் - நகர் சுத்தமாக்கப்படும் கணம் வரையில் - நகரிலுள்ள உணவு விடுதிகளை மூடிவிடுவதற்கு அதன் உரிமையாளர்கள் முடிவெடுத்துள்ளதாக வணிகர் கழகத்தின் நிர்வாக >> 24

## மீள்குடியமர்வுக்கு ஒதுக்கீடு போதாது

### கூட்டமைப்பு சபையில் அதிருப்தி

யாழ்ப்பாணம், நவ. 12
2017 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் வடக்கின் மீள்குடியேற்றம் உள்ளிட்டவற்றுக்கான ஒதுக்கீடு போதுமானதல்ல. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், ஊடகப் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் நேற்றுச் சபையில் அதிருப்தி வெளியிட்டார். நாடாளுமன் >> 23

## சுகாதாரத் தொழிலாளர் என்பதால் பாராமுகமா?

### வடக்கு முதலமைச்சரிடம் கேள்வி

யாழ்ப்பாணம், நவ. 12
எங்கள் நிரந்தர நியமனத்துக்காகத் தொடர்ந்து ஐந்தாவது நாளாகவும் பணிப் புறக்கணிப்புப் போராட்டம் நடந்து கொண்டிருக்கின்றது. போராட்டத்தை வடக்கு மாகாண முதலமைச்சரால்தான் முடித்து வைக்க முடியும். நாங்கள் சுகாதாரத் தொழிலாளர்கள் என்ற >> 04

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முதலமைச்சர் நிதியச் சட்டம் ஜனாதிபதிக்கு

யாழ்ப்பாணம், நவ. 12
வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட முதலமைச்சர் நிதிய நியதிச் சட்டம் ஜனாதிபதி மற்றும் சட்டமா அதிபர் ஆகியோருக்கு அனுப்பிவைத்துள்ளதாக வடக்கு ஆளுநரால் முதலமைச்சருக்கு எழுத்து மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

வடக்கு மாகாண மக்களுக்கு முதலமைச்சரினால் நேரில் உதவும் வகையில் ஓர் தனியான நிதியத்தை உருவாக்கும்பொருட்டு வடக்கு மாகாண சபையில் முதலமைச்சர் நிதிய நியதிச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

இவ்வாறு நிறைவேற்றப்பட்ட சட்டம் வடக்கு ஆளுநரின் ஒப்புதலுக்காகச் சபையினால் அனுப்பி வைக்கப்பட்டது.

இதனை ஆளுநர் ஜனாதிபதி மற்றும் சட்டமா அதிபர் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இவ்வாறு அனுப்பிய சட்டத்துக்குச் சட்டமா அதிபரின் ஆலோசனை கிடைக்கப் பெற்றுள்ளது எனவும், அது தொடர்பில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் ஆளுநர் அறிவித்தார்.

குறித்த கடிதமானது பேரவைத் தலைவருக்கு முகவரியிட்டு ஜனாதிபதி, பிரதமர், முதலமைச்சர், சட்டமா அதிபர், பிரதம செயலாளர் ஆகியோருக்குப் பிரதியிடப்பட்டுள்ளது. (த-101)

# பருத்தித்துறையிலும் பேசாலையிலும் இரு மீன்பிடித் துறைமுகம்

## வடக்கில் மீன்பிடியை மேம்படுத்த ஆசிய அபிவிருத்தி வங்கி திட்டம்

யாழ்ப்பாணம், நவ. 12
வடக்கு மாகாணத்தில் நிலையான மீன்பிடியை மேம்படுத்தும் திட்டம் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இதன் கீழ் பருத்தித்துறையிலும், மன்னார் பேசாலையிலும் இரு மீன்பிடித் துறைமுகங்கள் அமைக்கப்படவுள்ளன.

இந்தத் திட்டத்துக்கான இடை நிலை ஆய்வுப் பணி மற்றும் திட்டத்தின் தொழில்நுட்ப ஆயத்தம் பற்றிய கூட்டம் யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டச் செயலர்கள் பங்கேற்றனர்.

கலந்துரையாடலின்போது யாழ்ப்பாணத்தில் பருத்தித்துறை மற்றும் மன்னாரில் பேசாலை ஆகிய இடங்களில் மீன்பிடித் துறைமுகங்கள் அமைக்கப்பட உள்ளதாகவும் , இந்தத் திட்டத்தின் கீழ் மீன்பிடிக் கிராமங்களை முன்னேற்றுதல், மீன்பிடியாளர்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுதல், மீன் வளர்ப்புத் திட்டங்களை முன்னெடுத்தல் போன்ற செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் கூறப்பட்டது.

இது குறித்து திட்ட முகாமைத்துவ நிபுணர் மஞ்சுள அமரசிங்க தெரிவிக்கையில்,

துறைமுகம் அமைப்பது தொடர்பான திட்டமிடலுக்கு குழு ஒன்றை வைத்து ஆராய்ந்தோம். அவற்றின் அடிப்படையில் இரு இடங்களை தெரிவு செய்தோம். ஆரம்பத்தில் 3 இடங்களைத் தெரிவு செய்ய திட்டமிட்டபோதும், தொழில்நுட்ப, சமூக, பொருளாதார வளங்களின் அடிப்படையில் பேசாலை, பருத்தித்துறை ஆகிய பிரதேசங்களைத் தெரிவு செய்தோம். முல்லைத்தீவு பகுதியில் துறைமுகம் அமைக்கும் திட்டம் இருந்தபோதும் கடற்பகுதி ஏற்றதாக அமையவில்லை.

எமக்கு வழங்கப்பட்ட 60 மில்லியன் நிதியில் திட்டங்களை செயற்படுத்தத் திட்டமிட்டுள்ளோம். 2 துறைமுகங்களை அமைக்க 60 மில்லியன் போதாமையினால் அரசு மேலதிக கடனாக 60 மில்லியன் வழங்குவதாக அறிவித்துள்ளது.

ஆனாலும் எம்மிடம் உள்ள வளங்களின் அடிப்படையில் திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. துறைமுகம் அமைப்பதன் மூலம் அப்பகுதி மக்களின் ஆழ்கடல் மீன்பிடியை ஊக்குவிக்க முடியும். அவர்களின் வாழ்வை மேம்படுத்த முடியும்-என்றார்.

அதன் பின்னர் உரையாற்றிய மீன்பிடி அமைச்சின் திட்டப் பணிப்பாளர் பிரபாத் ரணவீர தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் உள்ள மீனவ சமூகத்தை மேம்படுத்துவதே எமது நோக்கம். இந்த திட்டம் மூலம் 70 - 75 ஆயிரம் மீனவக் குடும்பங்கள் பயனடையும். இந்த திட்டத்தைச் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்த மத்திய அரசின் முழு ஒத்துழைப்பு அவசியம்-என்றார். (த-8)

# தண்டம் அதிகரிப்புக்கு எதிராக வேலை நிறுத்தம்

## தனியார் பஸ் உரிமையாளர்கள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 12
வாகனப் போக்குவரத்தின்போது தவறிழைக்கும் சாரதிகளுக்கான தண்டம் 2 ஆயிரத்து 500 ரூபாவாக அதிகரிக்கப்பட்டதை எதிர்த்து வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள அந்தச் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன, நல்லாட்சி அரசின் வரவு-செலவுத் திட்டத்தில், போக்குவரத்து விதிமுறைகளை மீறும் சாரதிகளுக்கான ஆகக் குறைந்த தண்டப் பணம் 2 ஆயிரத்து 500 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதனை உடனடியாக நீக்கிக் கொள்ள வேண்டும்.

இது தொடர்பில் நிதி அமைச்சருடன் பேச்சு நடத்துவோம். இணக்கம் காணப்படாவிட்டால் தொடர் வேலை நிறுத்தப் போராட்டம் மேற்கொள்ளப்படும் - என்றார். (த-5)

# பிணையில் விடுதலையான ஐந்து பேர் மீண்டும் கைது

யாழ்ப்பாணம், நவ. 12
மல்லாகம் நரியிட்டான் பகுதியில் இரு இளைஞர் குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதல் சம்பவத்தில் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைதாகி பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்ட 5 பேர் மீண்டும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

கடந்த மாதம் தீபாவளி தினத்தன்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் ஒருவர் காயமடைந்தார். அங்கு நிறுத்தப்பட்டிருந்த கார் மற்றும் முச்சக்கரவண்டி என்பன அடித்துச் சேதமாக்கப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பில் இரு தரப்பிலும் இருந்து ஐவர் தெல்லிப்பழைப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் பதில் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தியபோது பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை மல்லாகம் மாவட்ட நீதிவான் ஏ.யூட்சன் முன்னிலையில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போதே அனைவரையும் மீண்டும் கைது செய்யுமாறு தெல்லிப்பழைப் பொலிஸாருக்கு நீதிவான் கட்டளை பிறப்பித்திருந்தார். இதன்படி இரு தரப்பிலும் 5 பேர் மீண்டும் கைது செய்யப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (த-4-107)

# வீதி விதி மீறினால் 2,500 ரூபா தண்டம்

## வழக்குத் தொடரவும் கட்டணம்

யாழ்ப்பாணம், நவ. 12
போக்குவரத்து விதிமுறை மீறலுக்கான தண்டப் பணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்வதற்கு கட்டணம் அறவிடும் முறைமை புதிதாக அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இவ்வாறு வரவு-செலவுத் திட்டத்தில் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க முன்மொழிவை மேற் கொண்டுள்ளார்.

இந்த முன்மொழிவு தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அதிக எண்ணிக்கையான வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்படாமல் நீதிமன்றங்களில் தேங்கிக் கிடப்ப தானது ஒட்டுமொத்த நீதிமன்ற முறைமைக்கும் சவாலாக அமைகின்றது. விசாரணைக்கு எடுத்துக்கொள்வதில் தாமதத்தை ஏற்படுத்துவதனால் நீதியைப் பெறுவதில் தாமதங்களும் ஏற்படுகின்றன. அத்துடன் அவை அரசுக்குப் பலத்த சுமையையும் ஏற்படுத்துகின்றன. ஏதேனும் நீதிமன்றம் ஒன்றில் ஒருவர் வழக்குத் தொடரும்போது அதற்காக வழக்குத் தொடர் கட்டணம் ஒன்றை அறவிடுவதற்கு முன்மொழியப்படுகின்றது.

போக்குவரத்துச் சட்டத் திட்டங்களை மீறுவது தான் விபத்துக்களுக்கு காரணம் என்று கண்டறியப்பட்டுள்ளது. போக்குவரத்து சட்டதிட்டங்களை மீறுவோர் மீது ஆகக் குறைந்த தண்டப் பணம் என்ற வகையில் 2 ஆயிரத்து 500 ரூபா வரை அதிகரிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

நீதிமன்றங்களில் வழக்குகள் தேங்கிக் கிடப்பதைத் தீர்க்கும் வகையில், தற்போது நீதிமன்றங்களினால் மாத்திரம் அறவிடப்படுகின்ற தண்டப் பணங்களைச் சம்பவ இடத்திலேயே அறவிடுவதற்கும் இயலுமாக்கும் வகையில் மோட்டார் வாகனப் போக்குவரத்துச் சட்ட திட்டங்களைத் திருத்தியமைப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். மோட்டார் வாகனச் சாரதியின் தண்டப் பணங்களைக் கைத் தொலைபேசி மூலம் செலுத்துவதற்கான முறைமையொன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளது-என்றார். (த-5)

# தடை செய்யப்பட்ட வலைத் தொகுதி மீட்பு

யாழ்ப்பாணம், நவ. 12
கடல் நீரேரியில் பாவிப்பதற்குத் தடை விதிக்கப்பட்ட இரண்டு தொகுதி வலைகளை மீட்டுள்ளதாக முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல்வளத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

நந்திக்கடல் நீரேரியில் நேற்றுக் காலை மேற்கொண்ட திடீர் நடவடிக்கையின்போது சுமார் 2 லட்சம் ரூபா பெறுமதியான வலைகள் மீட்கப்பட்டன.

85 மில்லி மீற்றருக்கு குறைவான கண்ணளவை கொண்ட வலைகளைப் பாவித்து கடல் நீரேரியில் மீன்பிடிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அது தெரிந்திருந்தும் சில மீனவர்கள் அதனை மீறி மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர். இரகசியத் தகவலையடுத்து நேற்றுச் சம்பவ இடத்துக்குச் சென்ற நீரியல்வளத்துறை அதிகாரிகள் அவற்றை மீட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-4,107)



வடக்கு மாகாண விவசாய அமைச்சினால் முன்னெடுக்கப்படும் மரநடுகை மாதத்தின் மன்னார் மாவட்ட நிகழ்வு உயிலங்குளத்தில் அமைந்துள்ள மாவட்ட விவசாய பண்ணை நிலையத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது. இந்த நிகழ்வில் தலைமை விருந்தினராக [illegible] ஐங்கரநேசன் மற்றும் வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (த-5)

# பிச்சைக்காரி தாக்கி கற்பூரப் பெண் காயம்

யாழ்ப்பாணம், நவ. 12
பிச்சைக்காரி தாக்கியதால் காயமடைந்த கற்பூரம் விற்கும் பெண் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த புதன்கிழமை மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

தாக்கியதாகக் கூறப்படும் பிச்சைக்காரியைத் தேடி வருவதாகப் பொலிஸார் கூறினர். (த-107)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்.பிக்களின் ஓய்வூதியம் ஓர் அணுகுண்டு - ஜே.வி.பி.

யாழ்ப்பாணம், நவ. 12
அரச ஊழியர்களின் ஓய்வூதியம் 'ரைம் பொம்' என்றால், 5 வருடம் மட்டுமே நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் 225 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் காலம் முழு வதும் வழங்கப்படும் ஓய்வூதியத்தை அணுகுண்டு என்று சொல்வதா ?
இவ்வாறு கேள்வி எழுப்பினார் மக்கள் விடுதலை முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன் நெத்தி.
நாடாளுமன்றத்தில் வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் தெரிவித்ததாவது:
நடப்பு வரவு - செலவுத் திட்டத்தில் கடந்த முறை வரவு - செலவுத் திட்டத்தில் இருந்த பல்வேறு விடயங்கள் திரும்பவும் முன்வைக்கப்பட்டுள்ளன. வரி மீது வரி விதிக்கும் முறைமை இந்த வரவு செலவுத் திட்டத்தில் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. சகல வர்க்கத்தினருக்கும் வரி சுமை சுமத்தும் வழியே இங்கு கொண்டு வரப்பட்டுள்ளது.
அரச சேவை ஊழியர்களுக்கு ஓய்வூதியத்துக்குப் பதிலாக பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்ட முறைமையொன்று வரவு - செலவுத் திட்டதில் முன்மொழியப்பட்டுள்ளது. ஓய்வூதியத்தை இவர்கள் நேரக் கணிப்புக் குண்டென்றும் (ரைம்பொம்) வர்ணித்துள்ளனர். அரச துறையில் ஆற்றிய சேவைக்காக அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத்தை அவ்வாறு வர்ணிக்க நிதி அமைச்சின் செயலாளரினால் எப்படி முடிந்திருந்தது என்று தெரியவில்லை. அது அவருக்கே பாதிப்பானதும் கூட. அதுமட்டுல்லாது, ஓய்வூதியத்துக்காக அரச ஊழியர்களது சம்பளத்தில் இருந்து தொகையொன்றும் வழங்கப்படுகிறது.
அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் நேரக்கணிப்புக் குண்டென்றால், 5 வருடங்கள் மட்டுமே நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் 225 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வாழ்நாள் முழுவதும் வழங்கப்படும் ஓய்வூதியம் என்பது அணுகுண்டுக்குச் சமனானதாகும்.
அரச ஊழியர்களுக்கான ஓய்வூதியத்துக்குப் பதிலாக பங்களிப்புடன் கூடிய ஓய்வூதிய முறைமையொன்றை கொண்டு வருவதென்றால், வெறும் 5 வருடங்கள் நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்தமைக்காக 225 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வாழ்நாள் முழுவதும் வழங்கப்படும் ஓய்வூதியத்தை எப்படி நியாயப்படுத்த முடியும்? பங்களிப்புடன் கூடிய ஓய்வூதிய முறைமையொன்றை அரச ஊழியர்களுக்கு கொண்டு வருவதென்றால் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியத்தை ரத்துச் செய்ய வேண்டும்-என்றார். (த-5)

## இன்று மின்வெட்டு

யாழ்ப்பாணம்,நவ.12
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று சனிக் கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 6.30 மணி வரையும் கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று வடக்கு மாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் அறிவித்தார்.
யாழ். பிரதேசத்தில் கொத்தியாவத்தை, அச்செழு, கோம்பையன் மணல் ஒருபகுதி, காக்கைதீவு ஒருபகுதி ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்படும் என்று அவர் தெரிவித்தார்.
(வ-10)

## விபத்தில் முதியவர் படுகாயம்

மிருசுவில் வைத்தியசாலைக்கு முன்பாக நேற்றிரவு இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தில் முதியவர் ஒருவர் தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.
கொடிகாமம் ஐயன் கோயிலடியைச் சேர்ந்த சுப்பையா செல்வரத்தினம், (வயது-72) என்ற முதியவரே இந்த விபத்துச் சம்பவத்தில் படுகாயமடைந்தவராவார்.
கொடிகாமம் மிருசுவில் வீதியால் பயணித்த படி ரக வாகனம், அந்த வீதியால் துவிச்சக்கர வண்டியில் பயணித்த முதியவரை முந்திச்செல்ல முற்பட்ட போதே குறித்த விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. படுகாயமடைந்த முதியவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். விபத்தை ஏற்படுத்தியதாகத் தெரிவிக்கப்பட்ட படி ரக வாகனம் வீதியின் கரையோரமாக உள்ள மின் கம்பத்துடன் மோதுண்டு நிறுத்தப்பட்டது. விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (வ-21,9)

கோடீஸ்வர லொத்தர்
சீட்டிழுப்பு வாரம்: 62
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 11.11.2016
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 76,815,620/-
W 15 31 56 57

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 513
சீட்டிழுப்பு திகதி 2016.11.11
வெற்றி இலக்கங்கள்
50 63 64 65 Z
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 17,215,580/-

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 11.11.2016
வெற்றி வாரம் 2055
வர்ணம் சிகப்பு
கும்பம்
வெற்றி இலக்கங்கள்
08 31 37 61
ஞாயிற்றுக்கிழமை வெற்றிப்பொதி
ரூ 6,381,440 /=
வெற்றி இலக்கங்கள்
47 76
டபள் சான்ஸ்
தொலை. 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919

## பட்டப்பகலில் வீடுடைத்து கரவெட்டியில் நகை திருட்டு

### சந்தேகத்தில் 5 பேர் கைதானர்

வடமராட்சி, நவ.12
பூட்டப்பட்டிருந்த வீடு உடைத்து பட்டப்பகலில் 2 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் திருடப்பட்டன. திருட்டுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் ஐவர் கைது செய்யப்பட்டனர் என்று நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தத் திருட்டுச் சம்பவம் நேற்று காலை 10 மணியளவில் வடமராட்சி கரவெட்டி விக்னேஸ்வரா பாடசாலைக்கு அருகில் உள்ள வீட்டில் இடம்பெற்றது. வீட்டிலுள்ளவர்கள் வீட்டைப் பூட்டிவிட்டு வெளியில் சென்றுள்ளனர். இந்த நிலையில் இதை அறிந்து கொண்ட திருடர்கள் முன்பக்கக் கதவை உடைத்து வீட்டினுள் புகுந்து அங்கு வைக்கப்பட்டிருந்த 2 இலட்சம் ரூபாய் தங்க நகைகளை திருடிச்சென்றுள்ளனர்.
இந்தச் சம்பவம் தொடர்பாக நேற்றயதினம் அந்த வீட்டின் உரிமையாளரால் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. முறைப்பாட்டை அடுத்து தேடுதல்களை மேற்கொண்ட போது நேற்று மாலை குறித்த திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்று சந்தேகிக்கப்படும் 5 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. விசாரணைகளின் பின்னர் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-21,109)

திருமண வெள்ளிவிழா இதய பூர்வமான நன்றிகள்



கடந்த (09.11.2016) புதன் கிழமை நடைபெற்ற எமது திருமண வெள்ளி விழா நிகழ்வில் நேரில் கலந்து கொண்டும், தொலைபேசி மற்றும் தொலைத் தொடர்புகள் ஊடாகவும் வாழ்த்துக்கள், ஆசிகள் தெரிவித்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

Best Wishes

திருமண வெள்ளி விழாவை அடுத்து இராஜமாணிக்கம் கல்யாண மண்டபத்தின் சேவைகள் அனைத்தும் குறைந்த கட்டணத்தில் வழங்கப்படுகின்றன.

* மங்கல வாத்தியம் குருக்கள் உட்பட மண்டப கட்டணம் ரூபா 40,000 (நாற்பது ஆயிரம்)
* 1000 பேர் (ஆயிரம்) ஆசனத்தில் அமர்ந்து இருக்கக் கூடியது.
* 400 பேர் (நானூறு) ஒரே நேரத்தில் கதிரை, மேசைகளில் அமர்ந்து உணவருந்தக்கூடிய வசதி.
* உயர்தரமான மரக்கறிச் சாப்பாடு ஒன்று 200 ரூபா (இருநூறு) வீதம் செய்து வழங்கப்படும்.
* குளிரூட்டி (AC) வசதி மேலதிக கட்டணத்தில் செய்து தரப்படும்.

ஓடர்களை முன்கூட்டியே பதிவு செய்து கொள்வும்.
'உங்கள் திருப்தியே எங்கள் சேவை'

(C 23375) (16,17,19)

ஸ்ரீமதி. கலாமினி
இராஜமாணிக்கம் கல்யாண மண்டபம், அச்சுவேலி.

திரு.திருமதி சிவமூர்த்தி மஞ்சுளாரஜனி தம்பதிகள்
077 3053080

## ஐந்து ஆண்டுகளாகப் பொலிஸாருக்கு தண்ணி காட்டியவர் நேற்றுச் சிக்கினார்

யாழ்ப்பாணம், நவ.12
மல்லாகம் நீதிவான் மன்றத்தினால் கடந்த 5 ஆண்டுகளாக பகிரங்கப் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபர் நேற்றைய தினம் அச்செழுப் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
பல சமூக விரோதச் செயல்களுடன் தொடர்புபட்டநிலையில் மல்லாகம் நீதிவான் மன்றத்தினால் கடந்த 5 ஆண்டுகளாக 8 தடவை பகிரங்கப் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட ஒருவரே அச்செழுப் பகுதியில் வைத்து நேற்றையதினம் கைது செய்யப்பட்டார். தொடர்ச்சியாக பிடியாணை பிறப்பிக்கப்பட்டு தேடப்பட்டு வந்த நிலையில், இவருக்கு எதிராக பகிரங்க பிடியாணையும் பிறப்பிக்கப்பட்டது.
இந்த நிலையில் அவர் தலைமறைவாக உள்ளதாகக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து, நேற்றைய தினம் அவர் மறைந்திருந்த இடத்துக்குச் சென்ற பொலிஸார் அவரைக் கைது செய்தனர். மல்லாகம் நீதிவான் முன்னிலையில் சந்தேகநபர் இன்று முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேலைவாய்ப்பு**

Cleaning மற்றும் Garden வேலை

நிறுவனம் :- பிரெஞ்சுமொழி கற்பிக்கும் தனியார் நிறுவனம்.

ALLIANCE FRANCAISE DE JAFFNA
61, Kachcheri - Nallur Road, Jaffna.
021 222 8093

**JAFFNA COLLEGE**

Cordially Invites you & your friends to its
Christmas Carol Service
"Christmas Candy Melodies"
On Sunday 13th November 2016
at 4.00 p.m.
at The Cathedral, Vaddukoddai

(c 23371) (13.17.18.21) Principal

**அவசர ஒன்றுகூடல்**

வடமாகாணத்தில் மேற்கொள்ளப்படும் பாரபட்சமான இடமாற்றக் கொள்கை மற்றும் சீரற்ற இடமாற்ற கொள்கைகளால் ஆசிரியர்கள் வருடா வருடம் பாதிக்கப் படுகின்றனர்.

இவ்வாறான இடமாற்றத்தினை சரியான முறையில் மேற்கொள்ளவும் சீரான இடமாற்றக் கொள்கை தொடர்பான தீர்மானங்களை வலியுறுத்தவும் எதிர்வரும் 13.11.2016 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு கிறீன் பீல்ட் (குருசோ றோட், பெரிய கோயில் அருகில்) மண்டபத்திற்கு இடமாற்றத்தில் பாதிக்கப்பட்ட அனைத்து ஆசிரியரையும் வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(C 23372) (14,17,18) **பாதிக்கப்பட்ட வெளிமாவட்ட ஆசிரியர்கள்.**

**ஷொப்பிங் (SHOPPING) பைகள்/குறோசரிபைகள் (GROCERY BAGS)/லன்ச் ஷீட்ஸ் (LUNCH SHEETS) உற்பத்தி செய்யும் நிறுவனம் விற்பனைக்கு**

யாழ்ப்பாணத்தில் பொலித்தீன் உற்பத்திசெய்யும் நிறுவனமொன்று மேற்கூறப்பட்ட பொருட்கள் உற்பத்தி செய்யும் இயந்திரங்கள் மற்றும் உதிரிப்பாகங்களுடன் உடனடி விற்பனைக்குண்டு. இயந்திரத்தை நிறுவுதல், விற்பனைக்கு பின்னான சேவை மற்றும் தொழிநுட்ப அறிவுரைகள் வழங்கப்படும்.


Bag Making Machine


HDPE Film Blowing Machine

மேலதிக விவரங்களுக்கு
077-8448808 உடன் தொடர்பு கொள்க.

**கேள்வி அறிவித்தல்**

**வண்ணை கோம்பயன் மணல் இந்து மயானப் பராமரிப்பு சேவை வழங்கல்**
**யாழ்ப்பாணம் மாநகர சபை**

01. யாழ்ப்பாணம் மாநகர சபையின் வடமாகாண உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழுத்தலைவரால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் மாநகர சபை கேள்வி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டு விபரிக்கப்பட்ட வேலைகளுக்காகக் கோரப்படுகின்றன.

02. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வதுடன் வேலை நாள்களில் காலை 9.00 மணி முதல் மாலை 2.00 மணி வரை 2016.11.24 வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.

03. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலிருந்து 2016.11.11 ஆம் திகதியிலிருந்து 2016.11.24 வரை காலை 9.00 மணி முதல் மாலை 2.00 மணி வரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத ரூபா 2000.00 + VAT (15%) இனைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

04. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து ஆணையாளர், மாநக்ர சபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 2016.11.25 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

தலைவர் / ஆணையாளர்
உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழு
யாழ் மாநகர சபை
2016.11.10

# மாதா சொரூபத்தின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்ததை நான் கண்டேன்

## அருட்சகோதரி றெபேக்கா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.12

யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் வீதியில் அமைந்துள்ள பற்றி மாதா சொரூபத்தின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்ததை நான் நேரில் பார்த்தேன் என அப்பகுதியைச் சேர்ந்த அருட் சகோதரிறெபேக்காதெரிவித்தார். இந்த தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாடசாலை முடிவடைந்ததன் பின்னர் ஒவ்வொருநாளும் இரு மாணவிகள் குறித்தசொரூபத்தில் சென்று மன்றாடுவார்கள். கடந்த 7 ஆம் திகதியும் அவர்கள் அங்கு சென்று மன்றாடி எண்ணெய் தடவி விட்டுத் திரும்பிப் பார்த்தபோது மாதாவின் இருகண்களிலும் இருந்து நீர் வழிந்துள்ளது.

இதை அவதானித்த மாணவிகள் அங்கு நின்றவர்களிடம் தெரிவித்தார்கள். எனக்கும் தகவல் கிடைத்தது. மாலை 4.30 மணிக்கு நான் நேரில் சென்று பார்த்தேன். சொரூபத்தினுடைய கண்ணாடிகூண்டுக்குள் மாதாவின் கண்களைத் தொட்டுப் பார்த்தேன். நீர் வழிந்தது. இதன்பின்னர்மாலை 6 மணியளவில் இன்றும் 3 அருட் சகோதரிகள் சென்று பார்த்தார்கள். அப்போதும் கண்ணீர்வழிந்ததாக அவர்கள் என்னிடம் கூறினார்கள்- என்றார்.

பற்றிமா மாதா சொரூபத்தின் கண்களில் இருந்து கண்ணீர் வந்ததாகக் கூறப்பட்ட சம்பவம் உண்மையில்லை எனப் பங்குத் தந்தை தெரிவித்ததாக நேற்றுமுன்தினம் செய்திவெளியிடப்பட்டிருந்தது. ஆனால் இந்தச் சம்பவம் தொடர்பாகக் கருத்துக்கள் எதையும் தான் தெரிவிக்கவில்லை எனவும், குறித்த மாதா சொரூபத்தில் இருந்து கண்ணீர் வடிவதாகத் தனக்கும் தெரிவிக்கப்பட்டிருந்தது எனவும் பங்குத்தந்தை ஆர். நேசராஜா தெரிவித்தார். உதயனில் வெளியான செய்திக்குக் கருத்துத் தெரிவித்த பங்குத்தந்தை குறித்த பகுதிக்குப் பொறுப்பானவர் அல்ல எனவும், அவர் அருகில் உள்ள பகுதிக்குப் பொறுப்பானவர் என்றும், அவருடைய பகுதியில் அப்படியான சம்பவங்கள் இடம்பெறவில்லை என அவர் தெரிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (த-2)

# மாணவர்களின் நாடாளுமன்றம் இன்று கூடுகிறது மிருசுவிலில்

தென்மராட்சி, நவ.12

மிருசுவில் விடத்தல்பளை கமலாசனி வித்தியாலய மாணவர் நாடாளுமன்ற இரண்டாவது அமர்வும் வித்தியாலய பரிசில் நாள் நிகழ்வும் இன்று சனிக் கிழமை இடம்பெற உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த அமர்வு சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு வித்தியாலய அதிபர் இ.நாகேந்திரன் தலைமையில் வித்தியாலய கலை அரங்கில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வுகளுக்குத் தலைமை விருந்தினராக வித்தியாலய பழைய மாணவியும் யாழ்.பல்கலைக்கழக விவசாய பீட இரசாயன வியற்றுறை விரிவுரையாளருமாகிய திருமதி சுபாசினி சிவகாந்தன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாகத் தென்மராட்சி கல்வி வலய வழிகாட்டலும் ஆலோசனை யும் பிரிவு சேவைக்கால ஆசி ரிய ஆலோசகர் வே.க.சந்திரகுமார், யாழ்ப்பாணம் மைதிலி நகைமாட உரிமையாளர் நடராசா ஆனந்தன் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக வித்தியாலய பழைய மாணவர்களான மருதங்கேணி பிரதேச வைத்தியசாலை வைத்திய அதிகாரி மருத்துவர் வி.ஆறுமுகம், கிளிநொச்சி பெருந்தெருக்கள் திணைக்கள ஓய்வு நிலை மேற்பார்வையாளர் செ.ஜெயராசா ஆகியோரும் கலந்து கொள்வர். (த-9)

**"சானியா கேபல் கெயர்"**
**262, செம்மணி வீதி, நாயன்மார்கட்டு,**
**ஆயுள்வேத வைத்தியசாலை, நல்லூர்.** Estd:1838

F.B Saneya Herbals

எமது பாரம்பரிய முறிவு, நெரிவு சிகிச்சைகளுடன்.

நீங்களா? என அதிசயிக்கும் கருமைநிற நீக்கம், முகப்பருக்கள், கருந்திட்டுக்கள், பள்ளங்கள், சுருக்கங்கள், கருவளையம், மூக்கோரங்களில் ஏற்படும் கொழும்புப் படிவுகள், உதடு கருமை, கழுத்துக்கருமை மற்றும் பாலுண்ணி போன்றவற்றிற்கான ஆயுள்வேத சிகிச்சைகள்

மற்றும் " சொராசிஸ்" உட்பட அனைத்து சருமப் பிரச்சினைக்குமான நிரந்தர தீர்வு.

வைத்திய மேற்பார்வையின் கீழ் நடைபெறுகிறது.

**முற்பதிவு அவசியம்: 077 735 1954**

**கல்வியுலகின் புதிய சகாப்தம்**

2017 ஆம் ஆண்டிற்கான விசேட புலமைப்பரிசில் வகுப்புக்கள், Paper Class,Group Class என்பனவும், ஆண்டு 03 தொடக்கம் 5 வரையான வகுப்புகளும் நடைபெறுகின்றன. 20 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவம் பெற்ற பிரபல ஆசிரியர் தேசமான்ய V.S **கபிலன்**

(வளவாளர் புலமைச்சுடர், எவசைன் வெளியீட்டு ஆசிரியர்)

தொடர்புகளுக்கு: V.S கபிலன் (புலமை ஆசான்)
077 998 4929
டிரான்ஸ்போமர் சந்தி, பண்டாரிக்குளம், வவுனியா

## கிழிந்த...

அவர் தெரிவித்ததாவது:

இன்று நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதாரப் பிரச்சினைகள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் உருவாக்கப்பட்டவையல்ல. கடந்த ஆட்சியில் ஏற்படுத்தப்பட்டவை. இவற்றை மறந்துவிட்டு பொது எதிரணியினர் இப்போது பேசிக் கொண்டிருக்கின்றனர்.

எதிர்க் கட்சிக்கு வந்த பின்னர்தான் இவர்களுக்குத் தமது நிர்வாணம் தெரிகின்றது. கிழிந்த மறைப்பை வைத்துக் கொண்டு தமது நிர்வாணத்தை மூடிமறைக்கப் பொது எதிரணியினர் முயற்சிக்கின்றனர். அந்த நிர்வாணத்தை அவ்வளவு இலகுவாக மூடி மறைத்துவிட முடியாது. இதற்கு நான் கதையொன்றைக் கூறுகின்றேன்.

முனிவர் ஒருவர் காட்டு வழியே நடந்து சென்றுள்ளார். இடையே செல்லும்போது தான் செல்ல வேண்டிய இடத்திற்கான பாதை அவருக்குத் தெரியவில்லை. அப்போது அங்கிருந்த குளத்தில் ஒருவர் குளித்துக் கொண்டிருந்தார். அவர் குளத்தில் நிர்வாணமாகவே குளித்துக் கொண்டிருந்தார். குளத்தில் நீர்மட்டம் உயர்வாக இருந்ததால் அவரது நிர்வாணம் தெரியவில்லை. குளத்தில் குளித்துக் கொண்டிருப்பவரைக் கண்ட முனிவர், தாம் போக வேண்டிய இடத்தைக் குறிப்பிட்டு அங்கு எப்படி வெல்வது என்று அவரிடம் வழி கேட்டார்.

குளத்தில் நிர்வாணமாக இருந்த நபர், நீரில் மிதந்து வந்த வாளியை எடுத்து தனது நிர்வாணத்தை மறைத்துக் கொண்டு மேலே வந்து, முனிவருடன் உரையாடியுள்ளார். முனிவருக்கு ஏதோ கூற, முனிவரும் அவருக்குப் பதில் கூறியுள்ளார். அப்போது முனிவர், நீ உனது நிர்வாணத்தை எண்ணிக் கொண்டிருக்கின்றாய். ஆனால், நீ நிர்வாணத்தை மறைத்திருக்கும் வாளியில் அடிப்பாகம் இல்லை என்று கூறியுள்ளார்.

இவ்வாறுதான் பொது எதிரணியும் கிழிந்த மறைப்பை வைத்துதான் தனது நிர்வாணத்தை மூடியுள்ளது-என்றார் கிண்டலாக. (த-5)

## சுகாதாரத்...

காரணத்தினாலா அவரும் எங்களைப் பாராமுகமாக இருக்கின்றார் என்ற சந்தேகம் எழுகின்றது.

இவ்வாறு வடபிராந்திய ஐக்கிய தொழிலாளர் சங்கத்தின் தலைவர் அற்புதம் உதயகுமார் தெரிவித்தார்.

"யாழ். மாநகர சபையில் சுகாதாரத் தொழிலாளர்களாகக் கடமையாற்றும் 127 தொழிலாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்திகடந்த 7ஆம்திகதியில் இருந்துபணிப் புறக் கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்காத நிலையில், வணிகர் சங்கத்தினர் இதனை முடிவுக்குக் கொண்டு வருவதற்காகத் தலையீடு செய்திருந்தனர்.

'ஒரு மாதத்துக்குள் எங்களுக்கு நிரந்தர நியமனம் தருவதாக ஆணையாளர் எழுத்தில் உறுதிமொழி தரவேண்டும். அல்லது வணிகர் சங்கத்தினராவது உறுதிமொழியை எங்களுக்குத் தரவேண்டும் என்று கேட்டிருந்தோம். யாரும் அதற்குச் சம்மதிக்கவில்லை. எல்லோரும் தங்களுக்கு வேலை நடக்கவேண்டும் என்பதைதான் பார்க்கிறார்களே தவிர எங்கள் நலனில் யாரும் அக்கறை கொள்ளவில்லை. எங்களுடைய நிரந்தர நியமனத்துக்காகத் தொடர்ந்து ஐந்தாவது நாளாக இன்றும் (நேற்று) எங்கள் பணிப் புறக்கணிப்புப் போராட்டம் தொடர்ந்து கொண்டு இருக்கின்றது. இதற்கு முடிவு காணவேண்டும் என்றால் வடக்கு மாகாண முதலமைச்சரால் தான் முடியும். நாங்கள் சுகாதார தொழிலாளர்கள் என்ற காரணத்தினாலா அவரும் பாராமுகமாக இருக்கின்றார். எங்களுடைய போராட்டம் நியாயமானது. எங்கள் கோரிக்கை நியாய மானது. கோரிக்கை நிறைவேறும் வரைக்கும் எங்கள் போராட்டம் தொடரும்- என்றார்.(த-5-7)

**SUPER LUXURY BUS FOR HIRE**



Call
076 822 7522
076 822 7515
076 822 7523

29 Seats / Fully Adjustable Seats / Fully Air Conditionel
TV+DVD System / Free Wi-fi

581, K.K.S ROAD, JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்குண்டு

சிறுப்பிட்டி மத்தி, நீர்வேலியில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குண்டு.

**0041783022171 (பைவர்)**

## வீடு வாடகைக்கு

திருநெல்வேலி வளாக வீதியில் மூன்று அறைகள் கொண்ட வீடு குடும்பத்தினருக்கு வாடகைக்கு உண்டு.

**071 446 8174, 077 220 0928**

## வேலை வாய்ப்பு

**Store Keeper**

**Sales Girls**

**Helpers**
(Boys 18 வயதுக்கு மேற்பட்டோர்)

**New Sun Ceramics (Pvt) Ltd**
A9 Road, Kilinochchi
Tel: 0212 283 872 | 0729 532 598

FLEX Graphic

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள உணவகம் ஒன்றுக்கு ரீ மேக்கர், றொட்டி மேக்கர், உணவு பரிமாறுபவர்கள் ஆகியோர் தேவை.

**077 977 6421**

## வேலையாள்கள் தேவை

நியூசன் செறமிக் (பிறைவேற் லிமிட்டெட்) (கிளிநொச்சி பழைய வைத்தியசாலை முன்பாக) எமது நிறுவனத்திற்கு விற்பனைப்பிரதிநிதிகள் தேவை. வயது 18 - 26 வரை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

**021 228 3872/072 953 2598**

## விசேட கட்டணச்சலுகையில் கணினிக்கற்கை நெறிகள்

**DMI**
COMPUTER EDUCATION

### புதிய பிரிவுகள் ஆரம்பம்

- Dip.in Information Technology
- Diploma in Office Automation
- Dip. in Pre-Press Desktop Publishing
- Diploma in Pc Applications
- Adv. Dip. in Hardware & Networking
- Dip. in Video Production & Multimedia
- Dip.in Web Designing & Development
- Dip. in Computerized Accounting
- Master Dip.in Mulitmedia & Animation

#Auto CAD, C++, JAVA#

ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க யாழில் பெருமளவு மாணவர்கள் தெரிவு செய்யும்
**Diploma in English**



**IELTS**
•Unique Test Tips
•Latest course Materials

**IELTS Life Skills**
திருமணம் செய்து UK செல்பவர்களுக்கு

☑ அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்.
☑ சர்வதேச அங்கீகாரம் பெற்ற நிறுவன (ISO-9001:2008) CERTIFIED சான்றிதழ்கள்
☑ இலகு தவணைக்கட்டண வசதிகள். ☑ இங்கிலாந்து, இந்திய பாடநூல்கள்.
☑ TVEC ல் பதிவு செய்யப்பட்ட நிறுவனம்.

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
12/11/2016 (Sat) - 9.30 am.
14/11/2016 (Mon) - 9.30 am

அங்கீகரிக்கப்பட்ட முழுமையானதும் தரமானதுமான கல்விக்கு

## DMI COMPUTER EDUCATION

| | | | | |
|---|---|---|---|---|
| No.113, கஸ்தூரியார் வீதி, (சுவாமி ஞானப் பிரகாசம்) யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403 | M.M.V. வீதி, (மத்திய மகா வித்தியாலயம் முன்பாக) நெல்லியடி Tel.: 021-226 2470 | No. 174 கண்டி வீதி. HNB வங்கி அருகில் சாவகச்சேரி Tel.: 021-227 0775 | No. 130 K. K. S வீதி. NSB வங்கி அருகில் சுன்னாகம் Tel.: 021-224 1970 | No.19,A9 வீதி, ஆனந்தபுரம் (மத்திய கல்லூரி முன்பாக) கிளிநொச்சி Tel.: 021-228 5655 |

# தும்பளை நாவலர் விளையாட்டுக் கழகம்

23 ஆவது மாபெரும் இலவசக் கல்விக் கருத்தரங்கு - 2016 -

இடம் : யா/தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்
காலம் : இன்றும் (12.11.2016), நாளையும் (13.11.2016) காலை 8.00 மணிமுதல்

**வளவாளர்கள்**

| | |
|---|---|
| தமிழ் | : திரு. இல.நிசாந்தன் (ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி) |
| கணிதம் | : திரு. M. அசுபதிராஜ் (ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி) |
| ஆங்கிலம் | : திரு. P. வாசவன் (யாழ். பிரபல ஆசிரியர்) |
| விஞ்ஞானம் | : திரு. A. கஜேந்திரன் (ஆசிரியர், கிளி/முருகானந்தா கல்லூரி) |
| வரலாறு | : திரு. R.S. சந்திரன் (ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி) |

**ஒழுங்கமைப்பு**


கல்விப் பிரிவு,
தும்பளை நாவலர் விளையாட்டுக் கழகம்.

அனுசரணை:
**உதயன்**
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

(C/23369)(10.17.18)

# மரண அறிவித்தல்

## தம்பு கணபதிப்பிள்ளை



மீசாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது உடையார்கட்டு வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு கணபதிப்பிள்ளை 10.11.2016 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு - உமையம்மை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னத்தம்பி - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும் மகேஸ்வரியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற நல்லதம்பி - அல்லாரை (மீசாலை), மற்றும் சின்னத்தம்பி (சுதந்திரபுரம்) ஆகியோரின் சகோதரனும் செல்வராணி (ராணி - மீசாலை), காலஞ்சென்ற செல்வராசா மற்றும் ஜெயலட்சுமி (ஆசிரியர்- இருட்டுமடு தமிழ் மகா வித்தியாலயம்),வளர்மதி (ராதா - சுவிஸ்), கேதீஸ்வரன்(சுரேன் - லண்டன்), விவேகானந்தி (ஆனந்தி - இந்தியா), விவேகானந்தன் (வினோ - பிரான்ஸ்), ஆதித்தன் (ஆதி - பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சிவராசா மற்றும் தேவறஞ்சிதம், கிருஸ்ணகுமார், தெய்வேந்திரன் (சுவிஸ்), சுகந்தி (லண்டன்), விக்கினேஸ்வரன் (பிரான்ஸ்), சுந்தரமலர்(பிரான்ஸ்), மதிசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் ஸ்ரீபிரியா- செல்வகுமார், நந்தகோபன் (லண்டன்), பானுகோபன்(பிரான்ஸ்), வேணுகோபன், மேகலா- செல்வன் (லண்டன்), பார்த்தீபன் (பிரான்ஸ்), நர்மதா-சுமன், மாதுரி, பிரகதீஸ்(அருண்- மாணவன், உடையார்கட்டு மகா வித்தியாலயம்) அபிசேக் (சுவிஸ்), அட்சயா(லண்டன்), அபிரன் (லண்டன்), தேவபானு (இந்தியா), நந்திவர்மன்(இந்தியா), சங்கீர்த்தனா (பிரான்ஸ்),நிவேதா- பிரகாஸ் (கொழும்பு), சுவேதா (பிரான்ஸ்) கிருஷாந்தவன்(பிரான்ஸ்), யதுசன்(பிரான்ஸ்), அபிநயா(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனும் வர்ஜிகன் (லண்டன்), வர்ஷனா(லண்டன்), சுமறஜித், சுரோன் பிரகீத் குறோய ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது தற்போதைய வதிவிடமான உடையார்கட்டு வடக்கில் உள்ள அவரது இல்லத்தில் நாளை(13.11.2016) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக உடையார்கட்டு வடக்கு வெள்ளப்பள்ளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**077 738 0298**
**(புவனேஸ்வரன் -ஈசன்)**

தகவல்:
மகள் ஜெயலட்சுமி (ஆசிரியை - உடையார்கட்டு) 077 888 2638

**தோற்றம்**
03.05.1934

**மறைவு**
10.11.2016

(K/215)(12.18.17.21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் சொலமன் லேனில் (சுண்டுக்குளிக்கு அருகில்) 3 பரப்பு 8.51குளி கொண்ட காணி விற்பனைக்கு உண்டு.

(J 6061)(16,17,19) **077 9006349**

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**

பொன்னாலை வீதி, முதலாம் ஒழுங்கை, மானிப்பாயில் சகல வசதிகளையும் கொண்ட வீட்டுடன் 2 பரப்பு 0.58 குளி காணி விற்பனைக்கு உண்டு. (J 6064)(16,17,19)

**077 3902157, 077 9291092**

**கணினி ஆசிரியர் தேவை**

பிரபல தனியார் கணினி கல்வி நிறுவனத்திற்கு MS OFFICE ஆசிரியர் தேவை. சுயவிவரக் கோவையுடன் நேரில் வரவும். (c 23383)(16,17,19)

**077 7271645 (JOSEPH)**

# சுற்றுச் சூழல் கழிவுகளை உடன் அகற்றக் கோரிக்கை

## சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் போராட்டத்தால் கழிவகற்றல் பாதிப்பு

யாழ்ப்பாணம்,நவ.12

யாழ்.மாநகரப் பகுதியில் உள்ள குடியிருப்பாளர்கள் தமது சுற்றுச் சூழல் கழிவுகளை அகற்ற உதவு மாறு மாநகராட்சி மன்றத்திடம் கோரிக்கை ஒன்றை விடுத்தனர்.

தற்காலிக சுகாதாரத் தொழிலா ளார்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரி நேற்று ஐந்தாவது நாளாகத் தொடர் பணிப்புறக் கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் மாநகரப் பகுதியில் கழிவகற்றம் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன. குறிப்பாக கரையோரப் பகுதி மக்கள் மற்றும் கொழும்புத் துறை, சுண்டுக்குளி, பாசையூர், குருநகர், நாவாந்துறை, வண்ணார்பண்ணை போன்ற பகுதிக் குடியிருப்பாளர்களின் வீட்டுச் சுற்றாடல்களில் கழிவுகள் நிரம்பியுள்ளன.

இந்தக் கழிவுகளை உடன் அகற்றி உதவுமாறு மக்கள் நேரிலும், தொலைபேசி ஊடாகவும் மாநகராட்சி மன்றத்திடம் கோரிக்கை விடுத்து வருகின்றனர். கழிவுகள் அதிகளவில் தேங்கியுள்ளதால் சுகாதாரச் சீர்கேடுகளும் ஏற்பட்டுள்ளன.

கரையோரப் பிரதேசங்களில் கூடுதலான மக்கள் தமது குடியிருப்புப் பகுதியில் கழிவுகள் நிரம்பியதை அடுத்து அவற்றை வீதி ஓரங்களில் கொட்டி வருகின்றனர்.

தமது கோரிக்கைக்கு மாநகர நிர்வாகம் உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டு, தேங்கிய கழிவுகளை அகற்ற உதவு மாறு மக்கள் கேட்டுள்ளனர்.

இது தொடர்பாக மாநகர ஆணையாளரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, குடியிருப்பாளர்கள் தமது பகுதியில் தேங்கிய கழிவுகளை அகற்ற உதவுமாறு கோரிக்கை விடுத்தனர்.

தொழிலாளர்களின் பணிப் புறக்கணிப்பால் உரிய நடவடிக்கையை மேற்கொள்ள முடியாமல் உள்ளது.பணிப் புறக்கணிப்பு தொடர்வதால் மாற்று ஒழுங்குள் தற்காலிகமாக மேற்கொள்ளப்படும் - என்றார்.

(த-17)

## மரண அறிவித்தல்

### திருமதி பிறேமகுமாரி தேவதாஸ்



தென்னமரவாடி திருகோணமலையைப் பிறப்பிடமாகவும், உழுவனூர் தருமபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பிறேமகுமாரி தேவதாஸ் 10.11.2016 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம்-கமலாம்பிகை தம்பதியரின் அன்பு மகளும், கிறிஸ்தோப்பு தேவதாஸின் பாசமிகு மனைவியும், பிரதாப்(பிரான்ஸ்), பிரகாஸ் (பிரான்ஸ்), சகிதா, தனுஸ்கா, டிலக்ஷன் ஆகியோரின் அன்புத் தாயும், கிறிஸ்தோப்பு-றோசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், இராச குமாரி, விசயகுமாரி, உதயகுமாரி, சாந்தகுமாரி, காலஞ்சென்ற சதாசிவம் மற்றும் குமாரகுலசிங்கம், விஜயராசா, உதயராசா, தவராசா ஆகி யோரின் அன்புச் சகோதரியும், யேசுமலர், மரியதாஸ், காலஞ்சென்ற செல்வநாயகம் மற்றும் அல்பிறட் (லண்டன்) சகாயநிர்மலா, யேசுதாஸ் (சவுதி) அமலதாஸ் (சவுதி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (13.11.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, தருமபுரம் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**0773257169**

(K/216) (10.17.19)

## ஐங்கரநேசனுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரியளவிலான நிதி மோசடி விசாரணைப் பிரிவிடம் (எப்.சி.ஐ.டி) முன்வைப்பேன் என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் லிங்கநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசனுக்கு எதிரான நிதி மோசடி குற்றச்சாட்டுத் தொடர்பில் விசாரிக்குமாறு நடப்பாண்டின் இரண்டாம் மாதம் பிரேரணை ஒன்றைச் சபைக்குக் கொண்டு வந்தேன். எனினும் அதனை விசாரிப்பதற்குப் பதிலாக, அவரை காப்பாற்றும் வகையிலான அறிக்கையை முதலமைச்சரும் பகிரங்கமாக விடுத்தார்.

முதலமைச்சரின் விசாரணையின் பெறுபேற்றை எதிர்பார்த்திருந்த எமக்கு, அந்த விசாரணை இடம்பெறுவதே கேள்விக்குறி என்று ஆகிவிட்டது. ஏனெனில் வடக்கு மாகாண அமைச்சரவையை விசாரிக்கும் வகையில் குழு அமைப்பதாகத் தெரிவித்தார். எனினும் முதலமைச்சரையும் உள்ளடக்கியதே அமைச்சரவை. எனவே முதலமைச்சரை விசாரணை செய்யும் குழுவை முதலமைச்சரே தேர்வு செய்யும் சட்ட ஆதிக்கம் கிடையாது என நிறுவ ஆளுநர் முனைகின்றார்.

இதன் காரணமாக முதலமைச்சரால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு இயங்குமா அல்லது இதற்கான அனுமதி கிடைக்குமா என்பது தொடர்பான கேள்வி எழும்நிலையில் இனியும் காத்திராது, விவசாய அமைச்சர் தொடர்பில் என்னிடம் உள்ள குற்ற ஆவணங்களை எதிர்வரும் வாரம் பெரியளவிலான நிதி மோசடி விசாரணைப் பிரிவில் கையளிக்கவுள்ளேன்.

இவ்வாறு மேற்கொள்வதன் மூலமே வடக்கு மாகாண சபையின் ஆட்சிக் காலத்திலேயே அங்கு இடம்பெற்ற மோசடி தொடர்பில் உறுதிப்படுத்த முடியும். அதனை விடுத்து ஆட்சிக்காலம் முழுவதும் கடத்திவிட்டு பின்னர் ஒப்புக்குச் செய்யும் விசாரணைகளில் பயன் கிட்டாது.

இதன் காரணமாக என்னிடம் உள்ள ஆவணங்கள் அனைத்தும் தமிழ் மொழியில் உள்ளமையினால் அவை உடனடியாக மொழிபெயர்க்கப்பட்டு மூலப் பிரதியுடன் மொழிபெயர்ப்பும் கையளிக்கப்படும்– என்றார்.

### பின்னணி

வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மீது நிதி மோசடிகள் தொடர்பில் பதினொரு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு அது தொடர்பில் முதலமைச்சர் விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று, வடக்கு மாகாண சபையில் உறுப்பினர் லிங்கநாதனால் கடந்த பெப்ரவரி மாதம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் முதலமைச்சர் க.வி. விக்னேஸ் வரன் விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டு பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது.

(வ-101)

## மரண அறிவித்தல்

### செல்வி கந்தையா சங்கீதா



முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு 9ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் திரு கோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி கந்தையா சங்கீதா 08.11.2016 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா (பத்தர்)-இராஜேஸ்வரி அம்பாள் தம்பதியரின் அன்பு மகளும், விஜயவிந்தன் (லண்டன்), ஜெயவிந்தன் (லண்டன்), சூரியவிந்தன் (திருகோணமலை), விஜயவிநோதினி (கல்வி அமைச்சு - கிழக்கு மாகாணம்), லோகவிந்தன் (லண்டன்), நிர்மலா (கமநல அபிவிருத்தி திணைக்களம் திருகோணமலை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், முகுந்தன், காலஞ்சென்ற கமலநாதன், புவிபாரதி, ரம்மியா, சுலோசினி, ரஞ்சினி ஆகியோரின் அன்பு மைத்துனியும், உஷாஜிகன் (பேராதனைப்பல்கலைக்கழகம்), தனுஜிகன் (தொழிநுட்பக் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சித்தியும், மிதுரன், ஹவிஷனன் ஆகியோரின் அன்பு பெரியம்மாவும் தருண், ஜொபித்தா, அஜய்யா, அபிசூர், யோச், டன்சிகா (கொழும்பு பல்கலைக்கழகம்), வின்சிகா, ஜினிகிஷன், ரிஷிகா, ஆருஷன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (13.11.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் திருகோணமலையில் உள்ள அவரது சகோதரியின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் இறுதிக்கிரியை நடைபெற்று, அன்புவழிபுரம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**தொடர்புகளுக்கு:**
**நிர்மலா முகுந்தன் (இலங்கை)-**
**தொ.பே:0262224466/ 0779081351**
**விஜயவினோதினி கமலநாதன் (இலங்கை)-0776399358**
**சூரியவிந்தன் (இலங்கை) - 0772946841**
**லோகவிந்தன் (பிரித்தானியா) - +447574827590**
**ஜெயவிந்தன் (பிரித்தானியா) - +447852681178**
**விஜயவிந்தன் (பிரித்தானியா) - +447593976188**

(C/23381)(10.17)

**காணி விற்பனைக்கு**

கொடிகாமம், கச்சாய்வீதி, மருதடி லேனில் 12 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. 6 பரப்பாக பிரித்துக்கொடுக்கப்படும்.

**தொடர்பு: 076 704 9048**

## மரண அறிவித்தல்

### திருமதி செல்வராணி (மணி) காசிநாதன்



கொக்குவில் மேற்கு, மஞ்சவனப்பதி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராணி காசிநாதன் கடந்த (10.11.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவக்கொழுந்து காசிநாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - கனகம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து - வள்ளியம்மை தம்பதி களின் அன்பு மருமகளும், சுதர்சினி (லண்டன்), கெங்காதரன் (சுவிஸ்), சுதாகரன் (யாழ்.மாவட்ட துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளர்), கிருபாகரன் (லண்டன்), பத்ம லோஜினி, மனோகரன் (கனடா), சசிகரன் (உதவிப் பணிப்பாளர் - கைத்தொழில் அபிவிருத்திச்சபை - கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.11.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**

**கா.சுதாகரன்** (மகன் - யா/மாவட்ட துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளர்) - **077 612 4276, கா.சசிகரன்** (உதவிப் பணிப்பாளர் - கைத்தொழில் அபிவிருத்திசபை, கிளிநொச்சி) - **077 881 3176**

மஞ்சவனப்பதி வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாண மரநடுகை மாதம்

“சுவர்மையாகச் செவிமடுத்துக் கொண்டிருக்கும் விண்ணுடன் பேசுவதற்கான மண்ணின் இடையறாத முயற்சிகளே மரங்கள்.”

- இரவீந்திரநாத் தாகூர் (வங்கக் கவிஞர்).

கார்த்திகை
01-30, 2016
“சொந்த மண் சொந்த மரங்கள்”
“ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்”

## கதலிக்குத் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம்,நவ.12
யாழ். குடாநாட்டில் வாழைப் பழத்தின் விலை திடீரென குறைவடைந்தாலும் கூட கதலிப் பழத்துக்குத் தொடர்ந்தும் பற்றாக்குறை உள்ளது. கதலிப்பழக் குலைகள் கூடுதலாகச் சந்தைக்கு வந்து சேராத நிலையில் அவற்றுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. பிரதான சந்தைகளில் அவற்றுக்கு நல்ல கிராக்கி நிலவுகின்றது. குறிப்பாக நீர்வேலி வாழைக்குலை விற்பனைச் சந்தைக்கு வாழைக் குலைகள் தினமும் அதிகளவில் வந்து சேர்கின்றன. அங்கு கதலி வாழைக்குலைகளுக்கே அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளது. கதலிக்குலைகள் இங்கிருந்து தென்பகுதிக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன.
சந்தையில் ஒரு கிலோ கதலி வாழைப்பழம் நாற்பது ரூபாவுக்கு மேல் விற்கப்படுகின்றது.
நீர்வேலி,கோப்பாய், சிறுப்பிட்டி, நவக்கிரி, உரும்பிராய், ஊரெழு, புன்னாலைக்கட்டுவன் போன்ற பகுதிகளில் இருந்தும் விவசாயிகள் இந்தச் சந்தைக்கு வாழைக்குலைகளை எடுத்து வந்து விற்பனை செய்கின்றனர்.
கடந்த மூன்று மாதங்களாகக் குடாநாட்டில் வாழைப்பழத்திற்கு பற்றாக்குறையும் தட்டுப்பாடும் நிலவி வந்தது. இப்போது அது ஓரளவு குறைவடைந்தாலும் கதலிப் பழத்துக்குத் தட்டுப்பாடு உள்ளது. (த-17)

# மோசடி விசாரணை ஆணைக்குழுவில் ஐங்கரநேசனுக்கு எதிராக முறையீடு

### வடக்கு மாகாண ஆளும் கட்சி உறுப்பினர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 12
வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அதற்குரிய ஆதாரங்களை, பெரிய நிதி மோசடி விசாரணைப்பிரிவில்கையளிக்கவுள்ளதாகவடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் தெரிவித்தார்.
இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தாவது:
வடக்கு மார்காண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனுக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு அது தொடர்பில் விசாரணை நடத்தவேண்டும் என்று வடக்கு மாகாண சபையின் அமர்வில் என்னால் பிரேரணை முன்வைக்கப்பட்டது. அந்தப் பிரேரணை மீது நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக, வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், குற்றம் சுமத்தப்பட்ட அமைச்சர் ஐங்கரநேசனைக் காப் பாற்றும் விதத்தில் அறிக்கை வெளியிட் டார். அதற்கு மேலாக மாகாண சபையில் நிறைவேற்றப் பட்ட பிரேரணையை நீர்த்துப்போகச் செய்யும் வகையில் செயற்பட்டார்.
இதன் பின்னர் அமைச்சர் குழாத்தை விசாரிப்பதற்குப் பிரேரணை நிறைவேற்றப்பட்டது. முதலமைச்சரையும் உள்ளடக்கியதே அமைச்சர் குழாம். எனவே முதலமைச்சரையும் விசாரணைக்குட்படுத்தும் - கேள்விக்கு உள்ளாக்கும் குழுவை, முதலமைச்சரே தெரிவு செய்யும் சட்ட ஆதிக்கம் கிடையாது என்று ஆளுநர் கூறுவதற்கு முனைகின்றார்.
இதன் காரணமாக முதலமைச்சர் நியமித்த விசாரணைக் குழு இயங்குமா ? அந்தக் குழுவுக்கு அனுமதி கிடைக்குமா என்ற கேள்விகள் எழுகின்றன. இந்த விசாரணைக் குழுவை நம்பிக் கொண்டிருப்பதில் இனியும் பயனில்லை.
பெரிய நிதி மோசடிகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் என்னிடம் உள்ள ஆதாரங்களைச் சமர்ப்பித்து முறைப்பாடு மேற்கொள்ள இருக்கின்றேன். தற்போதைய மாகாண சபையின் ஆட்சிக் காலத்தினுள்ளேயே, இந்த விசாரணைகள் முடிக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். ஆட்சிக் காலத்தில் இதனை நடத்தாமல் இழுத்தடிப்புச் செய்து பின்னர் விசாரணை நடத்தி நடவடிக்கை எடுப்பதில் பயன் கிடையாது என்றார். (த-5-101)

## கிரவல் மண் அகழ தொடர்ந்தும் தடை

### மன்னார் நீதிவான் உத்தரவு

மன்னார், நவ. 12
மக்களின் எதிர்ப்புக்களைத் தொடர்ந்து கிரவல் மண் அகழ்வுக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை மீண்டும் நீடித்து உத்தரவு வழங்கினார் மன்னார் மாவட்ட நீதிவான் ஏ.ஜீ. அலெக்ஸ்ராஜா.
மன்னார் குஞ்சுக்குளம் பகுதியில் கிரவல் மண் அகழ்வுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை உத்தரவே எதிர்வரும் 17 ஆம் திகதி வரையில் நீடிக்கப்பட்டுள்ளது.
மண் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்ட இடங்களை நீதிவான் நேற்று முன்தினம் நேரில் சென்றும் பார்வையிட்டார்.
மன்னார் மாவட்டத்தின் மடுப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட குஞ்சுக்குளம் பகுதியில் தொடர்ச்சியாக கிரவல் மண் அகழ்வு இடம் பெற்று வருகின்றது. இதனால் அந்தப் பகுதி மக்கள், தாங்கள் பல்வேறு பிரச்சினைகளுக்குமுகம்கொடுத்து வருவதாகத் தெரிவித்து கடந்த 26 ஆம் திகதி கிரவல் மண் ஏற்றிக் கொண்டு வந்த வாகனங்களைமறித்துஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
சம்பவ இடத்துக்குச் சென்ற மடுப் பொலிஸார் அந்தப் பகுதியில் அமைதியின்மை ஏற்பட்டதைக் கருத்தில் கொண்டு மன்னார் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர். விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான், குஞ்சுக் குளம் பகுதியில் தற்காலிகமாக கிரவல் மண் அகழ்வை மேற்கொள்ளத் தடை விதித்திருந்தார்.
மன்னார் நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாக மண் அகழ்வு நடைபெற்ற இடத்துக்கு, திணைக்கள அதிகாரிகள் நேற்று முன்தினம் வந்திருந்தனர். நீதிவானும் நேரில் வந்துபார்வையிட்டிருந்தார். இதன் பின்னர் எதிர்வரும் 17 ஆம் திகதி வரையில் மண் அகழ்வுக்கான தடையை நீடித்து உத்தரவிடப் பட்டுள்ளது. (த-5-56)

## கைதிகளின் விடுதலை கோரி கையெழுத்துப் போர் இன்று

### வடமராட்சியில் நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், நவ.12
சிறையில் இருக்கும் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி இன்று வடமராட்சியின் பல்வேறு பகுதிகளிலும் மாபெரும் கையெழுத்துப் போராட்டம் இடம்பெற உள்ளதாக வடமராட்சி கிறிஸ்தவ ஒன்றியம் தெரிவித்தது.
அரசியற்கைதிகளின் விடுதலை உடனடியாக நடைபெறவேண்டும் என்பதை வலியுறுத்தி இந்தக் கையெழுத்துப்போராட்டம் இடம்பெற உள்ளது. நாளை சனிக்கிழமை காலை 8 மணியில் இருந்து மாலை 4.00 மணி வரை போராட்டம் நடைபெறவுள்ளது.
காலை 8 மணியில் இருந்து 9.00 மணி வரை உடுப்பிட்டிப் பகுதியிலும், காலை 9.00 மணியில் இருந்து முற்பகல் 10.00 மணிவரை வல்வெட்டித்துறைப் பகுதியிலும், முற்பகல் 10.00 மணியில் இருந்து முற்பகல் 11 மணி வரை நெல்லியடிப் பகுதியிலும், முற்பகல் 11.00 மணியில் இருந்து நண்பகல் 12.00 மணிவரை பருத்தித்துறைப் பகுதியிலும், நண்பகல் 12.00 மணியில் இருந்து பிற்பகல் 1.00 மணிவரை மந்திகைப் பகுதியிலும், பிற்பகல் 1.30 மணியில் இருந்து பிற்பகல் 2.30 மணி வரை மருதங்கேணிப் பகுதியிலும், பிற்பகல் 2.30 மணியில் இருந்து மாலை 4.00 மணி வரை குடத்தனைப்பகுதியிலும் இந்த கையெழுத்து போராட்டம் நடைபெறவுள்ளது. எனவே அனைவரையும்தவறாது கலந்து கொண்டு அரசியல் கைதிகளின் விடுதலைக்கான கையெழுத்துக்களை இட்டுச் செல்லுமாறு வடமராட்சி கிறிஸ்தவ ஒன்றியத்தினர் கேட்டுள்ளனர். (த-7)

## மாகாண சபைக்குள் அனுமதியின்றி புகுந்த பெண்ணால் பரபரப்பு

யாழ்ப்பாணம், நவ.12
வடக்கு மாகாண சபை கட்ட டத்துக்குள் அனுமதியின்றி உள்நுழைந்த வயோதிபப் பெண்ணால் சபையில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.
வடக்கு மாகாண சபையின் 65 ஆவது அமர்வு கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்றது.
சபையின் தேநீர் இடைவேளைக்காக உறுப்பினர்கள் சபை மண்டபத்திலிருந்து வெளியே வருகை தந்தனர். இதன்போது சபா மண்டபத்தின் வாயிலை நோக்கி வயோதிபப் பெண் ஒருவர் விரைந்தார். சில துண்டுப்பிரசுரங்களைக் காட்டி வடக்கு மாகாண சபை உறுப்பினர்களிடம் கருத்துக்களைத் தெரிவித்தார்.
இதனைச் சற்றும் எதிர்பார்க்காத சபையின் உறுப்பினர்கள் என்ன செய்வதென்றறியாது திக்குமுக்காடி நின்றனர். சில உறுப்பினர்கள் குறித்த துண்டுப் பிரசுரங்களை வாங்கிப் பார்வையிட்டனர்.



ஐக்கிய நாடுகள் சபையினால் அறிமுகப் படுத்தப்பட்ட உலக மாற்றத்துக்கான பதினேழு இலக்குகள் என்ற விடயம் அந்த துண்டுப்பிரசுரங்களில் இருந்தது. எனினும் அனுமதியின்றி உள்ளே நுழைந்தது தவறு எனத் தெரிவித்துக் காவலாளியின் உதவியுடன் அந்த வயோதிபப் பெண் சபை மண்டபத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்.
'நான் ஓய்வு பெற்ற ஆசிரியை. பிரிட்டன் குடியுரிமையைப் பெற்று இரட்டைப் பிரஜாவுரிமையைப் பெற்றுள்ளேன். எனது பிள்ளைகள் பிரிட்டனில் வசித்து வருகின்றனர். நான் கொண்டு வந்த துண்டு பிரசுரங்களை மாகாண சபை உறுப்பினர்களிடம் காண்பித்து இது ஐ.நா. சபையினால் அறிமுகப்படுத்தப் பட்ட உலக மாற்றத்திற்கான பதினேழு இலக்குகள். இதை அதிகாரிகளோ அல்லது அரசியல் வாதிகளோ பின்பற்றுவதில்லை எனத் தெரிவித்தேன்.' என்று அந்தப் பெண் கூறினார்.
தேநீர் இடைவேளையின் பின்னர் வட மாகாண சபையின் நடவடிக்கைகள் ஆரம் பிக்கப்பட்டன.
அவைத்தலைவர் சிவஞானம் சமீப காலமாக முன் அனுமதியின்றி வடக்கு மாகாண சபைக்குள் வெளியாள்கள் நடமாடுகின்றனர். அத்துடன் பார்வையாளர் பகுதிக்கும் சில சந்தர்ப்பங்களில் முன் அனுமதி பெறாமல் வந்து போகின்றனர். எனவே இது தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.-என்றார். (த-21,8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர் குடியேற்ற முயற்சி குறித்து அடுத்தவாரம் பேச்சு

மன்னார், நவ.12
மன்னார், முள்ளிக்குளம் காயாக்குழி பிரதேசத்தில் மீன்பிடியில் ஈடுபடும் தென்னிலங்கை மீனவர்கள் அங்கு நிரந்தரமாகக் குடியேறுவது தொடர்பாக இரு தரப்பு மீனவர்களுடன் எதிர்வரும் 16 ஆம் திகதி பேச்சு நடத்தப்படும். இவ்வாறு மன்னார் மீனவர்களிடம் உறுதியளித்தார் மீன்பிடித் துறை அமைச்சர் மகிந்த அமரவீர.

மன்னார், முள்ளிக்குளம் காயாக்குழி பிரதேசத்தில் மீன்பிடியில் ஈடுபடும் தென்னிலங்கை மீனவர்கள் அங்கு நிரந்தரமாகக் குடியேறுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து மன்னார் மீனவர்கள் மீன்பிடி அமைச்சர் மகிந்த அமரவீரவைச் சந்தித்து முறைப்பாடு செய்தனர்.

இந்த சந்திப்பு நேற்றுக் காலை 11 மணிக்கு கொழும்பு மாளிகாவத்தையில் அமைந்துள்ள மீன்பிடி அமைச்சு அலுவலகத்தில் இடம்பெற்றது.

மன்னார் – முள்ளிக்குளம் காயாக்குழி பிரதேசத்தில் அண்மைக் காலமாக மீன்பிடியில் ஈடுபடும் தென்னிலங்கை மீனவர்கள் கடந்த வியாழக்கிழமை அதிகாலை நான்கு படகுகளில் வந்து அந்தப் பிரதேசத்தில் அத்துமீறிக் குடியேற முயச்சித்தனர். இந்த நிலையில் மன்னார் மீனவர்கள் தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்பாக பொலிஸாரிடம் முறைப்பாடு செய்தனர். இருதரப்பினரையும் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்த பொலிஸார், அவர்களுடன் பேச்சு நடத்தினர். எனினும் இந்தப் பேச்சு இணக்கப்பாடு இன்றி முடிவடைந்தது. இதனால் இரண்டு தரப்பினருக்கும் குறித்த பகுதியில் மீன்பிடிப்பதற்கு சிலாவத்துறை பொலிஸார் தடை விதித்தனர். இந்த நிலையிலேயே குறித்த விடயம் தொடர்பாக மன்னார் மீனவர்கள் ஒரு குழுவாக நேற்று மீன்பிடித்துறை அமைச்சர் மகிந்த அமரவீரவை சந்தித்து முறைப்பாடு செய்தனர்.

அமைச்சருக்கும் மன்னார் மீனவர் சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையே இடம்பெற்ற சந்திப்பின் போது பிரதி அமைச்சர்களான அமீர் அலி, பைசல் காசிம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக், முசலிப் பிரதேச மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

'மீனவர் சங்க பிரதிநிதிகளின் கருத்துக்களைக் கேட்டறிந்து கொண்ட அமைச்சர் மகிந்த அமரவீர, இந்தப் பிரச்சினை இரண்டு சமூக மீனவர்களுக்கு இடையே எழுந்துள்ளதால், இதனை மிகவும் கவனமாகக் கையாள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். இது தொடர்பாக நீர்கொழும்பில் உள்ள மீனவர் சங்கத் தலைவருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட அமைச்சர், விடயங்களைக் கூறியதுடன், குறித்த மீனவர் சங்கப் பிரதிநிதிகளையும், முசலி மீனவர் சங்கப் பிரதிநிதிகளையும், எதிர்வரும் 16ஆம் திகதி புதன்கிழமை கொழும்பில் பேச்சு ஒன்றுக்கு அழைத்தார் என்று சந்திப்பில் கலந்து கொண்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக் தெரிவித்தார்.

இதேவேளை, தமது பிரதேசத்தில் தென்னிலங்கையைச் சேர்ந்த மீனவர்கள் பருவகாலத்தில் மீன்பிடியில் ஈடுபடலாம் என்று கூறிய மன்னார் மீனவர் சமாசத்தின் தலைவர் முகமட் ஆலம், தென்னிலங்கை மீனவர்களைத் தமது பிரதேசத்தில் நிரந்தரமாகக் குடியமர்வதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது என்று திட்டவட்டமாகத் தெரிவித்தார். (வ-21)

## 'மழலைகளுடன் மகிழ்வோம்' சிறுவர் நிகழ்வு

கரணவாய், நவ.12
அண்ணாசிலையடி வள்ளுவர் முன்பள்ளியும் செல்வாபுரம் இளங்கோ முன்பள்ளியும் இணைந்து நடத்தும் 'மழலைகளுடன் மகிழ்வோம்' நிகழ்வு இன்று பிற்பகல் 2.30 மணிக்கு கரணவாய் மணியகாரன் தோட்டம் அ.த.க பாடசாலை மைதானத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

அண்ணாசிலையடி வள்ளுவர் சனசமூக நிலையத் தலைவர் மு.மகேந்திரன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் குருகுலராசாவும் சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண உறுப்பினர்களான வே. சிவயோகன், அ. பரஞ்சோதி, க. தர்மலிங்கம், சி.அகிலதாஸ், ச.சுகிர்தன் மற்றும் எம். கே. சிவாஜிலிங்கம் ஆகியோர் கலந்துகொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-108)

## கவிதைப் பயிலரங்கு

யாழ்ப்பாணம், நவ.12
வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் காரைநகர் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் கவிதைப் பயிலரங்கும் கலந்துரையாடலும் நாளை இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

காரைநகர் கலாசார மண்டபத்தில் காலை 8.30 ஆரம்பமாகும் இந்த நிகழ்வில் பிரபல தமிழ்க் கவிஞர் ஆ.சடாகோபன் (நிலாக்கீற்றன்), ஆசிரிய ஆலோசகரும் கவிஞருமான க.சிவகரன் ஆகியோர் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கவிதைப் பயிலரங்கில் கவிஞர்கள், எழுத்தாளர்கள், மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (வ-எ)

## அமைதி வேண்டி 24 மணிநேரம் தொழுகை

யாழ்ப்பாணம், நவ. 12
உலகம் முழுவதும் அமைதியும் சாந்தியும் நிலவ வேண்டி யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்திய சேவா நிலையத்தினால் 24 மணி நேரத் தொழுகை நிகழ்வு இன்று இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

185 நாடுகளிலுமுள்ள பல்லாயிரக்கணக்கான சாயி நிலையங்களில் இன்று காலை 6.00 மணியில் இருந்து 24 மணி நேரம் உலக அமைதி வேண்டித் தொழுகை நடத்த பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா அருள் வாக்கு வழங்கினார்.

இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ்ப்பாணம், சேர். பொன். இராமநாதன் வீதியில் அமைந்துள்ள பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (வ-7)

# வினாத்தாளை வெளியிட்டது யார்?

## விசாரணையை ஆரம்பித்தது வடக்கு கல்வி அமைச்சு

யாழ்ப்பாணம், நவ.12
வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்படும் ஜி.சீ.ஈ சாதரணதர மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சையின் வரலாறுப் பாட வினாத்தாள் முல்லைத்தீவு பாடசாலையில் முன்கூட்டியே வெளியிட்டவர் தொடர்பில் முழுமையான விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு தெரிவித்தது.

இது தொடர்பில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இரவீந்திரன் தெரிவித்ததாவது:
வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்படும் ஜி.சீ.ஈ சாதாரண தர மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சையின் வரலாறுப் பாட வினாத்தாள் முல்லைத்தீவு மாவட்டத்தின் பாடசாலையில் மட்டும் முன்கூட்டியே வெளியானது. இது தொடர்பில் கடந்த மாகாண சபை அமர்வில் சுட்டிக்காட்டப்பட்டது. இதனால் இந்த விடயம் தொடர்பில் உடனடியாக முழுமையான விசாரணை மேற்கொண்டு அறிக்கை முன்வைக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தவறுக்கு யார் பொறுப்பாளி எனக் கண்டறியப்படுவதற்காக உடனடியாக சகல தரப்புக்களிடமும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. விசாரணை அறிக்கை வடக்கு மாகாணக் கல்வி அமைச்சுக்கு விரைவில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அவ்வாறு கிடைக்கும் அறிக்கையில் மேற்படி தவறுக்கு யார் பொறுப்பாளி எனக் கண்டறியப்படுகின்றதோ, அவரே இந்த வினாத்தாள் அச்சிட்ட செலவையும் முழுமையாகச் செலுத்தும் நிலை ஏற்படும் – என்றார். (வ-101)

## ஓய்வுநிலை பேராசான்களை கௌரவிக்கும் நிகழ்வு நாளை

யாழ்ப்பாணம், நவ. 12
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொருளியல்துறையின் ஏற்பாட்டில் பல்கலைக்கழகத்தில் கடமையாற்றி இளைப்பாறிய பேராசான்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை பி.ப. 2 மணிக்கு திருநெல்வேலி சிவகாமி மஹால் மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

பொருளியல்துறை முதுநிலை விரிவுரையாளர் எஸ்.எஸ்.உதயகுமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முன்னாள் பொருளியல்துறை பீடாதிபதி பேராசிரியர் ப.சிவநாதன், வவுனியா வளாக முன்னாள் முதல்வரும் ஓய்வுநிலை பொருளியல் பேராசிரியருமான இ.நந்தகுமார், முன்னாள் பொருளியல்துறை தலைவரும் ஓய்வுநிலை முதுநிலைப் பேராசிரியருமான ந.பேரின்பநாதன் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரத்தினமும் சிறப்பு விருந்தினர்களாக வவுனியா வளாக முதல்வர் கலாநிதி த.மங்களேஸ்வரன், யாழ். பல்கலைக்கழக பதில் கலைப் பீடாதிபதி க.சுதாகர், பொருளியல்துறை பதில் தலைவர் விரிவுரையாளர் திருமதி ஜெசிதா ரவி சங்கர் ஆகியோரும் கலந்து கொள்வர் என்று அறிவிக்கப்பட்டது. (வ -9)

வவுனியா மாவட்டத்தில்

## 13 லட்சம் லீற்றர் மதுபானம் 10 மாதங்களில் விற்பனை

வவுனியா மாவட்டத்தில் கடந்த 10 மாதங்களில் 13 லட்சத்து 28 ஆயிரத்து 505 லீற்றர் மதுபாணங்கள் விற்பனையாகியுள்ளதாக மாவட்ட மதுவரித் திணைக்களம் தெரிவித்தது.

வவுனியா மாவட்டத்தில் இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஒக்ரோபர் மாதம் வரையிலான காலப்பகுதியிலேயே குறித்த அளவு மதுபானங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

6 லட்சத்து 67 ஆயிரத்து 34 லீற்றர் பியர் வகைகளும், 6 லட்சத்து 42 ஆயிரத்து 125 லீற்றர் உள்நாட்டு சாராய வகைகளும், 3 ஆயிரத்து 761 லீற்றர் பிஸ்கி வகைகளும், 9 ஆயிரத்து 689 லீற்றர் பிறண்டி வகைகளும், 3 ஆயிரத்து 42 லீற்றர் ஜின் வகைகளும், ஆயிரத்து 143 லீற்றர் ரம் வகைகளும், 827 லீற்றர் வொட்கா வகைகளும், 884 லீற்றர் வைன் வகைகளும் விற்பனையாகியுள்ளன என்று மதுவரித் திணைக்களம் தெரிவித்தது. மதுவரித்திணைக் களத்தினுடைய தகவலின் படி பியர் வகைகளே அதிகமாக விற்பனையாகியுள்ளன. (வ-21)

## பணிப்புறக்கணிப்புக்கு ஆதரவு வழங்கும் கூட்டம்

யாழ்ப்பாணம், நவ.12
யாழ்.மாநகர சுகாதார தொழிலாளர்களின் பணிப்புறக் கணிப்புப் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கும் கூட்டம் நாளை மறுதினம் மாலை 4 மணிக்கு இல. 361 ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள டி.எம்.ஐ. கல்வி நிறுவனத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. (வ-எ)

## சான்றிதழ் வழங்கல்

யாழ்ப்பாணம், நவ.12
இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையினால் கிளிநொச்சி மாவட்டத்தில் தேசிய கற்கை நெறிகளை நிறைவுசெய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளை காலை 10 மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் உதவிப் பணிப்பாளர் இரா.அகிலன் தலைமையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. (வ-எ)

## ஐந்தாவது ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம் ,நவ.12
கொக்குவில் கிருஷ்ணா அறநெறிப் பாடசாலையின் ஐந்தாவது ஆண்டு நிறைவு விழா நிகழ்வு நாளை காலை 9.30 மணிக்கு பாடசாலையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் ஆ.நடராஜனும் சிறப்புவிருந்தினர்களாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா ஆகியோரும் கலந்து கொள்வர் என்று அறிவிக்கப்பட்டது. (வ)

## பட்ஜெட் குறித்து ஆராயும் கூட்டம்

2017ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் தொடர்பில் ஆராயும் கருத்தரங்கு யாழ்ப்பாணம் வணிகர் சங்கத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை, மின்சார நிலைய வீதியில் அமைந்துள்ள எச்.என்.பி மெற்றோ கேட்போர் கூடத்தில் காலை 10 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. (வ-எ)

## பரிசளிப்பு விழா

யாழ். இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு வைபவமும், சக்தி சஞ்சிகை வெளியீடும் நாளை மறுதினம், காலை 9 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

கல்லூரியின் விசாலாட்சி மண்டபத்தில் அதிபர் திருமதி.எம்.விமலநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண வலயக் கல்வி பணிப்பாளர் ந. தெய்வேந்திரராஜா கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-எ)

## அன்பொளியின் பரிசளிப்பு இன்று

யாழ்ப்பாணம் அன்பொளி கல்வியகத்தில் பயின்று கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா இன்று பி.ப. 2 மணிக்கு நாச்சிமார் கோவிலடி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப் பட்டது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு அரச நிர்வாகத்தில் 355 வெற்றிடங்கள்

## ஆளணிப் பற்றாக்குறையுடன் மாவட்ட நிர்வாக இயந்திரம்

முல்லைத்தீவு, நவ. 12
முல்லைத்தீவு மாவட்டத்தில் அரச நிர்வாகங்களில் 1,099 பணியாளர்கள் இருக்கவேண்டிய நிலையில் தற்போது 744 பணியாளர்களே கடமையாற்றுகின்றனர். இதனால் 355 பணியாளர்களுக்கு வெற்றிடம் நிலவுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
முல்லைத்தீவு மாவட்டத்தின்கீழ் உள்ள பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்டச் செயலகம் என்பவற்றிலேயே குறித்த பணியாளர்கள் வெற்றிடம் நிலவுவதாகக் கூறப்பட்டது.
இதன் பிரகாரம் மாவட்டச் செயலகத்தில் 203 பணியாளர்கள் பணிபுரிய வேண்டிய இடத்தில் 133 பணியாளர்களே சேவையில் உள்ளனர். மாவட்டச் செயலகத்தில் மட்டும் 70 பணியாளர்கள் வெற்றிடம் உள்ளது.
மாந்தை கிழக்குப் பிரதேச செயலகத்தில் 144 பணியாளர்கள் தேவையானபோதும், 67 பணியாளர்கள் மட்டுமே சேவையில் உள்ளனர். இங்கு 77 பணியாளர் வெற்றிடம் உள்ளது. கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் 265 பணியாளர்கள் தேவையானபோதும் 202 பேர் மட்டுமே சேவையில் உள்ளனர் . இதனால் இங்கு 63 பணியாளர்களுக்கு வெற்றிடம் நிலவுகின்றது.
அதே போல் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் 210 பணியாளர்கள் தேவையானபோதும் 149 பணியாளர்கள் மட்டுமே சேவையில் உள்ளனர். இதனால் இங்கும் 61 பணியாளர் வெற்றிடம் நிலவுகின்றது.
ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்துக்கு 147 பணியாளர்கள் தேவையானபோதும், 98 பணியாளர்கள் மட்டுமே பணியில் உள்ளமையினால் 49 பணியாளர்கள் வெற்றிடமாகவே உள்ளது. துணுக்காய் பிரதேச செயலகத்தின் பணிக்கு 130 பணியாளர் தேவையாகவுள்ளபோதும் 95 பணியாளர்களே பணியாற்றுவதால் 35 பணியாளர்களுக்கான வெற்றிடம் நிலவுகின்றது.
இதன் பிரகாரம் முல்லைத்தீவு மாவட்டத்தில் மொத்தம் 1099 பணியாளர்கள் தேவையாகவுள்ள நிலையில் 744 பணியாளர்களே சேவையாற்றுகின்றனர். 355 பணியாளர்களுக்கான ஆளணிப் பற்றாக்குறையுடனே மாவட்ட நிர்வாக இயந்திரம் நகர்கின்றமை சுட்டிக்காட்டப்பட்டது. (த-101)



# முன்பள்ளிக் கட்டடம் அறிவியல்நகரில் திறப்பு

கிளிநொச்சி, நவ.12
மாஸ் அக்டிவ் ஆடைத் தொழிற்சாலையால் 25 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட முன்பள்ளி கட்டடம் கரைச்சிப் பிரதேச செயலாளரினால் திறந்து வைக்கப்பட்டது.
கிளிநொச்சி அறிவியல்நகர் கிராமத்தில் அமைக்கப்பட்ட இந்த முன்பள்ளிக் கட்டடத் திறப்பு விழாவின்போது சிறார்களுடைய பாண்ட் இசை அணி வகுப்புக்கள் மற்றும் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (த-35)

# இனவாதக் கொள்கையில் வடக்கு அரசியல்வாதிகள்

## பிரதியமைச்சர் அருந்திக சாடல்




கொழும்பு, நவ. 12
வடக்கு மாகாண அரசியல்வாதிகள், இனவாதக் கொள்கைகளில் இருந்து இன்னமும் மாறவில்லை என, சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் பிரதியமைச்சர் அருந்திக பெர்னாண்டோ தெரிவித்தார்.
கொழும்பில், நேற்றுமுன் தினம் வியாழக்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், சிவாஜிலிங்கம் போன்ற அரசியல்வாதிகளே இவ்வாறு இனவாதத்தைக் கையாண்டு வருகிறார்கள் எனச் சுட்டிக்காட்டினார்.
அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில், ஹிலாரி கிளிண்டன் வெற்றியீட்ட வேண்டும் என்பதற்காக, சிவாஜிலிங்கம், தேங்காய் உடைத்து வழிபாடுகளை மேற்கொண்டிருந்தார். அதனால் தான் அவர், தேர்தலில் தோல்வியடைந்தார் என்றும் பிரதியமைச்சர் தெரிவித்தார். (து)

# தேநீர் விருந்தை புறக்கணித்த மகிந்த அணி

கொழும்பு, நவ. 12
வரவு-செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்டதன் பின்னர் நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற வழமையான தேநீர் விருந்துபசாரத்தில் கூட்டு எதிர்க் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும், மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர்களும் கலந்துகொள்ளவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது. (து)

# வரவு-செலவுத் திட்டத்தில் அனைவருக்கும் நலன்கள்

## மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு



கொழும்பு, நவ. 12
அனைத்துச் சமூகங்களுக்கும் நலன்களை வழங்கும் வகையில் வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டதாக மத்திய வங்கியின் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
கல்வி மற்றும் பயிற்சி நடவடிக்கைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது. இது மிகவும் அவசியமானது.
நாட்டின் அனைத்து தரப்பினரையும் அனைத்து துறைகளையும் பற்றி கவனம் செலுத்தி வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டமையே இதன் சிறப்பம்சம்-என்றார். (து)

# மலையக தொழிலாளர்களுக்கு அரை ஏக்கர் தேயிலைக் காணி

## தனிச் சிங்களத்தில் நிபந்தனைகள்

பதுளை, நவ.12
பதுளை மாவட்டத்திலுள்ள பெருந்தோட்டங்களின் ஒருபகுதியை, தொழிலாளர் குடும்பங்களுக்கு குத்தகை அடிப்படையில் பிரித்துக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.
மல்வத்தவெளி பெருந்தோட்ட நிறுவனத்தின் பொறுப்பிலிருக்கும் தோட்டங்கள் ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளர்களுக்கு அரை ஏக்கர் வீதம் குத்தகைக்குப் பிரித்துக் கொடுக்கப்படவுள்ளன.
இதற்கென, மேற்படி பெருந்தோட்ட நிறுவனத்தின் கடிதத் தலைப்பில் 24 கடின நிபந்தனைகளை விதித்து பத்திரம் தயாரிக்கப்பட்டதாகவும், அந்தப் பத்திரம் தனிச் சிங்கள மொழியில் காணப்படுவதால் ஒப்பந்த விதிமுறைகளை தம்மால் முழுமையாகப் புரிந்துகொள்ள முடியவில்லை எனவும் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.
நிபந்தனைகளில் சில பின்வருமாறு:
தோட்டங்களில் நிரந்தரத் தொழிலாளர்களாக இருக்கும் கணவன், மனைவி பெயரில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும்.
வழங்கப்படும் தேயிலைக் காணியின் மேற்பார்வை தோட்ட முகாமைத்துவத்தையே சாரும்.
மூன்றாம் தரப்பினரால் தோட்டங்களில் பாதிப்பு ஏற்பட்டிருக்குமேயானால் அதற்கான இழப்பீடுகளை தொழிலாளர் குடும்பத்தினர் தோட்ட முகாமைத்துவத்துக்கு செலுத்தவேண்டும். தேயிலைக் காணிகளை குறிப்பிட்ட தொழிலாளர்களுக்கு மட்டுமே வழங்க வேண்டும்.
குறிப்பிட்ட தேயிலைக் காணியில் நிரந்தர மற்றும் தற்காலிகக் கட்டடங்கள் அமைப்பது தடைசெய்யப்பட்டது.
ஒப்பந்தப்படி வழங்கப்படும் தேயிலைக் காணியில் தொழில் செய்யும் தொழிலாளர் குடும்பத்தினருக்கு ஊழியர் சேமலாபநிதி, ஊழியர் நம்பிக்கை நிதி, ஊக்குவிப்பு நிதி உள்ளிட்ட ஏனைய எந்தவொரு கொடுப்பனவும் வழங்கப்படமாட்டாது.
ஆறுமாத காலத்துக்கு மட்டுமே ஒப்பந்தம் செல்லுபடியாகும். அதன்பிறகு தோட்ட முகாமைத்துவம் விரும்பின் ஒப்பந்தம் புதுப்பிக்க வாய்ப்புண்டு.
இவை போன்ற கடின நிபந்தனைகளைக் கொண்டதாகவே ஒப்பந்த பத்திரம் அமைந்துள்ளது.
இது தொடர்பாக, விவசாய தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆர்.எம்.கிருஷ்ணசாமி தெரிவிக்கையில்,
மல்வத்த வெளி பெருந்தோட்ட நிறுவனத்தின் மூலம் தொழிலாளர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு தோட்டக் காணி வழங்கும் திட்டம் மோசமான செயலாகும். இதன் மூலமும் தோட்டத் தொழிலாளர்கள் பாதிக்கப்படுவர். இவர்களுக்கு விளங்காத மொழியில் நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்டு, சூட்சுமமான முறையில் தொழிலாளர்களிடம் கையொப்பங்கள் பெறப்படவுள்ளன. இதற்கு பலத்த கண்டனத்தை தெரிவிக்கின்றோம். இது தொடர்பாக, பதுளை உதவித் தொழில் ஆணையாளருடன் எதிர்வரும் 18ஆம் திகதி பேச்சு ஒன்றை எமது அமைப்பு மேற்கொள்ளவுள்ளது - என்றார். (த-ய-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறைகேடான அனுமதியால் 4 பேரின் வழித் தடம் இரத்து

## வடக்கு மாகாணப் போக்குவரத்து அமைச்சு அதிரடி நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ. 12
வடக்கு மாகாணத்தில் முறைகேடான வழி அனுமதிப் பத்திரங்களை வைத்திருந்து வேறு நபர்களுக்கு கைமாற்றிய நான்கு பேரினுடைய வழித் தட அனுமதிப் பத்திரம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. வடக்கு மாகாண போக்குவரத்து அதிகார சபை உருவாக்கிய பின்னர் அதிரடியாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது,

வடக்கு மாகாணப் போக்குவரத்து அமைச்சரின் மன்னார் அலுவலகத்தில் கடந்த 9ஆம் திகதி புதன் கிழமை சிறப்பு விசாரணை நடைபெற்றது.

வடக்கு மாகாண பயணிகள் போக்கு வரத்து அதிகார சபையின் தலைவர் அ.நிக்கொலஸ்பிள்ளை, வட இலங்கை தனியார் பேருந்து சங்கங்களின் ஒன்றியத்தின் தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகியோரும் ஐந்து மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர்களது சங்கங்களின் தலைவர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

வடக்கின் 5 மாவட்டங்களிலும் இருந்து பிரச்சினைகள் உள்ள உரிமையாளர்கள் விசாரணைக்கு வருகை தந்தனர். தமது பிரச்சினைகள் தொடர்பில் அமைச்சருடன் கலந்துரையாடினர். அங்கு இடம்பெற்ற விசாரணைகளின்போது பல உரிமையாளர்கள் தமது அனுமதிப் பத்திரங்களைச் சட்டமுரணாக நீண்ட காலம் வேறு நபர்களுக்குக் கொடுத்திருந்தமையும், பலர் வழி அனுமதிப் பத்திரங்களை விற்பனை செய்திருந்தமையும் தெரிய வந்துள்ளது. பிணக்குகள் உரிய முறையில் விசாரணை செய்யப்பட்டு பெரிய முறைகேடுகள் செய்தவர்களது வழி அனுமதிப் பத்திரங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. புதுப்பிக்கப்பட வேண்டியிருந்த பல அனுமதிப் பத்திரங்கள் புதுப்பித்துக் கொடுக்கப்பட்டன.

இதன்போது போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன், மேற்படி அதிரடி நடவடிக்கையினால் இன்னும் பல வருடங்களுக்குப் பிரச்சினை இல்லாது போக்குவரத்தைக் கொண்டு செல்ல முடியும். அதேநேரம் உரிமையாளர்களும் நிம்மதியுடன் தமது சேவைகளை மக்களுக்கு வழங்க முடியும். இனிமேல் போக்குவரத்து அனுமதிப் பத்திரம் வைத்திருப்போர் மட்டுமே தனியார் போக்குவரத்து சங்கங்களில் அங்கத்தவர்களாக இருக்கமுடியும். தேவையற்ற பிரச்சினைகள் எழுவதற்கு வாய்ப்புக்கள் இருக்காது. எவரும் சட்டமுரணாக வழி அனுமதிப் பத்திரத்தை மற்றவர்களுக்கு இனிமேல் விற்பனை செய்வார்களாயின் எவ்வித முன்னறிவித்தலும் இன்றி அனுமதிப் பத்திரங்கள் இரத்துச் செய்யப்படும் - என்றார். (த-5)

## 3 மணி நேரம் பட்ஜெட் உரை

கொழும்பு, நவ. 12
தேசிய அரசின் 2017 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட உரையை நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க சுமார் 3 மணிநேரம் நிகழ்த்தினார்.

நாடாளுமன்றம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் பிற்பகல் 2 மணிக்கு கூடியது. இதையடுத்து, நாட்டின் 71 ஆவது வரவு- செலவுத் திட்டத்தை 20 ஆவது நிதி அமைச்சர் என்ற வகையில் சமர்ப்பித்தார் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க. இது தேசிய அரசின் இரண்டாவது வரவு-செலவுத்திட்டமாகும்.

பிற்பகல் 2 மணிக்கு தனது வரவு-செலவுத் திட்ட உரையை ஆரம்பித்த நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க மாலை 5 மணிவரை நிகழ்த்தினார்.

வரவு-செலவுத் திட்ட உரையை உள்ளடக்கிய கறுப்பு பெட்டியுடன் சபைக்குள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க வந்த போது அரச தரப்பினர் மேசைகளில் தட்டி வரவேற்ற அதே வேளை, மகிந்த ஆதரவு பொது எதிரணியினர் கோசமிட்டனர்.

இதேபோன்று நிதி அமைச்சரின் உரைக்கு இடையிடையே இடையூறுகளையும் ஏற்படுத்திக்கொண்டிருந்தனர். இதே வேளை முன்மொழிவுகளை முன்வைத்தபோது, ஆளுந் தரப்பினர் மேசையில் தட்டி வரவேற்றனர். (த)

## தங்கூசி வலையுடன் ஒருவர் கைது

திருமலை, நவ.12
கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குறிஞ்சாங்கேணி பகுதியில் சட்டவிரோதமாக விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த 298 கிலோ தங்கூசி மீன்பிடி வலைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் மாலை விற்பனை நிலையமொன்றில் சோதனைகளை மேற்கொண்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் கிண்ணியா பொலிஸாரின் உதவியுடன் மேற்படி வலைகளைக் கைப்பற்றியுள்ளனர். சம்பவம் தொடர்பில் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார். (த-ய-45)



## லஞ்ச ஆணைக்குழுவுக்கு புதிய பணிப்பாளர் நாயகம்

கொழும்பு, நவ. 12
லஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் புதிய பணிப்பாளர் நாயகமாக ஜனாதிபதி சட்டத்தரணி சரத் ஜயமான்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடமிருந்து இதற்கான நியமனக் கடிதத்தை அவர் பெற்றுக் கொண்டார். நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை, ஜனாதிபதி செயலகத்தில் வைத்து இந்த நியமனக் கடிதம் வழங்கப்பட்டது.

கடந்த 25 வருடங்களாக, சட்டமா அதிபர் அலுவலகத்தில் சேவையாற்றிய சரத் ஜய மான்ன, புதிய பணிப்பாளர் நாயகமாக பதவியேற்க முன்னர், சட்டமா அதிபர் திணைக்களத்தில் மேலதிக சொலிஸ்டர் ஜெனரலாகப் பதவி வகித்தார்.

தடயவியல் விஞ்ஞானம் தொடர்பான பட்டப் படிப்பை, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் மேற்கொண்ட இவர், ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் முதுகலை மாணிப் பட்டத்தை மேற் கொண்டார். (தி)

## டிரானுக்கு பிணை

கொழும்பு, நவ. 12
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ் உட்பட மூவரை 5 இலட்சம் ரூபாய் ரொக்க பிணையிலும் 25 இலட்சம் ரூபா 4 சரீரப் பிணையிலும் விடுவிக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.



ராடா நிறுவனத்தின் ஊடாக அரச நிதியை தவறாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டின் பேரில், டிரான் அலஸ் உள்ளிட்ட மூவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், இன்று பிணையில் விடுதலை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

## ஞாயிறு தினங்களில் இனி தனியார் வகுப்புக்குத் தடை

பதுளை, நவ.12
2017ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியுடன் ஞாயிறு தினங்களில் தனியார் மேலதிக வகுப்புகளை நடத்துவது ஊவா மாகாண சபையினால் தடை செய்யப்பட்டுள்ளது.

அன்றைதினம் தொடக்கம் மாகாணத்திலுள்ள அனைத்து அறநெறிப் பாடசாலைகளையும் முழுமையாக நடத்துமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஊவா மாகாணசபையின் அமர்வு சபைத் தலைவர் ஏ.எம். புத்ததாச தலைமையில் நேற்று முன் தினம் நடைபெற்ற வேளையில் மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க மேற்படி விடயம் தொடர்பான பிரேரணையொன்றை முன்வைத்து உரையாற்றினார்.

பிரேரணை ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் பூரண ஆதரவுடன் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (த-ய-41)

## சிறுநீரக மோசடி விவகாரம்: தப்பிய இந்தியர்கள் சிக்கினர்

கொழும்பு, நவ. 12
இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சிறுநீரக மோசடி வியாபாரத்தில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டின் பேரில், கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தின் உத்தரவின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், தப்பிச்சென்ற இந்தியர்கள் ஏழு பேரில் ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மிரிஹான தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்தியர்களே இவ்வாறு செவ்வாய்க்கிழமை தப்பிச் சென்றதாகக் கொழும்பு விளக்கமறியல் சிறைக் காவலர், கொழும்பு பிரதான நீதிவான் கிஹான் பிலப்பிட்டியவின் கவனத்துக்குக் கொண்டுவந்திருந்தார்.

இந்த நிலையில் மன்னார் பேசாலைப் பிரதேசத்தில் வைத்து இவர்கள் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பேசாலைப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து, இந்தியா நோக்கிப் புறப்படத் தயாராக இருந்த நிலையில் பேசாலை கடற்பரப்பில் வைத்து இவர்கள் கைது செய் யப்பட்டுள்ளனர்.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சிறுநீரக வியாபாரத்தில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் கீழ், கொழும்பு, வெள்ளவத்தை பிரதேசத்தில் வைத்து இந்தியர்கள் எட்டுப் பேர் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களில் அறுவரது சிறுநீரகங்களே அகற்றப்பட்டுள்ளன என்று சோதனைகளின் போது தெரிய வந்துள்ளதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரைச்சிப் பிரதேச பொதுநூலகத்தின் பரிசளிப்பு விழா

கிளிநொச்சி, நவ.12

கரைச்சிப் பிரதேச சபைப் பொதுநூலகத்தின் பரிசளிப்பு விழா கடந்த செவ்வாய்க் கிழமை சிறப்பாக நடைபெற்றது.

வாசிப்பு மாதத்தை முன்னிட்டுக் கரைச்சிப் பிரதேச சபை பொதுநூலகத்தினால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி ஈட்டியவர்களுக்கான பரிசுகள் இதில் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் நாடாளு மன்ற உறுப்பினர் சி. சிறிதரன், வடமாகாண சபை உறுப்பினர் தவநாதன், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளா பிரபாகரன், கரைச்சிப் பிரதேச செயலாளர் கம்சநாதன் கரைச்சிப் பிரதேச சபை உத்தியோகத்தர்கள், மாணவர்கள் மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (த-35)

# தரம் உயர வேண்டும் கரைச்சிப் பிரதேச சபை

## கண்டாவளைக்கும் தனிப் பிரதேச சபை எல்லை மீள்நிர்ணயக் குழுவிடம் கோரிக்கை

கிளிநொச்சி, நவ. 12

கரைச்சிப் பிரதேச சபையை நகர சபையாகத் தரமுயர்த்துவதோடு கண்டாவளைக்குத் தனியான பிரதேச சபை ஒன்றையும் ஏற்படுத்துமாறு உள்ளூராட்சிமன்ற எல்லை மீள்நிர்ணயக் குழுவின் தலைவர் அசோக பீரிஸிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

உள்ளூராட்சி மன்றங்களின் வட்டார மீள் நிர்ணயக் குழுவினரின் சந்திப்பு நேற்றுக் கிளிநொச்சி மாவட்டத்தில் அதன் தலைவர் அசோக பீரிஸ் தலைமையில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில், கிளிநொச்சி மாவட்டம் ஒரு தனியான நிர்வாக மாவட்டமாகவுள்ள போதிலும் அதன் நகரை உள்ளடக்கிய உள்ளூராட்சி மன்றப் பிரிவு இன்று வரை ஒரு பிரதேச சபையாகவே உள்ளது. இதனால் நகரின் அபிவிருத்திக்குச் சில முட்டுக்கட்டைகள் ஏற்படுவதோடு பல வளங்களையும் ஈட்டிக் கொள்ளமுடியவில்லை.

இதேபோன்று கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளில் அதிகமான மக்கள் வாழும் முதல் இரு பிரதேச செயலாளர் பிரிவுகளையும் உள்ளடக்கியதாகவே கரைச்சிப் பிரதேச சபை உள்ளது.

எனவே தற்போது நகரை உள்ளடக்கிய பிரதேச சபையாகவுள்ள கரைச்சிப் பிரதேசசபையை உடன் நகரசபையாகத் தரமுயர்த்துவதோடு, நிர்வாக இலகுவாக்கலைக் கருத்திற் கொண்டும் நீண்ட தூர அலைச்சலைப் போக்கும் வகையிலும் கண்டாவளைக்கும் ஒரு தனியான பிரதேச சபையை ஏற்படுத்துமாறும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இது தொடர்பில் ஆராய்ந்த குழுவின் தலைவர் மாவட்ட நிர்வாகம் , எல்லைப் பரப்பு , மக்கள் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் குறித்த இரு விடயங்களுக்கும் பரிந்துரை செய்வதாகப் பதிலளித்தார். (த-101)

## முழுநிலா நாள் கலைவிழா

தென்மராட்சி, நவ.12

தென்மராட்சி கல்வி வலயத்தின் முழுநிலா நாள் கலைவிழா எதிர்வரும் திங்கட்கிழமை இடம்பெற உள்ளது.

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் வலய ரீதியாக மாதாந்தம் நடத்தப்பட்டுவரும் முழுநிலா விழா நிகழ்வுகளின் வரிசை யில் இடம்பெறும் இந்த விழா அன்றையதினம் வலயக் கல்விப் பணிப்பாளர் சு. கிருஷ்ண குமார் தலைமையில் காலை 8.30 மணிக்கு தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்ட பத்தில் நடைபெற உள்ளது.

இந்த விழாவுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரனும், கௌரவ விருந்தினர்களாக தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் செல்வி ர.நவரத்தினம், முல்லைத்தீவு கல்வி வலய கல்வி அபிவிருத்தி பிரிவு பிரதிக் கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தம் ஆகியோரும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் அறிஞர் கௌரவிப்பு, கீர்த்தனாமுதம், இறுவட்டு வெளியீடு நினைவுப் பரிசில்கள் வழங்கல் போன்றவையும், கலை நிகழ்வுகளும் இடம் பெறும். (த- 9)

## பனம் பொருள் உற்பத்திக்கு மேலதிகப் பயிற்சி வசதிகள்

### பனை அபிவிருத்திச் சபை நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ. 12

பனம் சார் உற்பத்திப் பொருள்கள் தொடர்பான மேலதிக பயிற்சிகள் தேவைப்படுமிடத்து ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்று பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் இ.சிவசங்கர் தெரிவித்தார்.

பனம் கைப்பணியாளர்களுக்கான உபகரணம் வழங்கும் நிகழ்வு நேற்று முன் தினம் வியாழக்கிழமை காலை 10 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சபையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட போதே இவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இந்த உபகரணம் வழங்கும் நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட 35 பயனாளிகளுக்கு தலா 8 ஆயிரம் ரூபா வீதம் ஒவ்வொருவருக்கும் உபகரணப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. வாழ்வாதார தேவைக்கென்றே இந்த உபகரணங்கள் வழங்கப்படுகின்றன. பயனாளிகள் ஒவ்வொருவரும் பெறப்படும் உபகரணங்களை வீணாக்காது உற்பத்தித் தேவைக்குப் பயன்படுத்தி தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தவேண்டும். பயனாளிகளுக்கு வழங்கப்படும் பயிற்சிகள் போதாது என்னும் பட்சத்தில் அவர்களுக்குரிய மேலதிக பயிற்சிகளும் வழங்கப் படும்–என்றார்.

இந்த நிகழ்வில் கிளிநொச்சிப் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் .ச.அமலராஜ், வடபிராந்திய போக்குவரத்துச் சபை கிளிநொச்சி மாவட்ட சாலை முகாமையாளர் வி.நேசகுமார், பனை அபிவிருத்திச் சபையின் விரிவாக்க முகாமையாளர் கா.கோபாலகிருஷ்ணன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (த-10)



## மரக்காலை தீக்கிரை விசமிகள் கைவரிசை

யாழ்ப்பாணம். நவ. 12

வல்லை வீதி, சங்கானையில் மரக்காலை ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை விசமிகளால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

பட்டறை உட்பட கூரைகள் எரிந்த நிலையில் சுமார் ஒரு லட்சம் ரூபாவுக்கும் மேல் நட்ட மேற்பட்டுள்ளதாக அதன் உரிமையாளர் வீரசிங்கம் மகேந்திரன் தெரிவித்தார்.

இரவு 9.30 மணியளவில் வெடிச் சத்தம் கேட்டு அந்த இடத்திற்கு விரைந்த அயலவர்களால் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

பெற்றோல் நிறைந்த போத்தல்களினால் தாக்குதல் நடத்தப்பட்டு இந்தச் சம்பவம் இடம் பெற்றதாக உரிமையாளர் மேலும் கூறினார். (த-29)

## காண்காட்சி இன்று

கரணவாய், நவ.12

வடமராட்சி கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவினர் நடத்தும் காண்காட்சி இன்று சனிக்கிழமை முற்பகல் 9 மணி முதல் தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலய மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்ளாளர் திருமதி பி.அபிராமி தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.புஸ்பலிங்கமும், சிறப்பு விருந்தினர்களாக தொண்டமானாறு வீரகத்திப் பிள்ளை ம.வி அதிபர் இரா ஸ்ரீநடராசா மற்றும் வதிரி மெ.மி.த பாடசாலை அதிபர் வி. சிவசுப்பிரமணியம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (த-108)

## இரவில் வெளிச்சமின்றி எழுதுமட்டுவாழ் சந்தி

எழுதுமட்டுவாழ் சந்திப் பகுதி மின் வெளிச்சமின்றி காணப்படுவதால் இரவு வேளைகளில் வரும் அப்பகுதி மக்கள் அச்சத்துடன் வீடு செல்ல வேண்டியுள்ளது எனத் தெரிவித்தனர்.

எழுதுமட்டுவாழ் சந்திப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த பொதுச் சந்தை வளாகத்தைச் சுற்றி 12 வீதி விளக்குகளும், அந்தப் பகுதியில் உள்ள ரயில் நிலையம் வரையிலும். எழுதுமட்டுவாழ் – நாகர் கோவில் வீதியிலும் வீதி விளக்குகள் பொருத்தப்பட்டிருந்தன.

இவை அனைத்தும் பழுதடைந்து மாதங்கள் பல சென்றபோதிலும் திருத்தியமைக்கப்படாமையால் இரவு வேளைகளில் வாகனங்கள் மற்றும் ரயிலில் வரும் பயணிகள் அச்சத்துடன் தமது வீடுகளுக்குச் செல்கின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாகச் சாவகச்சேரி பிரதேசசபைக்கு பல தடவைகள் முறையிட்டும் பயன் கிடைக்கவில்லையெனவும் கூறப்பட்டது.

இது தொடர்பாக பிரதேச சபையுடன் தொடர்புகொண்டபோது, சபை இயங்கிய காலத்தில் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் நிதி ஒதுக்கீடுகளில் பிரதேசத்தின் பல இடங்களில் வீதி விளக்குகள் பொருத்தப்பட்டன. பெரும்பாலான வீதி விளக்குகள் பழுதடைந்துள்ளன என எமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. வீதி விளக்கு புனரமைப்புக்கென நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மின்விளக்குகள் கொள்வனவு செய்து பொருத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனத் தெரிவிக்கப்பட்டது. (த-9)

## யாழ்.மாவட்டத்தின் மூன்று அஞ்சலகங்கள் முன்னிலை

சாவகச்சேரி, நவ.12



உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு அஞ்சல் அலுவலகங்களில் இயங்கும் தேசிய சேமிப்பு வங்கியில் அதிகளவு வாடிக்கையாளர்களை இணைத்ததுடன் அதிக அளவு சேமிப்புத் தொகையை ஈட்டிய அஞ்சல் அலுவலகங்களில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த மூன்று அஞ்சல் அலுவலகங்கள் தேசிய நிலையில் முன்னிலை பெற்று பரிசில்களைப் பெற்றுக் கொண்டன.

இந்தப் போட்டியில் வேலணை அஞ்சல் அலுவலகம் முதலாமிடத்தையும், சாவகச்சேரி அஞ்சல் அலுவலகம் இரண்டாமிடத்தையும், பண்டத்தரிப்பு அஞ்சல் அலுவலகம் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன.

அஞ்சலக பணியாளர்களிடையே அதிக அளவு வாடிக்கையாளர்களை திட்டத்தில் இணைத்தமைக்காகச் சாவகச்சேரி அஞ்சல் அலுவலகப் பணியாளர் செ.செந்தூரன் முதலிடத்துக்கு தெரிவு செய்யப்பட்டு தங்கப் பதக்கத்தையும், வெற்றிக் கேடயத்தையும் பெற்றுக்கொண்டார். கடந்த மாதம் 9ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற நிகழ்வில் பரிசில்கள் வழங்கப்பட்டன. (த-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பன்னாட்டு நீதிபதிகளுக்கு மாற்று இருக்கமுடியாது

இறுதிப் போரில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள் (இவையே போர்க் குற்றங்கள் எனப்படுகின்றன) தொடர்பில் பன்னாட்டு நீதிபதிகளையும் உள்ளடக்கிய விசாரணைப் பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது குறித்த தெளிவு அரச மட்டத்தில் இன்னமும் ஏற்படவில்லை என்று தெரிகிறது. இது கவலையளிப்பது; கண்டிக்கத்தக்கது.

இந்தியாவில் இருந்து வெளியாகும் 'தி இந்து' ஆங்கிலப் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியில், வடக்கில் உள்ள மக்களின் நம்பிக்கையை வெல்லும் வகையிலான ஒரு விசாரணைப் பொறிமுறை ஏற்படுத்தப்படவேண்டும் என்றும், அது பன்னாட்டு நீதிபதிகளைக் கோருவோரையும் திருப்திப்படுத்தக் கூடியதாக அமையும் என்றும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருக்கிறார்.

அதேசமயத்தில் தீவிரப் போக்குடையவர்களை முழுமையாகத் திருப்திப்படுத்த முடியாது; பெரும்பான்மையானவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு பொறிமுறையையே உருவாக்க முடியும் என்றும் கருத்துத் தெரிவித்திருக்கிறார். அவரது பதிலில் இருந்து இந்த விடயத்தில் அரசிடம் இன்னமும் முழுமையான தெளிவில்லை என்பது தெரிகிறது. எந்த வகையிலான ஒரு பொறிமுறை ஏற்படுத்தப்படப்போகிறது என்பதை கொழும்பு இன்னமும் தீர்மானிக்கவில்லை. இன்னமும் 4 மாதங்களில், ஜெனீவாத் தீர்மானம் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் தனது அறிக்கையை முன்வைக்கவுள்ள நிலையில், அரசு தெளிவற்ற சிந்தனையுடனும், குழப்பங்களுடனுமே இருக்கிறது என்பது தெளிவாகிறது.

அரசின் இத்தகைய அசண்டையீனம் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதல்ல. தாமதிக்காத நீதியை உறுதிப்படுத்தியிருக்க வேண்டிய அரசு, அதைச் செய்யாமல் காலத்தை இழுத்தடிப்பது குற்றமிழைத்தவர்களைப் பாதுகாப்பதற்காகவும், அதற்கூடாகத் தனது ஆட்சியைத் தக்கவைப்பதற்காகவுமே என்றுதான் தமிழர்கள் கருதுகின்றார்கள். அதில் தவறில்லை.

அரச தலைவர் மற்றொரு விடயத்தையும் குறிப்பிட்டிருக்கிறார். பன்னாட்டு நீதிபதிகளைக் கேட்பதில் தீவிரப் போக்குடையவர்களை முழுமையாகத் திருப்திப்படுத்த முடியாது என்பது அவரது வாதம். அதற்கு முன்னதாக அவர் ஒன்றை மறந்துவிட்டார். தமிழர்கள் கலப்புப் பொறிமுறை ஒன்றை ஒருபோதும் கேட்கவில்லை. இலங்கையின் நீதி வழங்கும் பொறிமுறையின் மீது சுத்தமாக நம்பிக்கை இல்லை என்ற காரணத்தால் பன்னாட்டுக் குற்றவிசாரணைப் பொறிமுறை ஒன்றையே தமிழர்கள் வலியுறுத்தினார்கள். குற்றஞ்சாட்டப்பட்டிருப்பவர்கள் பன்னாட்டு நீதிமன்றத்தின் முன்னால் நிறுத்தப்பட வேண்டும் என்பதையே விரும்பினார்கள்.

அதற்கு ஒத்துக்கொள்ள கொழும்பு மறுத்தபோதுதான், ஐ.நா. இந்தக் கலப்புப் பொறிமுறையை முன்மொழிந்தது. எனவே தமிழர்களில் தீவிர நிலைப்பாட்டைக் கொண்டவர்கள், ஒருபோதும் பன்னாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய நீதிப்பொறிமுறை ஒன்றை ஒரு போதும் ஏற்கவில்லை. எனவே பன்னாட்டு நீதிபதிகளை உள்ளடக்குங்கள் என்று கேட்பதே ஒரு தீவிரப் போக்கு என்பதாக அரச தலைவர் காண்பிக்க முனைவது முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பதற்கு ஒப்பானது.

ஹேக் நீதிமன்ற குற்றவியல் நீதிமன்ற விசாரணை - உள்நாட்டு நீதி விசாரணை என்ற இரண்டுக்கும் இடைப்பட்ட இணக்கப்பாடாகத்தான் பன்னாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய விசாரணைப் பொறிமுறை பரிந்துரைக்கப்பட்டது. அப்படியிருக்கும்போது, பன்னாட்டு நீதிபதிகளை உள்ளடக்குவதே ஒரு தீவிரக் கோரிக்கை என்பதாகவும், அதனை முன்வைப்போரைத் திருப்திப்படுத்தும் விதத்தில் ஒரு மாற்று ஏற்பாட்டுக்கு அரசு முனைவதாகவும் அரச தலைவர் காட்ட முனைவது தமிழர்களுக்குச் செய்யும் துரோகமாகி விடும். அரச தலைவராக மைத்திரிபால சிறிசேனவைத் தெரிவு செய்ய, தமிழ் மக்கள் அவருக்கு வாக்களித்தமை இதற்காகவல்ல.

இதனைச் சரிவரப் புரிந்துகொண்டு பன்னாட்டு நீதிபதிகளையும் உள்ளடக்கிய ஒரு பொறிமுறையை உடனடியாக உருவாக்க அரச தலைவர் முன்வர வேண்டும். அது மட்டுமே ஓரளவு தமிழர்களையாவது திருப்திப்படுத்துவதாக அமையும்.

# மகிந்த தலையில் மிளகாய் அரைக்கும் விமல்

எம்.ஐ.முபாறக்

ஆட்சி கவிழ்க்கப்பட்ட மகிந்த, தாம் இழந்த ஆட்சியை எப்படியாவது மீளப் பிடித்துவிட வேண்டும் என்ற முனைப்பில் ஈடுபட்டுக்கொண்டிருப்பதை நாம் அறிவோம். அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் அதாவது 2020 இல் எப்படியாவது ஆட்சியைப் பிடித்துவிட வேண்டும் என்ற திட்டத்தின் அடிப்படையில் மஹிந்த தரப்பு அதி வேகமாக செயற்பட்டுக் கொண்டு இருக்கின்றது.

இந்த ஆட்சியில் இடம்பெறுகின்ற சின்னச் சின்ன தவறுகள், ஊழல், மோசடிகள், சின்னச் சின்ன ஜனநாயக விரோதச் செயல்கள் அனைத்தையும் ஊதிப் பெருப்பித்து இந்த அரசுக்கு எதிரான ஆயுதமாக-மகிந்த அணியின் துருப்புச்சீட்டாக-அவர்கள் அவற்றைப் பயன்படுத்தி வருவதை அவதானிக்கலாம்.

இந்த நாட்டில் ஒவ்வொரு நாளும் ஏதாவது வித்தியாசமான நிகழ்வேதும் நடக்காதா என்று அவர்கள் தினமும் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்துக் கிடக்கின்றனர். எழுக தமிழ் நிகழ்வு, யாழ். பல்கலைக்கழக மாணவர் படுகொலை, ஊனமுற்ற இராணுவத்தினரின் ஓய்வூதியப் போராட்டம் மற்றும் மத்திய வங்கி பிணைமுறி மோசடி போன்ற, இந்த ஆட்சியில் இடம்பெற்ற அத்தனை விடயங்களுக்கும் தேசியவாத-இனவாத சாயம் பூசி நாடு முழுவதும் மகிந்த அணியினர் பரப்புரை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆனால், மகிந்தவின் ஊழல் மிக்க-சர்வாதிகார அரசுடன் தற்போதைய அரசை ஒப்பிட்டுப் பார்த்தால், பெரிய வேறுபாடுகள் தெரியும். மகிந்த அரசின் குறைபாடுகள் மக்களுக்குப் பெரிதாகத் தெரிய வரும். மகிந்த ஒரு போதும் ஆட்சிக்கு வரமுடியாத நிலையை அது ஏற்படுத்தும். அதை மூடி மறைப்பதற்காகவே சிறு சிறு விடயங்களையும் அவர்கள் மிகப் பெரிதாக மக்களுக்குக் காட்டி வருகின்றனர்.

### 2020 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலை இலக்கு வைத்து நகரும் மகிந்த

அவ்வாறு செய்தால்தான் 2020 இல் ஆட்சியைக் கைப்பற்ற முடியும் என்று அவர்கள் கருதுகின்றனர். அத்தோடு, அவர்கள், முடியுமானவரை இராணுவத்தினரின் விவகாரங்களையும் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்தி வருவதை அவதானிக்கமுடிகிறது.

இவ்வாறு ஆட்சியைப் பிடிப்பதற்கு அவர்கள் வகுத்துள்ள வியூகங்களில் ஒன்றுதான், புதிய கட்சியின் உருவாக்கம். சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவத்தைக் கைப்பற்றுதல் அல்லது புதிய கட்சி ஒன்றின் ஊடாக ஆட்சியை பிடித்து, பின்பு அந்த ஆட்சி அதிகாரத்தைக் கொண்டு சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவத்தை மைத்திரியிடம் இருந்து பறித்துவிடுதல் என்பது மகிந்த அணியின் திட்டமாக இருந்து வருகின்றது.

மகிந்த தோல்வியடைந்து மீண்டும் அரசியலுக்குத் திரும்பியது முதல் புதிய கட்சி உருவாக்கம் பற்றிய கதை அடிபடுகிறது. மகிந்த அணிக்குள் இது தொடர்பில் இரண்டு வெவ்வேறு நிலைப்பாடுகள் உள்ளன. விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் புதிய கட்சி உருவாக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலும், அந்த அணியில் உள்ள சிரேஷ்ட உறுப்பினர்களில் ஒரு சாரார் அது தேவை இல்லை என்றும் இரண்டு வெவ்வேறு நிலைப்பாட்டில் உள்ளனர்.

இருந்தாலும், புதிய சக்தி ஒன்று கட்டியெழுப்பப்பட வேண்டும் என்ற கருத்தை அந்த சிரேஷ்ட உறுப்பினர்கள் கூறி வருகின்றனர். புதிய கட்சியைத்தான் அவர்கள் இவ்வாறு வேறு பெயர் கொண்டு அழைக்கின்றனர் என்று பேசப்படுகின்றது.

அண்மையில், இரத்தினபுரி, எஹலியகொடவில் இடம்பெற்ற மகிந்த அணியின் கூட்டத்தில் புதிய கட்சி உருவாக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்ட போதிலும், அது இடம்பெறவில்லை. புதிய கட்சி ஒன்றை உருவாக்க வேண்டிய தேவை அவர்களுக்கு இல்லாவிட்டாலும், புதிய கட்சி உருவாகும் என்று கூறி ஜனாதிபதி மைத்திரியை தொடர்ந்தும் அச்சத்தில் ஆழ்த்த வேண்டிய தேவை மகிந்த அணிக்கு உண்டு.

இவ்வாறான ஒரு நிலையில் தான், விமல் வீரவன்சவின் தேசிய ஐக்கிய முன்னணி என்ற கட்சி, தேசிய மக்கள் முன்னணி என்று பெயர் மாற்றப்பட்டு அந்தக் கட்சிக்கு ஜீ.எல்.பீரிஸ் தவிசாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்தக் கட்சிக்கு இவ்வாறானதொரு மாற்றம் ஏன் தேவை என்ற கேள்வி இப்போது எழுகின்றது. உண்மையில், இதுதான் மகிந்த அணியின் புதிய கட்சி. ஆனால், அதில் ஓர் அரசியல் இராஜதந்திரம் இருக்கின்றது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் சுதந்திர கட்சியில் போட்டியிடுவதற்கு மகிந்த அணிக்கு மைத்திரி அனுமதி வழங்கி இருக்காவிட்டால், அந்த அணி விமலின் இந்தக் கட்சியில்தான் போட்டியிட்டிருக்கும். தினேஷ் குணவர்தனவின் கட்சி அல்லது விமலின் கட்சி என்ற இரண்டு தெரிவுகள் அப்போது அவர்களிடம் இருந்தன. சுதந்திர கட்சியில் அவர்கள் போட்டியிடுவதற்கு அனுமதி கிடைத்ததால், அந்த இரண்டு தெரிவுகளையும் அவர்கள் கைவிட்டனர்.

ஆனால், புதிய கட்சி ஒன்று உருவாவதாக இருந்தால், அது தன்னுடைய கட்சியாகத்தான் இருக்க வேண்டும் என்ற திட்டம் விமலிடம் இருந்தது. அந்தத்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2015 ஜனாதிபதி தேர்தலில் மகிந்த தோல்வியடைந்து அவரது ஹம்பாந் தோட்டை இல்லத்தில் ஓய்வில் இருந்தபோது அவரை மீண்டும் அரசியலுக்கு அழைத்துவந்தவர் விமல்வீர வன்சதான் என்பதை நாம் அறிவோம். அப்போது ஏற்பட்ட அரசியல் நிலைமையை பயன்படுத்தி தனது அரசியலை– தனது கட்சியை பலப்படுத்துவதற்கான வியூகம் ஒன்றை விமல் அப்போது வகுத்தார். அந்த வியூகத்தின் துருப்புச் சீட்டாக சிக்கியவர்தான் மகிந்த



திட்டம் இப்போது நிறைவேறி இருக்கின்றது. 2015 ஜனாதிபதி தேர்தலில் மகிந்த தோல்வியடைந்து அவரது ஹம்பாந்தோட்டை இல்லத்தில் ஓய்வில் இருந்தபோது, அவரை மீண்டும் அரசியலுக்கு அழைத்து வந்தவர் விமல்வீரவன்சதான் என்பதை நாம் அறிவோம்.

அப்போது ஏற்பட்ட அரசியல் நிலைமையை பயன்படுத்திதனது அரசியலை– தனது கட்சியை, பலப்படுத்துவதற்கான வியூகம் ஒன்றை விமல் அப்போது வகுத்தார். அந்த வியூகத்தின் துருப்புச் சீட்டாக சிக்கியவர்தான் மகிந்த.

**மகிந்தவை மீண்டும் அரசியலுக்குக் கொண்டுவர விமல் வகுத்த திட்டம்**

மகிந்தவின் பிள்ளைகளின் அரசியல் எதிர்காலம், ஊழல், மோசடிகளில் இருந்து அவரது குடும்பத்தை காப்பாற்ற வேண்டிய தேவை போன்றவற்றை மகிந்தவின் தலைக்குள் போட்டு அவர் மீண்டும் அரசியலுக்குதிரும்பவேண்டிய ஒரு நிலையை உருவாக்கினார் விமல். விமல் தன்னுடன் இருப்பதால், அவரது திறமையால்–உதவியால் விட்டதைப் பிடித்துவிடலாம் என்ற நம்பிக்கை மகிந்தவுக்கு இருந்ததால், மகிந்த மீண்டும் அரசியலுக்குத் திரும்பினார்.

மகிந்த 2005 இல் ஜனாதிபதி ஆனது முதல், அவர் 2015 இல் பதவி கவிழ்க்கப்படும்வரை, விமல் மகிந்தவுக்குப் பேருதவியாகவே இருந்தார். அப்போது ஜேவிபியின் பரப்புரைச் செயலாளராக இருந்த விமல், 2004 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் சந்திரிகாவுடன் இணைந்து, ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியை கவிழ்ப்பதற்கு பெரும் பங்கு வகித்தார்.

அந்தத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் சேர்ந்து போட்டியிட்டு ஜே.வி.பி 41 ஆசனங்களை பெறுவதற்கும், ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியடைவதற்கும் விமல்தான் பிரதான காரணமாக இருந்தார். அதேபோல், 2005 ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த வெல்வதற்கு, ஜேவிபியின் செயற்பாடே பிரதான காரணம். இதற்கெல்லாம் தலைமை தாங்கியவர் விமல் வீரவன்சதான்.

பின்நாளில் ஜேவிபி மகிந்தவுடன் முரண்பட்டுக் கொண்டு, அந்தக் கூட்டமைப்பில் இருந்து விலகியபோதும், விமல் மகிந்தவுடன் நல்லுறவைப் பேணிக்கொண்டே இருந்தார். ஜேவிபியின் ரகசியங்கள், அந்தக் கட்சியின் கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகள் என்பவற்றை மகிந்த உடனுக்குடன் அறியும் அளவுக்கு மகிந்த –விமல் உறவு பலமாக இருந்தது.

தனது கட்சிக்குள் இருந்துகொண்டே விமல் இவ்வாறு துரோகத்தனம் செய்வதைத் தாமதமாகக் கண்டுபிடித்த ஜேவிபி, அவரைக் கட்சியில் இருந்து விலக்குவதற்கு முடிவெடுத்தது. இதை அறிந்த விமல், தாமாகவே விலகி, மகிந்த அரசுடன் இணைந்து கொண்டார். பின்னர் புதுக் கட்சி ஒன்றையும் உருவாக்கிக் கொண்டார்.

மகிந்தவின் ஆட்சி கவிழும் வரை –மகிந்தவின் தயவால்–வீரவன்சவின் அரசியல் வாழ்வு நல்ல விதமாகவே போய்க் கொண்டிருந்தது. மகிந்த தோல்வியடைந்ததும், அவரது நிலைமை கவலைக்கிடமாக மாறியது. இருந்தாலும், குழம்பிய குட்டைக்குள் மீன் பிடிக்கும் அவரது திட்டத்தை வெற்றிப் பாதையை நோக்கியே நகர்த்தத் தொடங்கினார்.

அந்தத் திட்டம்தான், தனது கட்சியையும் தனது அரசியலையும் மகிந்தவின் செல்வாக்கைக் கொண்டு பலப்படுத்துதல். அதில் ஆரம்பக் கட்டமான மகிந்தவை அரசியலுக்குள் அழைத்து வருதல் என்ற திட்டம் வெற்றி பெற்றது. இப்போது கட்சியைப் பலப்படுத்தும் திட்டமும் வெற்றி பெற்றுள்ளது.

கட்சியின் பெயரை மாற்றி தவிசாளராக ஜீ.எல் பீரிஸை நியமித்து, அடுத்த கட்டத்தை நோக்கி விமல் நகர்கின்றார். இனிவரும் தேர்தல்களில் மகிந்த அணி சுதந்திர கட்சியில் போட்டியிட முடியாத ஒரு நிலையை விமல் மேலும் உருவாக்குவார். இப்போது உள்ள நிலைகூட, மகிந்த அணியால் சுதந்திரக் கட்சியில் போட்டியிட முடியாத நிலைதான். அதை மேலும் பலப்படுத்துவார் விமல்.

விமலின் இந்தக் கட்சியிலேயே மகிந்த அணி போட்டியிட வேண்டிய ஒரு நிலை உருவாகும். விமல் போன்ற ஒருவரால் மகிந்த கடந்த காலங்களில் அடைந்த அரசியல் நன்மைகள் காரணமாக, விமலின் திட்டத்துக்கு மகிந்த இணங்கிப் போவார் என்பதில் சந்தேகமில்லை.

இவ்விதம் சம்பவங்கள் இடம்பெறுமானால், மகிந்தவின் தயவால் விமலின் கட்சி இலங்கையில் உள்ள பலமிக்க கட்சிகளில் ஒன்றாக எதிர்காலத்தில் மாறும். மொத்தத்தில் மகிந்த தலையில் விமல் மிளகாய் அரைப்பதை மகிந்த அறியாமல் இருக்கின்றார் என்பதே உண்மை.

## பெரும்பழியைத்தேடிக் கொள்ளாதீர்

கடந்த பல தசாப்த காலமாக யாழ்ப்பாணத்து மாம்பழம் நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் நல்ல வரவேற்புக்கு உரியதாகத் திகழ்ந்து வந்துள்ளது. அத்தகைய சிறப்புக்குரிய யாழ்ப்பாண மாம்பழத்தின் பெயரைக் கெடுக்கும் வகையில் நம்மவர்களில் சிலர் நடந்து கொள்வது கவலைக்குரியதே.

பொதுச்சுகாதார பரிசோதகர்களது எச்சரிக்கையையும் மீறி மருந்து விசிறப்பட்டு பழுக்க வைக்கப்பட்ட மாங்காய்களை விற்பனைக்கு வைத்திருந்த குற்றச்சாட்டில் கொடிகாமம் சந்தைப் பழவகை வியாபாரிகள் நான்குபேர் சாவகச்சேரி நீதிமன்றால் கடந்த வாரம் தண்டம் விதிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்டதாக பத்திரிகையில் செய்தி வெளியாகியிருந்தது. ஏற்கனவே விடுக்கப்பட்ட எச்சரிக்கைகளையும் பொருட்படுத்தாது, பொது மக்களது உடல் நலத்துக்குக் கேடு விளைவிக்கும் வகையில் மருந்து விசிறப்பட்ட மாங்காய்களைத், தரமான மாம்பழங்களெனக் காட்டி விற்பனை செய்யவென வைத்திருந்த இந்த வர்த்தகர்கள் உண்மையில் தண்டிக்கப்பட வேண்டியவர்களே. அவர்களது உறவினர்களில் எவரேனும் கூட இத்தகைய மருந்தூறிய மாம்பழங்களை உண்ண நேர்ந்தால் கடும் சுகாதாரப் பாதிப்புக்கு உள்ளாவர் என்பதும் கருத்தில் கொள்ளத்தக்கதே.

அந்த வகையில் சமூகத்தின் மத்தியில், எமது பொதுமக்கள் புதுப்புது நோய்களின் பாதிப்புக்கு முகம் கொடுக்க நேர்ந்து வரும் இன்றைய காலகட்டத்தில், வெறும் இலாப நோக்குடன் இத்தகைய வியாபாரிகள் தெரிந்து கொண்டே இத்தகைய குற்றங்களில் ஈடுபடுவது மன்னிக்க முடியாத சமூகச் சீர்கேடாகும். இனி மேலாவது இத்தகையோர் தமது தவறுகளைக் கைவிட்டு எமது சமூகத்தில் சுகாதார நிலை பாதிப்புறாமல் இருக்க உதவுவார்களா?

அ. அகிலன்

## எமக்குக் கிட்டவேண்டிய சான்றிதழ் தாமதமின்றிக் கிட்டுமா?

2015ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட க.பொ.த. உயர் தரத்தில் தொழில்நுட்பப்பிரிவு பாடத்தை தற்போது மாண வர்கள் தொடர்ந்து கற்று வருகின்றனர். உயர்தரத்தில் இந்தப் பிரிவில் கல்வி கற்று 3 பாடங்களிலும் சித்தியடைந் தால், NVQ சான்றிதழ் வழங்கப்படுமெனக் கூறினார்கள். தற்போது 2015 இல் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் களுக்குரிய வெட்டுப்புள்ளிகள் அறிவிக்கப்பட்டு, பல்கலைக் கழகத்துக்கும் அவர்கள் தெரிவு செய்யப்பட்டு விட்டனர்.

ஏனைய மாணவர்கள் அனைவருக்கும் குறித்த சான்றிதழை வழங்க இதுவரையும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே தயவுசெய்து மாணவர்களாகிய எமக்குத் தங்களது பத்திரிகையின் மூலம் ஒரு தீர்வைப் பெற்றுத்தர, –அதாவது 2015 இல் தொழில் நுட்பப் பிரிவில் 3 பாடங்களிலும் சித்தியடைந்தவர்களுக்கு NVQ சான்றிதழைப் பெற்றுக் கொள்ள–வழிவகை செய்து உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

மாணவர்களாகிய எமக்கு வேலைவாய்ப்பொன்றைப் பெறுவதற்கு குறித்த சான்றிதழ் பெருமளவில் உதவியாக இருக்கும் என நம்புகிறேன். தங்கள் பத்திரிகை மூலமாக இதனை வலியுறுத்தி, குறித்த சான்றிதழை அதற்குத் தகுதி உடையோர் பெற்றுக் கொள்ள அழுத்தம் வழங்கி உதவுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

NVQ சான்றிதழைப் பெறத்
தகுதி பெற்றதொரு மாணவி, மட்டுவில் தெற்கு .

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவுக்கு இருண்ட நேரம்
# டொனால்ட் ட்ரம்பின் தேர்வால்
## ஐ.எஸ்.ஐ.எஸ். தெரிவிப்பு

வொஷிங்டன், நவ. 12
அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் தெரிவுசெய்யப்பட்டமையானது அமெரிக்காவுக்கு இருண்ட நேரம் ஆரம்பித்ததைப் போன்றது எனத் தெரிவித்தது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. பிறிதொரு முக்கிய ஆயுதக் குழுவான அல் குவைதாவும் இவ்வாறு தெரிவித்தது.




அமெரிக்காவின் 58 ஆவது தேர்தல் முடிவுகள் கடந்த புதன்கிழமை வெளியாகின. குடியரசுக் கட்சியின் முக்கிய வேட்பாளரான டொனால்ட் ட்ரம்ப், ஜனநாயகக் கட்சியின் முக்கிய வேட்பாளரான ஹிலாரி கிளிங்டனை தோற்கடித்து ஜனாதிபதியானார்.
தனது தேர்தல் பரப்புரைகளில் டொனால்ட் ட்ரம்ப் பல்வேறு சர்ச்சைக் கருத்துக்களைத் தெரிவித்திருந்தார். உலகநாடுகளுடன் முரண்படுவதில்லை. உலகை விடுத்து அமெரிக்காவைக் கட்டியெழுப்புவதற்கே முக்கியத்துவம் கொடுக்கப்படும். அகதிகள் உள்வாங்கப்பட்டார்கள். குடியுரிமை பெறாத முஸ்லிம்கள் முதல் கட்டமாக வெளியேற்றப்படுவர். முஸ்லிம்களை இனங்காண தனியான அடையாள அட்டைகள் வழங்கப்படும். ரஷ்யாவுடன் நல்லுறவு மேற்கொள்ளப்படும். மெக்ஸிக்கோவுக்கு எதிராகச் சுவர் எழுப்பப்படும் என்பவை அவற்றில் சில. ஏகப்பட்ட சர்ச்சைக் கருத்துக்களை அவர் தெரிவித்த போதிலும், ஹிலாரி மீது சுமத்தப்பட்ட ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்கள் காரணமாக ட்ரம்ப்பே ஜனாதிபதியானார். அவரது தேர்வை பல அமெரிக்கர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ட்ரம்ப் எமது ஜனாதிபதி அல்லர் எனத் தெரிவித்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் டொனால்ட் ட்ரம்பின் வெற்றி இதுவரை காலமும் அமெரிக்கா கொண்டிருந்த அணுகு முறைகளில் மாற்றத்தைக் கொண்டுவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில் உலகின் மிக மோசமான ஆயுதக் குழுக்கள் எனத் தெரிவிக்கப்படும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு மற்றும் அல் குவைதா அமைப்பு என்பன ட்ரம்ப்பின் தெரிவு தொடர்பில் தற்போது மௌனம் கலைத்துள்ளன.
ட்ரம்பின் வெற்றி எமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. அமெரிக்காவின் இருண்ட நேரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதை நாம் உணர்கிறோம்.
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் முதல் எதிரியாக தற்போது அமெரிக்கா உள்ளது. புஷ்ஷை போன்ற ஒரு ஆட்சியாளர் தான் ட்ரம்பும் என ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு தெரிவித்தது என அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம-எ)

## புகோகாவில்

டோக்கியோ, நவ. 12
ஜப்பானின் புகோகா நகரில் உள்ள மிகப் பெரிய வீதியொன்றில் திடீரென மிகப் பெரிய குழி ஒன்று ஏற்பட்டமை அங்கு பரபரப்பை ஏற்படுத்தியது.
கடந்த செவ்வாய்க்கிழமை ஜப்பான் நேரப்படி அதிகாலை 5 மணியளவில் இந்த திடீர் குழி ஏற்பட்டது. போக்குவரத்துக்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டன. குறித்த குழி அருகிலுள்ள அடுக்குமாடிக் கட்டடங்களில் அதிக சேதத்தை ஏற்படுத்தும் என அச்சம் வெளியிடப்பட்டு மக்கள் வெளியேற்றப்பட்டனர். கழிவு நீர்க் கான்கள் உடைந்து நீர் வெளியே வந்ததால் துர்நாற்றம் வீசியது எனச் சொல்லப்படுகிறது. சம்பவம் தொடர்பில் ஆராயப்பட்டு வருகிறது. (ம-எ)





முதலை ஒன்றின் மீது 5 த
ரன்ரோ ஜன்சன் என்ற ஒ
பார்க்கப்பட்டும் பகிரப்பட்டு

## ட்ரம்ப் சிறந்த தலைவர் ஒபாமா அடித்தார் பல்டி



வொஷிங்ரன், நவ. 12
டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்காவின் சிறந்த தலைவராகச் செயற்படுவார் என நம்பிக்கை தெரிவித்தார் தற்போதைய ஜனாதிபதியான ஒபாமா.
அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ட்ரம்பபை எதிர்த்துப் போட்டியிட்ட ஹிலாரிக்கு ஆதரவாக பரப்புரை செய்யதவர்களில் தற்போதைய ஜனாதிபதி ஒபாமாவுக்கும் முக்கிய பங்குண்டு. அவர் தனது பரப்புரைகளில். ட்ரம்ப் ஜனாதிபதியானால் அமெரிக்கா சகல துறைகளிலும் தடுமாறும். அமெரிக்காவை கட்டியெழுப்பக்கூடிய சிறந்த தலைமைத்துவம் ட்ரம்பிடத்தில் இல்லை. என கடுமையாக விமர்சித்தார்.
தேர்தலில் ட்ரம்ப் வெற்றிபெற்றதை அடுத்து, அவர் அமெரிக்காவின் சிறந்த தலைவராகச் செயற்படுவார் என ஒபாமா தெரிவித்தார். ஒபாமா-ட்ரம்ப் இடையிலான சந்திப்பொன்று வெள்ளை மாளிகையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் வைத்தே ஒபாமா இவ்வாறு தெரிவித்தார்.
டொனால்ட் ட்ரம்ப் தனது உரையில் கட்சிப் பேதமின்றி ஒற்றுமையாகச் செயற்பட அனைவருக்கும் அழைப்பு விடுத்துள்ளார். அவரின் இந்தக் கருத்து தன்னம்பிக்கை அளிப்பதாக உள்ளது. நாம் அனைவருமே ஒற்றுமையுடன் நாட்டை தலைமை தாங்க உழைக்கின்றோம். நாட்டுக்கு சிறந்த விடயங்கள் தான் எமக்குத் தேவை என ஒபாமா மேலும் தெரிவித்தார்.
ஒபாமாவைச் சந்தித்ததை மிக மரியாதையாக உணர்கிறேன். இருவரும் மிகவும் ஆழமான திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடினோம். ஒபாமாவை மீண்டும் சந்திக்க ஆவலாக உள்ளேன். ஒபாமா மிகச் சிறந்த மனிதன் என ட்ரம்ப் தெரிவித்தார். (ம-எ)

## எரிக்கப்படுகின்றன நோட்டுக்கள்

இந்தியப் பிரதமர் மோடியின் அறிவிப்பால் பல கோடி பெறுமதியான ரூபாய் நோட்டுக்கள் கிழித்து வீசப்படுகின்றன-தீயிட்டுக் கொளுத்தப்படுகின்றன என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
ஊழலைக் கட்டுப்படுத்துவதற்காக பல திட்டங்களை பரிசீலித்து வந்த மோடி, கடந்த புதன்கிழமை நள்ளிரவில் இருந்து பழைய ஐந்நூறு, ஆயிரம் ரூபாய் தாள்களை புாவனையிலிருந்து நீக்கியுள்ளார். பதிலாக புதிய ஐந்நூறு மற்றும் 2 ஆயிரம் ரூபாய் தாள்களை அறிமுகப்படுத்தினார். இந்தியாவின் கறுப்புப் பணப் பதுக்கல்களை வெளிக் கொண்டுவரும் விதத்திலேயே இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதையடுத்து பலகோடி பெறுமதியான கறுப்புப் பணம் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம-எ)

### இந்தியாவில்
## நோட்டுக்களை மாற்றுவதற்க
## மக்கள் கூட்டம் அலை மோத

புதுடில்லி, நவ. 12
இந்திய அரசு இதுவரை காலமும் நடைமுறையில் இருந்து வந்த 500, 1000 ரூபாய் நோட்டுக்களை பாவனையில் இருந்து நீக்கியதை அடுத்து தம்மிடம் இருந்த குறித்த நோட்டுக்களை மாற்றிடுவதற்காக இந்தியா முழுவதும் பெரும் மக்கள் கூட்டம் அலைமோதுகிறது.




ஊழலைக் கட்டுப்படுத்துவதற்காக பல திட்டங்களை பரிசீலித்து வந்த மோடி, நேற்றுமுன்தினம் நள்ளிரவில் இருந்து பழைய ஐந்நூறு, ஆயிரம் ரூபாய் தாள்களை பாவனையில் இருந்து நீக்கியுள்ளார். பதிலாக புதிய ஐந்நூறு மற்றும் 2 ஆயிரம் ரூபாய் தாள்களை அறிமுகப்படுத்தினார். இந்தியாவின் கறுப்புப் பணப் பதுக்கல்கள் [illegible] வந்தன. இவற்றைக் கட்டுப்படுத்த முடியாமல் மத்திய அரசு தடுமாறியது. இதனையடுத்தே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது. பாவனையில் இருந்து மாற்றப்பட்ட தாள்களை எதிர்வரும் டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் அரச வங்கிகளிலும் ஏனைய அனுமதிக்கப்பட்ட இடங்களிலும் மாற்றலாம் எனவும் மத்திய அரசு அறிவித்தது.
இதனையடுத்து தம்மிடமிருந்த நோட்டுக்களைக் கொடுத்து புதிய வகைத் தாள்களை வாங்குவதற்காக ஒவ்வொரு இடங்களிலும் பெரும் கூட்ட நெ
டது.
இந்தத் திட்டத்தின் மூலம்
பணத்துக்கான பெறுமதிகள்
போயின. கறுப்புப் பணத்
ருப்பவர்கள் அவற்றை
படும்போது பதுக்கல்
அம்பலமாகும் என்பது
கணிப்பாக உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ல் திடீர்க் குழி




# 300 முன்னாள் சிப்பாய்களை கடத்தியது ஐ.எஸ். அமைப்பு

பக்தாத், நவ. 12
ஈராக்கின் மோசூல் பகுதியில் அமைந்துள்ள ஹமாம் அல் அலி கிராமத்தில் வசித்து வந்த 300 ஈராக்கின் முன்னாள் சிப்பாய்களை ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு கடத்தியது என குற்றஞ் சுமத்தப்பட்டது. ஈராக், சிரியா நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஒரு தனிநாடாக பிரகடனப் படுத்தியிருந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பெரும் பலமாக ஈராக்கின் மோசூல் நகரமே உள்ளது. இந்த நிலையில் குறித்த நகரை மீண்டும் கைப்பற்ற ஈராக் பெரும் போரை முன்னெடுத்து வருகிறது. அமெரிக்கா, துருக்கி ஆகியனவும் உதவிக்கு உள்ளன. மோசூலில் உள்ள 25 கிராமங்கள் மீட்கப்பட்டன எனச் ஈராக் தரப்பால் தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில் தமது பின்னடைவைச் சமாளிக்க முடியாத ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினர் ஈராக் இராணுவத்தில் பணியாற்றி முன்னாள் சிப்பாய்கள், ஓய்வு பெற்ற சிப்பாய்கள் என மொத்தம் 300 பேரைக் கடத்திச் சென்றனர் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்தது. (ம-எ)




## ட்ரம்புக்கு சீனாவால் எச்சரிக்கை

அமெரிக்காவின் 45 ஆவது ஜனாதிபதியாகத் தெரிவாகி யுள்ள டொனால்ட் ட்ரம்புக்கு எச்சரிக்கை விடுத்தது சீனா. வெற்றி வாகை சூடியுள்ள டிரம்புக்கு வாழ்த்துக்கள் குவிந்தவண்ணம் உள்ளன. பல்வேறு நாடுகளின் அரசியல் தலைவர்கள் வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர். இந்த நிலையில், புதிய ஜனாதிபதியாகத் தேர்வு செய்யப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்புக்கு சீனா எச்சரிக்கை விடுத்தது. சீனாவுடன் ஆரோக்கியமாக பணி செய்வதை தவிர்த்து தனிமைப்படுத்தல், அடுத்த நாடுகளின் விவகாரங்களில் தலையிடல் போன்றவற்றில் ஈடுபடக் கூடாது என்று சீனா தெரிவித்தது. (ம)



...தவளைகள் ஏறி இருந்து சவாரி செல்லும் இந்தப் படம் இந்தோனேஷியாவின் ஜகார்த்தா நகரில் எடுக்கப்பட்டது. ...ளிப்டக் கலைஞரே குறித்த படத்தை எடுத்தார். குறித்த ஒளிப்படம் இணையத்தளங்களில் பலராலும் விரும்பிப் ...ும் வருகிறது. (ம-எ)

## அமெ. - ஐரோப்பாவை ஒரே தடவையில் தொட்டவர்



பாரிஸ், நவ. 12
அமெரிக்க, ஐரோப்பிய ரெக்ரோனிக் தகடுகளை ஒரே தடவையில் தொட்டுக் காட்டி நீச்சல் வீரரான ஸ்கொட் சாகசம் புரிந்துள்ளார். ஐஸ்லாந்து கடலோரப் பகுதியான சில்பிறாவில் கடலுக்கடியில் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது. குறித்த பகுதியிலேயே அமெரிக்க, ஐரோப்பிய ரெக்ரோனிக் தகடுகள் மிக அருகில் உள்ளன. குறித்த பகுதிக்கு சாகசம் புரிவதற்காக விசேட ஏற்பாடுகளுடன் சென்ற ஸ்கொட் ஒரே தடவையில் இரண்டையும் தொட் டுக்காட்டி சாகசம் படைத்தார். குறித்த ஒளிப்படமும், காணொலியும் இணையத்தில் விரைவாகப் பரவி வருகிறது. (ம-எ)

## ...தாக ...ல்





...நெரிசல் ஏற்பட்...

...பதுக் கப்பட்ட ...ள் இல்லாமற் ...த்தை வைத்தி ... மாற்ற முற் ... தொகைகள் ...து பலரதும் ... (ம-எ)

## ஹிட்லரின் மனைவியின் பொருள்கள் ஏலத்தில்

லண்டன், நவ. 12
ஹிட்லரின் மனைவி ஈவா பிரவுண் உபயோகித்த உள்ளாடை உட்பட மேலும் சில பொருள்கள் அண்மையில் ஏலத்தில் விற்கப்பட்டன. மோதிரம், வெள்ளி பெட்டி, வெள்ளி கண்ணாடி, உதட்டுச்சாயம் மற்றும் அவர் அணிந்த உள்ளாடை உட்பட பல ஏலத்துக்குக் கொண்டு வரப்பட்டன. பிலிப் செறில் எனும் ஏல நிறுவனமே இந்த ஏலத்தை நடத்தியது. உள்ளாடை மட்டும் இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட 4 லட்சத்து 50 ஆயிரத்து விற்கப்பட்டது. ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட பொருள்கள் ஹிட்லரின் மனைவியுடையது என்பதற்கு வலுவான ஆதாரங்கள் உண்டு என ஏல நிறுவனம் தெரிவித்தது. (ம-எ)





# ஐ.நாவின் உதவிக் குழு தற்போது அலெப்போவில்

டமஸ்கஸ், நவ. 12
சிரியாவின் அலெப்போ நகரில் ஐக்கிய நாடுகள் சபையின் உதவிக் குழு தற்போது பணியாற்றி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. அலெப்போ நகரில் முகாமிட்டிருக்கும் சிரிய ஜனாதிபதி அசாத்துக்கு எதிராக கிளர்ச்சிக் குழுவுக்கு எதிராக ரஷ்யாவும், சிரியாவும் குண்டு மழை பொழிந்து வருகின்றன. குறித்த பகுதி மக்கள் பட்டினிச் சாவை எதிர்கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டு வந்த நிலையில், தற்போது ஐக்கிய நாடுகள் சபையின் உதவிக் குழு குறித்த மக்களுக்கு உலர் உணவுப் பொருள்களை வழங்கியுள்ளது.
கிழக்கு அலெப்போவில் அகப்பட்டுள்ள 2 லட்சத்து 50 ஆயிரம் மக்களுக்கு தேவையான உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. குறித்த பொருள்கள் ஒரு வாரத்துக்கு மட்டுமே அவர்களுக்கு போதுமானதாக இருக்கும். கொடும் பட்டினியுடன் மக்கள் பெரும் குளிர் காலத்தை எதிர் கொள்ளவுள்ளனர். இந்த நிலையில் ரஷ்யாவும், சிரியாவும் மனிதாபிமானத்தடன் செயலாற்ற வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்தது. (ம-எ)

## தொழிற்சாலையில் பெரும் தீ விபத்து

இந்தியாவின் உத்தரபிரதேச மாநிலம், சகிபாபாத் மாவட்டத்தில் உள்ள ஆடைத் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 13 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். நேற்றுக் காலை 5.20 மணிக்கு ஏற்பட்ட இந்தத் தீ விபத்து மிக விரைவாகப் பரவியதையடுத்து தொழிற்சாலையில் பணியில் ஈடுபட்டிருந்த 13 பேர் உடல் கருகிச் சாவடைந்தனர். மேலு சிலர் சிகிச்சைக்காக அருகிலிருந்த மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர். மின்சாரக் கசிவு காரணமாக இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று முதல் கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்டது. மேலதிக விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன. (ம-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நவம்பர் மாத எண் ஜோதிடப் பலன்கள்

## 7, 16, 25 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களுக்கு

இந்த மாதத்தில் போராட்டங்களும், தடைகளும் இருந்தாலும் ஓயமாட்டீர்கள். பிரபலங்களின் உதவியுடன் சில காரியங்களை விரைந்து முடிப்பீர்கள். எவ்வளவு பணம் வந்தாலும் பற்றாக்குறை நீடிக்கும். வீடு வாங்கிக் கட்ட வங்கிக் கடன் உதவி கிடைக்கும். பிள்ளைகளை புதிய பாதையில் வழி நடத்துவீர்கள். தள்ளிப் போன திருமணம் கூடி வரும். உறவினர்களின் அன்புத் தொல்லை குறையும். நண்பர்களுடன் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். பூர்வீகச் சொத்திலிருந்த வில்லங்கம், பேச்சு வார்த்தை மூலம் சுமுகமாக முடியும். மாதத்தின் மையப்பகுதியிலிருந்து திடீர் பயணங்கள் அதிகரிக்கும். தூக்கம் குறையும்.

அரச அதிகாரிகளால் தொந்தரவுகள் வந்துப் போகும். உணவு விடயத்தில் கட்டுப்பாடு அவசியம். எதிர்காலம் பற்றிய கவலை அடி மனதில் நிழலாடும். எவரும் உங்களைப் புரிந்துக் கொள்ளவில்லை என அவ்வப்போது ஆதங்கப்படுவீர்கள். அரசியல்வாதிகள் தொகுதி மக்களின் தேவைகளை முழுமை செய்யப்பாருங்கள்.

**பெண்களுக்கு**

பெற்றோரை அனுசரித்துப் போங்கள். நீண்ட நாள்களாக பார்க்க நினைத்த தோழியைச் சந்திப்பீர்கள். வியாபாரத்தில் புது முதலீடு செய்வது பற்றி யோசிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் ஒதுக்கப்பட்டாலும் அதிகாரிகளால் மதிக்கப்படுவீர்கள். கலைத்துறையினர்களே! சம்பள விடயத்தில் கறாராக இருங்கள். ராஜ தந்திரயுக்திகளால் வெற்றி பெறும் மாதம் இது.

**அதிர்ஷ்ட திகதிகள்: 7, 2, 6, 11, 25**
**அதிர்ஷ்ட எண்கள்: 1, 7**
**அதிர்ஷ்ட நிறங்கள்: ஊதா, பிங்க்**
**அதிர்ஷ்ட கிழமைகள்: ஞாயிறு, வெள்ளி**

## 8, 17, 26 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களுக்கு

இந்த மாதத்தில் எதிலும் வெற்றி, இலாபம் கிட்டும். சாணக்கியத்தனமாகப் பேசி சில காரியங்களை சாதிப்பீர்கள். பெரிய மனிதர்களின் நட்பு கிடைக்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும். பிள்ளைகளால் சமூக அந்தஸ்து உயரும். புதிய ஆடை, அணிகலன்கள் சேரும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். வெகுநாள்களாக போக நினைத்த குலதெய்வக் கோயிலுக்கு குடும்பத்துடன் சென்று வருவீர்கள்.

அரசால் ஆதாயம் உண்டு. சிலருக்கு அயல்நாட்டில் வேலை கிடைக்கும். வழக்கில் வெற்றி பெறுவீர்கள். திடீர் யோசனைகள் பிறக்கும். உறவினர்கள் சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். மாதத்தின் முற்பகுதியில் எதிலும் ஒருவித தயக்கம், சிலர் மீது நம்பிக்கையின்மை, எதிலும் ஆர்வமின்மை வந்துப் போகும். அரசியல்வாதிகள் கட்சியின் மூத்த உறுப்பினர்களைச் சந்தித்து சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**பெண்களுக்கு**

பெற்றோருக்கு சில ஆலோசனைகள் வழங்குவீர்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்றுத் தீரும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் தங்களின் சொந்த விடயங்களைப் பகிர்ந்துக் கொள்வார்கள். கலைத்துறையினரின் படைப்புத் திறன் வளரும். சமயோசித புத்தியால் சாதிக்கும் மாதம் இது.

**அதிர்ஷ்ட திகதிகள்:**
**8, 6, 23, 24, 26**
**அதிர்ஷ்ட எண்கள்:**
**2, 5**
**அதிர்ஷ்ட நிறங்கள்:**
**ரோஸ், வெள்ளை**
**அதிர்ஷ்ட கிழமைகள்:**
**திங்கள், புதன்**

**நாளை ஐப்பசி-28**
ஞாயிற்றுக்கிழமை -13.11.2016
திதி: சதுர்த்தசி மு.இ. 10.43
நட்சத்திரம்: அச்சுவினி மு.இ.07.11
ராகுகாலம்:04.37-06.07 வரை
சுபநேரம்: 09.07-10.37 வரை
திருமூலர் குருபூஜை

## ஆவா குழுவின் பின்னணி இராணுவம் என்பது நிரூபணமாகிறதா...?

ஆவா குழுவிலுள்ளவர்களை வழித்துத் துடைக்கும் செயற்பாடாகக்கூறிக்கொண்டு கைது வேட்டையை பொலிஸார் ஆரம்பித்திருந்த நிலையில் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரும் கைதில் களமிறங்கித் தீவிரமாக வேட்டையாடுகின்றனர். பொலிஸார் குற்றவியல் சட்டத்தில் கைது செய்யப்படுவதும்-அவர்களை விளக்கமறியலில் வைப்பதும் கைது செய்யப்படுபவர்களைப் பிணையில் விடுவிக்குமாறு சாதாரண சட்டத்தரணிகளிலிருந்து மூத்த சட்டத்தரணிகள்வரை நீதிமன்றங்களில் வரிந்து கட்டிக்கொண்டு நிற்பதும் தொடரும் நிலையிலேயே பயங்கரவாதப் பிரிவினர் கைதை ஆரம்பித்துள்ளனர். இதுவரை 14 பேர் பயங்கரவாதப் பிரிவினால் கைது செய்யப்பட்டபோதிலும், அவர்களில் அதிகமானவர்கள் ஏதோ ஒரு அடிப்படையில் சமூகவிரோதச் செயற்பாடுகளுடன் தொடர்புபட்டவர்களாக அல்லது அவ்வாறு செயற்படுபவர்களுடன் நெருங்கியவர்களாகக் காணப்படுவதாகத் தெரிகிறது.

சமூக விரோதச் செயல்களில் ஈடுபடும் வாள்வெட்டுக்குழுக்கள், திருடர்கள், கொள்ளையர்கள், வன்புணர்வாளர்கள்... என்று இன்னும் பலர் தண்டிக்கப்படவேண்டியவர்கள் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

அத்தகையவர்களுக்குத் தண்டனை கொடுக்குமளவுக்கு பொதுமக்கள் தயாரான போதும் தண்டனை கொடுக்கும் உரிமை பொது மக்களிடம் இல்லாததனால் இல்லாத உரிமையைக்கொண்டு தண்டிப்பது சட்டவிரோதம் என்பதால் தண்டனை கொடுக்குமளவுக்கு பொதுமக்கள் முன்வரவில்லை. ஆனால், சமூகவிரோதச் செயல்களுக்காகத் தண்டிக்கப்படவேண்டும் என்பதை மறுப்பதற்கு எவருமில்லை.

பயங்கரவாதப் பிரிவினரால் கைது செய்யப்படுபவர்கள் அவர்களுக்கான சட்ட அங்கீகாரத்தின்படி பல மர்தங்களோ பல வருடங்களோ சென்றாலும் கைது செய்யப்படுபவர்களை விடுவிக்கமுடியாதளவுக்கு அங்கீகாரம் உடையவர்களாகவுள்ளனர்.

ஆனால், வாள்வெட்டுக்குழுக்களை ஒழிக்க முற்படும்போது அதன் பின்புலம் என்ன என்பது பற்றி பயங்கரவாதப் பிரிவினர் வெளியிட்ட கருத்தும் நடைமுறையில் உள்ளதும் வேறு வேறாகவே உள்ளன.

யாழ். உள்ளிட்ட முழு வடக்கையும் அச்சுறுத்தும் ஆவா குழுவின் பின்னணியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்களே உள்ளதாகவும்-அவர்களது ஆலோசனைகளுக்கு அமைவாகவே அக்குழு செயற்பட்டுள்ளதாகவும் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவின் சிறப்பு விசாரணைக் குழுவின் விசாரணை அதிகாரியான உப பொலிஸ் பரிசோதகர் நீதிமன்றில் அறிக்கை ஒன்றைத் தாக்கல் செய்தார்.

ஆனால், அதே புலனாய்வுப் பிரிவினர் அதே நீதிமன்றில் மறுநாள் மற்றொரு அறிக்கையைத் தாக்கல் செய்திருந்தனர். அதில், ஆவா குழுவில் இருந்து இயங்கியதாக இராணுவப் சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டதாக மன்றில் அறிக்கையிட்டுள்ளனர். குழுவில் இராணுவத்தினர் இருப்பதாகத் தமக்குத் தெரிவிக்கப்படவில்லை என்று-கொழும்பில் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு இராணுவப் பேச்சாளர் பதிலளித்திருந்தார். ஆனால் ஆவா குழுவுடன் இராணுவத்தினர் தொடர்பில்லை என்று இராணுவப் பேச்சாளரால் உறுதியான பதிலை அதன்போது வழங்கமுடியவில்லை. அது ஒரு சந்தேகமாக இருக்கையில், அவர் அவ்வாறு பதிலளித்த அன்றையதினமே, யாழ். இணுவிலில் கைதானவர் இராணுவச் சிப்பாய்தான் என்று கூறி திமன்றில் மற்றைய நாள் அறிக்கையிட்டனர் பயங்கரவாதப் பிரிவினர்.




தேர்தலில் தமக்குரிய வாக்குகளைச் சிதறடிக்கவே இந்த ஆவா குழு என்றும், இன்னும் பல கருத்துக்களையும் அரசியல் கட்சிகள் தமக்கு ஏற்றவகையில் வெளியிட்டு வருகின்றனர். அது அரசியலைத் தக்கவைத்தலுக்காக இருப்பினும், உண்மையில் அதன் பின்னணி புலிகள்தானா என்பதை ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இல்லை. இராணுவச் சிப்பாய் ஆவா குழுவுடன் தொடர்புடையவர் என்று கைது செய்யப்பட்டிருப்பதும் பொலிஸாருக்கு வாளால் வெட்டப்பட்ட சம்பவத்தில் பொலிஸாருக்கு வெட்டப் பயன்படுத்திய வாள் இராணுவச் சிப்பாயின் ஒன்றுவிட்ட சகோதரனின் வீட்டிலிருந்து மீட்கப்பட்டதாகவும் பயங்கரவாதப் பிரிவினர் கூறியுள்ளனர். அதேநேரம் வாள்வெட்டுக்குழுக்களின் பின்னணி இராணுவத்தினரா என்ற சந்தேகம் எழுவதாக வடமாகாண முதலமைச்சர் கூறியுள்ளதும், முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் கோத்தாவினதும், உயர் அதிகாரிகளினதும் ஆதரவுடனேயே வாள் வெட்டுக் குழு உருவானதாக அமைச்சர் ராஜித கூறியுள்ளமையும் வாள்வெட்டுக்குழுக்களின் பின்னணியில் இராணுவத்தினர் உள்ளனர் என்பதையே நிரூபிக்கிறது. இந்த விடயங்களை விடுத்து, தற்போது இல்லாத புலிகள் மீது குற்றஞ்சுமத்தி தேவையில்லாத பிரச்சினைக்குள் செல்வதை விடுத்து சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்து நடவடிக்கை எடுக்க அரசு முன்வர வேண்டும். மாவீரர் வாரம் என்பதற்காக இவ்வாறான கைதுகள் இருக்கக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே.எஸ்.சிவஞானராஜா



# இயங்கள் கற்றுத்தரும் வாழ்க்கைப் பாடங்கள்

என்றும் உள்ள பொருள், எல்லாம் வல்ல பரம்பொருள் ஒன்றே. பரம் பொருளுக்குள் யாவுமே அடக்கம். ஆதலால், ஆன்மாவும் பரம் பொருளும் வேறுபடும் இரண்டு பொருள்களல்ல. இதுவே அது, அதுவே இது. இறைவனோ விருப்பு- வெறுப்பு அற்றவன். அவ்வாறு இருக்கும்போது, மனிதன் மட்டும் வேறுபடுவதும் மண், பொன், பெண் மீது அதீத ஆசை வைப்பதும் இந்த மண்ணில் எல்லை மீறிப் போய்விட்டது. ஒரு நாட்டின் அரசன் மிகுந்த நாணயமுள்ளவனாகவும் தர்மம் உள்ளவனாகவும் நீதி நியாயமுள்ளவனாகவும் ஒருவனுக்கு ஒருத்தி என்ற கோட்பாடுடையவனாகவும் பெண்களைத் தாயாக மதிப்பவனாகவும் ஊழல், மோசடி இல்லாதவனாகவும் இருந்தால் மக்களும் அவன் வழியே தூய்மையானவர்களாக வாழ்வார்கள். இது அரசனுக்கு மட்டுமல்ல உலகத்தின் கண்ணுள்ள அனைத்து மக்களுக்கும் குறிப்பாக, தலைமைத்துவத்தைப் பேணுபவர்களுக்கு இருக்க வேண்டுமென மக்கள் ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள். இந்த மண்ணுக்கு எதையும் மறைக்கவோ, மறுக்கவோ, மறக்கவோ முடியாதபடி நீர், தீ, காற்று, ஆகாயம் சாட்சி சொல்லத் தயாராகின்றன. ஆகவே, நோயாளிக்குக் கொடுக்கும் உணவுப் பதார்த்தமாம் பத்தியம் போல வாழ்க்கை சத்தியமாகி நித்தியம் சுவாத்தியமாக வேண்டும். சுவாத்தியம் மங்கல வாத்தியங்களிலிருந்தும் வெளிப்படுவதனால் வாழ்க்கையும் பக்தியும் முத்தி நிலைக்கு அழைத்துச் செல்லும் பத்தியமாகிறது. இது சாத்தியமே.

**பத்தியம்**

இது உடம்புக்கு இதமானது. உள்ளத்துக்குச் சுகமானது. ஆபத்து இல்லாதது. ஆரோக்கியமானது. ஒவ்வாமை இல்லாதது. முரண்பாடு இல்லாதது. சோரவிடாதது. சேர வைப்பது. திவ்வியமானது. தீர்க்காயுள் தரவல்லது. திடகாத்திரமானது, அல்லாதனவற்றை அகற்றுவது, ஆடம்பரமில்லாதது, அற்புதமானது, அன்னியப்படுத்தாதது, அவசரப்படுத்தாதது, அலாதியானது, பக்குவமானது, பெறுமதியானது, பேறானது, பொருள் செலவு இல்லாதது. இவ்வளவு வல்லமையும் கொண்ட பத்தியமானது உணவு, உடை, பாவனை நடைமுறையிலும் பேச்சிலும் செயலிலும் குறிப்பாக, கடமையிலும் குடும்ப உறவிலும் மனைவியிலும் மனையிலும் பவித்திரமாக நடப்பதேயாகும்.

பவித்திரம் என்பது தூய்மையைக் குறிக்கும். பவித்திரன் என்பது தூயவன் என்ற பொருள் தருவதாகும். எனவே, பத்தியமாக இருத்தலே இறைவனுக்கு நாம் செய்யும் நைவேத்தியமாகும். என்னைப் பொறுத்தவரை பல பெரியவர்கள் பத்தியமாக இருப்பதை அறவே விட்டுவிட்டார்கள். அவர்கள் சத்தியவான்களாகத் திரிவதை இந்தமண் பூமாதேவியாக இருப்பதனால் பொறுத்துக்கொள்கிறது. இல்லா விட்டால் சூரியன் சுட்டெரித்துவிடுவான். மாறாக, பத்தியம் என்றாலும் அளவாக இருத்தல் அவசியம். அது பைத்தியமாக மாறிவிடக்கூடாது. அவ்வாறு பைத்தியமானால் உடலும் குழப்பமடையும்.உள்ளமும் குழப்பமடையும். செய்யத் தகாதன செய்யச் சொல்லும். உதாரணமாக- மேலங்கியைப் போட்டுக்கொண்டு கோயிலுக்குள் போகச் சொல்லும். போனால் என்ன என்று கேட்கச் சொல்லும். இது என்னுடைய கோவில், யார் என்னைக் கேட்க முடியும்? இது தான் ஆணவத்தின் உச்சக்கட்டம். அகங்காரத்தின் மூலவடிவம்தான் இது. சுகிசிவம் சொன்னது போல, நான் தான் பெரியவன். நான் உயர்ந்த குடிமகன். நான் மேடையில் தான் இருப்பேன். அல்லது முன்வரிசையில் தான் இருப்பேன். இவ்வாறு சிலரின் பத்தியம், கெட்ட பைத்தியமாக இந்த மண்ணில் விளைந்துள்ளது. இந்த வருத்தம் எப்போது நீங்குமோ அப்போதுதான் இந்த மண்ணுக்கு வரம் கிடைக்கும்.

**சம்பாத்தியம்**

பத்தியமான வாழ்வை சாத்தியமாக்கிச் சம்பாத்தியமாக்கினால் அந்த உழைப்புப் பேறாகும், நித்தியமாகும். கடமை செய்பவர்கள், தொண்டு செய்பவர்கள் பயன் கருதாது, அடா வடிகள் இல்லாமல், அடிவருடாமல், பந்தம் பிடிக்காமல், பின்வாசலைப் பயன்படுத்தாமல், பெண்களைக் கையாளாமல், பாலியல் சுரண்டல்கள் இல்லாமல், இலஞ்சம் பெறாமல், பிறர்மனை நாடாமல், கண்ணியமாக உழைத் துக் கடமைக்குத் தெய்வீகம் சேர்ப்பவர்களாக இருந்தால், அந்தச் சம்பாத்தியமே இறைவனுக்கு நைவேத்தியமாக அமைகிறது. பொங்கல், படையல், அபிசேகம், தானம் என்பனவற்றிலும் பார்க்கக் கடமையே இறைவன் எதிர்பார்க்கும் முதல் நைவேத்தியமாகும். அது சரியாயிருந்தால் சம்பாத்தியம் தேகத்திலும் வாழ்விலும் ஒட்டிக்கொள்ளும்.

எனக்குத் தெரிந்த ஒரு சீமான், பணம் எப்படி வருகுது? எப்படிப் போகுது? எப்படிக் கணக்கு வழக்கு? என்ன செய்யிறது? எதற்குச் செய்யிறது? ஒவ்வொரு சதத்தையும் ஒவ்வொரு சோற்றையும் ஒவ்வொரு மனிதரையும் எப்படிப் பேணுவது? என்றெல்லாம் வலுகச்சிதமாகக் கையாண்டு முடிவில் வழக்கிலே மாட்டிக் கொள்வார். இதைவிட காணி, வீடு, முகவர், தரகர், வெளிநாட்டுக்கு அனுப்புதல், வாகன வியாபாரம்- இவ்வாறு சம்பாத்தியம் எக்கச் சக்கமாகிச் சம்பாத்தியம் சுவாத்தியமாகி, இறுதியில் பைத்தியமே ஆகிவிட்டார். நோகாமல் கொள்ளாமல் சொகுசாக வந்த பணம் வந்த வழியே மீண்டும் வந்த இடத்திற்கே சென்றடைந்துவிடுகிறது. இன்னுமொரு முக்கியமான விடயம், கோடி கோடியாய் அநியாயமாய் வந்த பணம்- ஓடி ஓடி வீடு தேடிப்போய் அழிப்பதற்கென ஒருவன் பிறந்தே தீருவான். கோடி சீதனம் வாங்கிய ஒரு சீமானால் கோடி செலவழித்தும் நோயைக் காப்பாற்ற முடியவில்லை. இதில் என்ன விடயம் முக்கியம் என்றால், அந்தக் குடும்பம் வாய் திறந்தால் ஆன்மிகம் நதியாய்ப் பாய்ந்து ஓடும். ஆன்மிகவாதிகள் இலஞ்சமாய் கைநீட்டி, சிவசிவ என்று சொல்லி ஒரு பெண்ணிடம் கோடி பணம் எண்ணி வாங்கலாமா? இது ஒரு சம்பாத்தியமா? கொள்ளை அடித்தல் ஒரு சம்பாத்தியமா? மீற்றர் வட்டி ஒரு சம்பாத்தியமா? கஞ்சா மூலம் பெறும் பணம் ஒரு சம்பாத்தியமா? விபசார மூலம் பெறும் பணம் ஒரு சம்பாத்தியமா? சிவன் சொத்துக்களை அனுபவிப்பது ஒரு சம்பாத்தியமா? சிவன் சொத்துக்களை விற்பதும் அதில் வீடுகள் கட்டி இலவசமாக வாழ்வதும் சம்பாத்தியமல்ல. அதுபோன்று அரச கடமை நேரத்தில் வீட்டுக் கடமையைப் பார்த்துப் பசியாறுவது சம்பாத்தியமல்ல. முன்னர் நான் பணியாற்றிய போது இரண்டு கனவான்கள் இருந்தார்கள். அவர்களிருவருக்கும் ஆண்டவனே பயம் கொள்வார்.

அவர்களின் கடமை ஒரு புறம் இருக்கும். நினைத்த நேரம் வெளியில் போவார்கள். செத்த வீடு, அந்திரட்டி, கோயில் திருவிழா, கும்பாபிசேகம், புத்தக வெளியீடு, அத்திபாரம் போடுதல், திறப்பு விழா, நாடாவெட்டுதல், கல்யாணம் எல்லாமே கடமை நேரத்தில் வலு கெட்டித்தனமாக முடித்துவிட்டு விடுகை நேரத்தில் கையொப்பம் சரியாக இட்டு, அடேயப்பா நல்ல பிள்ளைகளாக வீதியில் செல்லும் போது சம்பாத்தியங்கள் யாவுமே வழக்கிலே சீரழிந் தன. கௌரவம் சரிந்தது. வெள் ளத்தில் வீடு மிதந்தது. வாங்கிய வீடுகள் கூட உதவ வில்லை. யாருமே உதவவும் முன் வரவில்லை. எப்படி? பிறகென்ன? பாடசாலைகளே கைகொடுத்துதவின. இன்னுமே திருந்திய பாடில்லை. நியாயமற்ற சம்பாத்தியங்கள் இனிப்பதேயில்லை.

> பத்தியமான வாழ்வைச் சாத்தியமாக்கிச் சம்பாத்தியமாக்கினால் அந்த உழைப்புப் பேறாகும், நித்தியமாகும். கடமை செய்பவர்கள், தொண்டு செய்பவர்கள் பயன் கருதாது, அடாவடிகள் இல்லாமல், அடிவருடாமல், பந்தம் பிடிக்காமல், பின்வாசலைப் பயன்படுத்தாமல், பெண்களைக் கையாளாமல், பாலியல் சுரண் டல்கள் இல்லாமல், இலஞ்சம் பெறாமல், பிறர்மனை நாடாமல், கண்ணியமாக உழைத் துக் கடமைக்குத் தெய்வீகம் சேர்ப்பவர்களாக இருந்தால், அந்தச் சம்பாத்தியமே இறைவனுக்கு நைவேத்தியமாக அமைகிறது. பொங்கல், படையல், அபிசேகம், தானம் என்பனவற்றிலும் பார்க்கக் கடமையே இறைவன் எதிர்பார்க்கும் முதல் நைவேத்தியமாகும்.


**தாம்பத்தியம்**


பத்தியமில்லாத வாழ்வுக்கும் அநியாயமான சம்பாத்தியத்துக்கும் தாம்பத்திய வாழ்வு ஒருபோதும் இனிப்பதேயில்லை. தாம் தாம்பத்தியமாக இருப்பார்களாக இருந்தால் தாம்பத்தியப் பேறானது வீடு, நாடு முழுவதற்கும் நூறாகச் சித்திக்கும்.

இதுவே இறைவன் விரும்பும் நைவேத்தியமாகும். இது பலகாரமல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்ணம் தீட்டுவோம் வாங்க....





## வரலாற்றில் இன்றைய தினம்

1793 - பாரிஸின் முதல் மேயர் ஜுன் சில்வைன் பெய்லி- தலை துண்டிக்கப்பட்டு சாவுத் தண்டனைக்கு உள்ளானார்.

1918 - ஒஸ்ரியா மக்கள் குடியரசானது.

1982 - சோவியத் யூனியனின் யூரி அன்ட்ரபோப் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய குக் பொதுச் செயலாளரானார்.

1990 - ஜப்பானின் 125 ஆவது முடியரசராக முறைப்படி முடிக்குரிய இளவரசர் அகி ஹிரோ முடி சூடிக் கொண்டார்.

1992 - மட்டக்களப்பு சிறைச்சாலை இராணுவத்தின் பொறுப்பில்.

1999 - யாழ்.இராணுவத் தளபதியாக சரத் முனசிங்க பதவியேற்பு.

1999- வவுனியா நிலைமையடுத்து புளொட் அமைப்புக்கு ஆயுதங்கள்.

2006 - கொழும்பு ரேமண்ட் மலர்ச்சாலையில் ஜனாதிபதியின் பாரியார் ரவிராஜின் உடலுக்கு அஞ்சலி.

## காக்கையின் வகைகள்

காக்கை என்றவுடன் நமக்கு நினைவுக்கு வருவது அதன் கறுமை நிறம்தான். காக்கைகளில் பலவகைகள் உண்டு. மணிக் காக்கை, அண்டங்காக்கை, நீர்க்காக்கை, கத்திமூக்குக் காக்கை, கலிக்கிக் காக்கை, மாட்டுப்புழுக் காக்கை, வெள்ளைக் காக்கை என, பலவகை உள்ளன. நம் நாட்டில் பரவலாகக் காணப்படுவது மணிக்காக்கை மற்றும் அண்டங்காக்கைதான்.



## நாடுகளின் தேசிய மலர்கள்

★ இந்தியா - தாமரை
★ இங்கிலாந்து - ரோஜா
★ சீனா - திராட்சைப் பூ
★ ஜேர்மனி - சோளம்பூ
★ எகிப்து - தாமரைப்பூ
★ அங்கேரி - பூவரசம்பூ
★ ஸ்கொட்லாந்து- நெரிஞ்சிப்பூ
★ பெர்சியா - சிவப்பு ரோஜா
★ பெல்ஜியம் - அசிலியா
★ பிரான்ஸ் - லில்லி
★ கனடா - வெள்ளை லில்லி
★ பாகிஸ்தான் - மல்லிகை
★ ஸ்பெயின் - மாதுளம்பூ
★ ஈரான் - ரோஜா

# சந்தர்ப்பக் கூட்டு தங்கவே தங்காது



மருதப்பருக்குச் சொந்தமான 25 ஏக்கர் மரமுந்திரித் தோட்டம் அந்த ஊரில் இருந்தது. முந்திரி மரங்கள் ஆண்டுக்கு இரு தடவை பூத்துக் காய்க்கும். காய்கள் முற்றிப் பழமாக வந்ததும் பழங்களின் அடியில் ஒட்டியது போன்று இணைந்திருக்கும். முந்திரி விதைகளை வேறாக்கிப் பிரித்து அவற்றைப் பணமாக்கி விடுவார் மருதப்பர். ஆனால், மரமுந்திரி மரங்கள் காய்க்க ஆரம்பித்ததுமே வௌவால், கிளி, அணில், புறா என்று படையெடுக்கும் பிராணிகளை விரட்டி காவல் செய்வதில் மருதப்பருக்கு போதும்போதும் என்றாகிவிடும்.

இந்தப் போகத்துக்கும் அவரது தோட்டத்து முந்திரி மரங்கள் பூத்துக் காய்க்க ஆரம்பித்தன. மருதப்பரும் தோட்டத்தைக் காவல் செய்வதற்கான ஏற்பாடுகளை கவனிக்கலானார். எங்கிருந்தோ வந்த 20 க்கு மேற்பட்ட புறாக்கூட்டம் முந்திரித் தோட்டத்தில் இறங்கின. மருதப்பரும் வெடிகளைக் கொளுத்திப் போட்டார். பழைய தகரப் பேணிகளை மரம் ஒன்றில் கட்டி ஓசை எழுப்பிப் பார்த்தார். வந்த புறாக்கூட்டம் மிரண்டு பறப்பதும் மீண்டும் வந்து முந்திரி மரங்களின் காய்களைக்கூட நாசம் செய்வதுமாக இருந்தன.

பொறுத்துப் பொறுத்துப் பார்த்து சலித்து விட்ட மருதப்பரும் மாற்றுத் திட்டமொன்றை வகுத்தார். புறாக்கள் கூடுதலாக தரையிறங்கும் இடம் ஒன்றைத் தெரிவு செய்து அங்கு ஒரு பெரிய வலையை விரித்துக் கட்டி வைத்தார். அங்கொன்றும் இங்கொன்றுமாக முந்திரிப் பழங்களைப் பரப்பி விட்டார். அவரது தந்திரம் பலித்தது. புறாக்கூட்டம் வலை விரித்திருந்த இடத்தைச் சுற்றி வட்டமிட்டன. வலையில் கிடந்த பழங்களை அவற்றின் கண்களை உறுத்தின. தரைக்கு இறங்கி வந்தன.

வந்தவை அத்தனையும் முந்திரிப்பழ ஆசையால் வலையில் சிக்குண்டன. வலையில் இருந்து வெளிவரவேண்டி சிறகுகளைப் படபட என அடித்துக் கொண்டன. இதனால் அவற்றிக் கால்கள் மேலும் மேலும் வலையில் சிக்குண்டன. தனது திட்டம் வெற்றியளித்ததை எண்ணி மகிழ்வடைந்த மருதப்பர் வலையில் சிக்குண்டு தவிக்கும் புறாக்களை நோக்கி வரலானார். அப்போது புறாக்கள் எல்லாம் தமது தலைவனான கொண்டைப் புறாவிடம் தம்மைக் காப்பாற்றுமாறு கெஞ்சி மன்றாடின.

தலைமைப் புறாவிடம், எல்லோருமாக சேர்ந்து ஒத்தபடி சிறகை அடித்து ஒரே நேரத்தில் மேலே எழுவோமானால் இந்த வலையையும் தூக்கிக் கொண்டு பறக்கலாம். முதலில் தோட்டக்காரனிடமிருந்து தப்புவோம். பிறகு அடுத்ததைப் பற்றி யோசிப்போம் என்றது. அதன்படியே அனைத்துக் புறாக்களும் ஒரே நேரத்தில் ஒன்றாகச் சிறகடித்துப் பறந்தபடியால் வலையையும் சேர்த்துத் தூக்கிக் கொண்டு பறக்கமுடிந்தது. திகைத்துவிட்ட மருதப்பரும் சமாளித்துக் கொண்டு, சரி சரி எவ்வளவு தூரத்துக்குத்தான் உங்களின் ஒற்றுமை. அதையும் தான் பார்ப்போமே என்று தோட்டம் முழுவதும் சலிக்காமல் தேடிப்பார்க்க ஆரம்பித்தார். இருட்டிக் கொண்டு வந்தது. ஆனாலும் அவர் தேடும் முயற்சியைக் கைவிடவில்லை.

அந்தி சாய்ந்து இரவு வர ஆரம்பித்ததும் ஒவ்வொரு புறாவும் ஒவ்வொரு திக்காகப் பறக்க ஆரம்பித்தன. ஒன்றாக ஒரே திக்கில் பறந்தவை தன்னலம் வந்ததும் ஒன்றாகப் பறக்க வேண்டும். ஒரே திசையில் பறக்க வேண்டும் என்பதை விடுத்து தன்னலம் சார் பறப்பை மேற்கொண்டமையால் வலையுடன் "பொத்" என்று தரையில் விழுந்தன.

தனது வீடு, தனது கூடு, தனது குஞ்சு, தனது முட்டை என்ற அவற்றின் தன்னல சிந்தனை அவைகளின் ஒற்றுமையைச் சிதைத்தது. ஒரு தேவைக்காக, ஒரு நோக்குக்காக ஏற்படுத்தப்பட்ட சந்தர்ப்பக் கூட்டு நீண்ட காலம் தங்காது என்பதற்கு இந்தப் புறாக்கள் நல்ல உதாரணம்.

பு.தவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** சூழ்நிலை உணர்ந்து பேசுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேற தாமதமாகலாம். லாபம் சுமாராக இருக்கும். மாணவர்களுக்கு படிப்பில் ஆர்வம் கூடும்.

**இடபம்:** வசீகர பேச்சால் அனைவரையும் கவர்வீர்கள். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணி நிறைவேறும். வருமானம் அதிகரிக்கும். வழக்கு விவகாரத்தில் சாதகமான தீர்வு கிடைக்கும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்கி மகிழ்வர்.

**மிதுனம்:** மனதில் தன்னம்பிக்கை மேலோங்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்கான வாய்ப்பு கிடைக்கும். லாபம் பன்மடங்கு உயரும். மனைவியின் விருப்பம் அறிந்து நிறைவேற்றி மகிழ்வீர்கள்.

**கடகம்:** குடும்ப வியத்தைப் பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் இடையூறுகளைச் சரிசெய்வது நல்லது. மிதமான பணவரவு கிடைக்கும். வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்வது நல்லது.

**சிங்கம்:** குடும்பத்தினருடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கும். திடீர் செலவால் சேமிப்புப் பணம் கரையும். பெற்றோரின் ஆறுதல் வார்த்தை நம்பிக்கையளிக்கும்.

**கன்னி:** மற்றவர் நலனில் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர புதிய வாய்ப்பு உருவாகும். பணவரவு அதிகரிக்கும். பெண்கள் வீட்டு உபயோகப்பொருள் வாங்குவர். இஷ்ட தெய்வ வழிபாடு நிறைவேறும்.

**துலாம்:** உற்சாக மனதுடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் ஆதாயம் அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். குடும்பத்தினருடன் விருந்து, விழாவில் பங்கேற்பீர்கள்.

**விருச்சிகம்:** முக்கிய பணியை பிறர் பொறுப்பில் தர வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மிதமான லாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச் சுமைக்கு ஆளாகலாம். உடல் நலனுக்காக சிலர் சிகிச்சை மேற்கொள்ள நேரிடும்.

**தனுசு:** நண்பர்களால் சிரமத்துக்கு ஆளாவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். பெண்கள் ஆடம்பர எண்ணத்தை தவிர்ப்பது நல்லது. பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்ல நேரிடலாம்.

**மகரம்:** உறவினரால் உதவி உண்டு. தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்கான வாய்ப்புக் கிடைக்கும். லாபம் படிப்படியாக உயரும். பணியாளர்களுக்கு நிர்வாகத்தினரின் பாராட்டும், பரிசும் கிடைக்கும். ஆரோக்கியம் பலம் பெறும்.

**கும்பம்:** பேச்சு, செயலில் குழப்பம் உருவாகி மறையும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் சுமாராக இருக்கும். உறவினர் வருகையால் வீட்டுச் செலவு அதிகரிக்கும். மாணவர்கள் பாதுகாப்பற்ற இடங்களுக்குச் செல்ல வேண்டாம்.

**மீனம்:** வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த முயல்வீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் பன்மடங்கு உயரும். பணியாளர்கள் பணிச் சுமையில் இருந்து விடுபடுவர். பெண்கள் குடும்பத்தினருடன் விருந்து விழாவில் பங்கேற்பர்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 8 | | 5 | | | | | |
| | 2 | 7 | | | | | | 8 |
| | 5 | | | | 7 | 4 | | |
| | | 6 | | 5 | 8 | 1 | 9 | |
| | | | 6 | 9 | 3 | | | |
| | 7 | 9 | 4 | 1 | | 3 | | |
| | | 4 | 3 | | | | 1 | |
| 7 | | | | | | 5 | 4 | |
| | | | | | 4 | | 7 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 2 | 3 | 6 | 7 | 8 | 1 | 9 | 4 |
| 6 | 4 | 7 | 1 | 2 | 9 | 5 | 8 | 3 |
| 9 | 8 | 1 | 3 | 4 | 5 | 2 | 6 | 7 |
| 2 | 3 | 5 | 9 | 1 | 6 | 7 | 4 | 8 |
| 8 | 9 | 6 | 7 | 5 | 4 | 3 | 2 | 1 |
| 1 | 7 | 4 | 2 | 8 | 3 | 6 | 5 | 9 |
| 3 | 5 | 2 | 4 | 9 | 1 | 8 | 7 | 6 |
| 4 | 1 | 8 | 5 | 6 | 7 | 9 | 3 | 2 |
| 7 | 6 | 9 | 8 | 3 | 2 | 4 | 1 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க் கரீதியான ஒழுங்கு படுத் தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களை யும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே யும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற் கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

ஒரே வயிறுன்னு ஓவரா செல்லம் குடுத்தது தப்பாகிப் போச்சு...



இப்போ 'தொப்பை'ன்னு பேர் வாங்கிட்டு வந்து நிக்குது...

ஏங்க ரொம்ப நேரமா நம்ம கல்யாண பத்திரிக்கைய உத்து பாத்து கிட்டிருக்கீங்க...



இல்ல இதில 'எக்ஸ்பயரி டேட்' எங்காவது போட்டிருக்காங்களான்னு தேடிக் கிட்டிருக்கேன்...!



சாப்பாட்டுல நீளமா முடி இருக்கேன்னு... பொண்டாட்டிக்கிட்ட கேட்டா... அது காத்துல பறந்து வந்து விழுந்துருக்கும்... எடுத்து தூக்கி போட்டுட்டு சாப்பிடுங்கன்னு அசால்டா சொல்றா...

சட்டைல நீளமான முடி இருந்ததுக்கு... சண்டைக்கு வரா...!

இப்ப காத்துல முடி வராதா என்ன லாஜிக்னே புரியல....!

**வழிபோக்கன்** @Mhdyahi

எப்படி நம்மால் ஒருவர் மனம் புண்பட்டு விட்டது என்று தெரிந்த பின்பும் சிலரால் உயிர் வாழ முடிகிறது?

1



# சிவாஜி-டி.ஆர்-விஜய் வரிசையில் ஜெயம்

நடிகர்-நடிகைகளின் வாரிசுகள் சினிமாவில் நடிப்பது சகஜம்தான். ஆனால் அவர்கள் இணைந்து ஒரே படத்தில் நடிப்பது அரிதான ஒன்று. கதை அமையும்போது அப்படி வாய்ப்பு வந்தால் நடிப்போம் என்பார்கள்.

இந்த நிலையில் சாதனை படத்தில் சிவாஜி மற்றும் பிரபு இணைந்து நடித்தனர். ஒரு தாயின் சபதம், என் தங்கை கல்யாணி உள்ளிட்ட பல படங்களில் டி.ராஜேந்தர் மற்றும் அவரது மகன் சிம்பு இணைந்து நடித்தனர். தியாகராஜன்-பிரசாந்த் மற்றும் நாசர்-லுத்புதீன் பாட்ா ஆகியோரும் இணைந்து நடித்துள்ளனர். இவர்களைத் தொடர்ந்து, விஜய் அவரது மகன் சஞ்சய் உடன் வேட்டைக்காரன் படத்தில் ஒரு பாட்டுக்கு இணைந்து நடித்தார்.

தற்போது ஜெயம் ரவி தனது மகன் ஆரவ் உடன் சௌந்தரராஜன் இயக்கும் 'டிக் டிக் டிக்' படத்தில் இணைந்து நடிக்கிறார். இதனை ஜெயம் ரவியே தன் டுவிற்றர் பக்கத்தில் உறுதிப்படுத்தியுள்ளார்.

ஸ்கூலில் இருந்து ஒரு பையன் கையில் கட்டுடன் டாக்டரை பார்க்க வந்தான்.
என்னப்பா என்ன பிரச்சினை?
கையில அடிபட்டிச்சு.
சரி காட்டு என்று கட்டுப்போட்ட கையைத் தொட்டார்.
இல்ல டாக்டர், இந்த கை என்று மாற்றிக் காட்டினான்? டாக்டருக்கு குழப்பம்.
என்னப்பா வலது கையில தானே கட்டு போட்டிருக்க.
இல்ல டாக்டர் இடது கைதான். இந்த பசங்களைப் பற்றி உங்களுக்குத் தெரியாது எந்த கையில அடிபட்டுச்சோ அந்த கைமேலேயே விழுவானுங்க. அதுக்குத் தான் கட்ட மாத்தி போட்டிருக்கேன்.

WhatsApp

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிகை அலங்கரிப்பு



1 தலை முடியை பாதி யாகப் பிரித்து, படத்தில் காட்டியுள்ளவாறு வூல் பாண்ட் இட்டுக் கொள்ளவும். பின்னர் பின்னலை பின்னி அடிப்பகுதியையும் வூல் பாண்ட் இட்டுக் கொள்ளவும்.

2 பின்னலை பொலிவாக இழுத்துக் கொள்ளவும்.

3 பின்னர் படத்தில் காட்டியவாறு சுற்றிக் கொள்ளவும்

4 கிளிப் செய்து அலங்காரத்தை நிறைவு செய்யவும்.




## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்



| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 500 | 500 | – | 650 | 700 | – |
| நண்டு | 250 | 400 | 200 | – | 450 | 200 | 500 |
| கணவாய் | 600 | 650 | 400 | – | 550 | – | – |
| பாரை | 550 | 500 | 400 | – | 650 | 600 | 350 |
| சுறா | 500 | 500 | 500 | – | 700 | – | 350 |
| சீலா | 300 | 350 | 300 | – | 450 | 400 | 300 |
| விளை | 650 | 400 | 300 | – | 500 | 400 | 350 |
| முரல் | 300 | 200 | 300 | – | 400 | 300 | 300 |
| கும்பிளா | 400 | 300 | 400 | – | 400 | 300 | – |
| கிளாக்கன் | 800 | 800 | 300 | – | 500 | – | – |
| ஓரா | 400 | 300 | 300 | – | 300 | 300 | – |
| திரளி | 300 | 200 | 100 | – | 250 | 200 | – |
| நகரை | 250 | 200 | 100 | – | 300 | – | 300 |
| சூடை | 150 | 100 | 100 | – | 200 | 150 | – |
| ஒட்டி | 300 | 150 | 200 | – | 300 | – | – |
| திருக்கை | 150 | 300 | 200 | – | 400 | – | – |
| மதனம் | 150 | 200 | – | – | 300 | – | 200 |
| கொய் | 100 | 100 | 50 | – | 120 | 100 | – |
| பாலை | 400 | 150 | 300 | – | 400 | 400 | – |
| வாழை | 100 | 150 | – | – | 300 | 200 | – |

## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்



| | மருதனார்மடம் | சாவகச்சேரி | [illegible] | நெல்லியடி | திருநெல்வேலி | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 70 | 50 | 60 | 60 | 40 | 40 | – | 50 |
| கத்தரி | 60 | 70 | 60–80 | 100 | 40–60 | 60 | – | 35 |
| கரட் | 80 | 80 | 60–120 | 100 | 80–120 | 140 | – | 100 |
| மரவள்ளி | 60 | 60 | 40 | 60 | 50–60 | 60 | – | 60 |
| பயிற்றை | 120 | 130 | 160 | 100 | 100–120 | 160 | – | 60 |
| பாகல் | 140 | 160 | 160 | 120 | 120–140 | 180 | – | 70 |
| கருணைக்கிழங்கு | 60 | 80 | 80 | 100 | 60–80 | 120 | – | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 100 | 100 | 80 | 100 | – | 80 |
| சி.வெங்காயம் | 120 | 120 | 100 | 120 | 100 | 140 | – | 70 |
| பூசணி | 40 | 40 | 30 | 50 | 30 | 70 | – | 30 |
| தக்காளி | 80 | 70 | 60 | 60 | 60 | 80 | – | 40 |
| வாழைக்காய் | 50 | 50 | 40 | 50 | 40 | 80 | – | 40 |
| கீரை | 20 | 20 | 30 | 20 | 20 | 40 | – | 20 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 30 | 25 | 20 | 40 | – | 10 |
| பச்சை மிளகாய் | 60 | 60 | 60 | 50 | 60 | 80 | – | 70 |
| புடோல் | 70 | 50 | 60 | 60 | 60 | 60 | – | 50 |
| கோவா | 70 | 80 | 80 | 80 | 70 | 80 | – | 50 |
| வெண்டி | 80 | 80 | 80 | 60 | 60 | 40 | – | 30 |
| போஞ்சி | 160 | 160 | 180 | 140 | 180 | 220 | – | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 | 120 | 120 | 160 | – | 100 |
| தேங்காய் | 50 | 30 | 45 | 40 | 30 | 40 | – | 30 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 | 120 | 110 | 100–120 | 120 | – | 120 |
| தேசிக்காய் | 500 | 550 | 500 | 500 | 500–550 | 600 | – | 200 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 10 | 20 | – | 10 |
| கறிமிளகாய் | 120 | 120 | 120 | 100 | 120 | 140 | – | 70 |
| இராசவள்ளி | – | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 80 | 60 | 60 | 40 | 60 | 80 | – | 100 |



## இது புதுசு





நாகரிகமான சோபாக்கள் அறிமுகமாகி யுள்ளன. வெல்வெற், தோல், சிறப்பு உறை களால் தயார் செய்யப்பட்டுள்ளன. நவீன மான வடிவங்களில் அதிக தலையணைகள் காணப்படுகின்றன. உருளைவடிவான அமைப்புடன் மிக நாகரிக மாக உருவாக் கப்பட்டுள்ளன. அளவு அமைப்புக்கு ஏற்ப விலைகள் மாறுபடும். நவீன ரகமானவை 35 ஆயிரத்தில் இருந்து 1 லட்சம் வரை விற்பனை செய்யப்படுகின்றன.

## உளுந்து சோறு

### தேவையான பொருள்கள்

உளுந்து – 300 கிராம்
அரிசி – ஒரு கிலோ
வெந்தயம் – அரை மேசைக்கரண்டி
சீரகம் – ஒரு மேசைக்கரண்டி
பூண்டு – 3
தேங்காய் – ஒரு மூடி
உப்பு – 4 மேசைக்கரண்டி

### செய்முறை

தேங்காயைத் துருவி வைத்துக் கொள்ளவும். பூண்டை தோல் உரித்து எடுத்துக் கொள்ளவும். சட்டியில் உளுந்தைப் போட்டு 5 நிமிடம் வறுத்து எடுத்துக் கொள்ளவும். வாசனை வரும் வரை வறுக்கவும்.

ஒரு பாத்திரத்தில் $2\frac{1}{2}$ கப் தண்ணீர் ஊற்றி கொதிக்க விடவும். தண்ணீரின் அளவு அரிசி உளுந்து இரண்டும் வேகும் அளவுக்கு எடுத்துக் கொள்ளவும்.


அதில் அரிசியை களைந்து போட்டு, வறுத்த உளுந்தையும் சேர்க் கவும். பின்னர் சீரகம், வெந்தயம், பூண்டு போட்டு வேக விடவும். அரிசி முக்கால் பதம் வெந்ததும் உப்புப் போட்டு நன்கு கிளறி விடவும். சோறு, உளுந்து இரண்டும் வெந்ததும் தேங்காய் துருவல் போட்டு நன்கு கிளறி விடவும்.

எல்லாம் சேர்ந்து நன்கு வெந்ததும் கிளறி இறக்கி வைத்து விடவும். இதனுடன் கத்திரிக்காய் பச்சடி அல்லது கறி குழம்பு சேர்த்து சாப்பிடலாம்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவீரர்களுக்கு சபையில் நேற்று கூட்டமைப்பு அக வணக்கம்

வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வரவு-செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரை யாற்றியபோதே அவர்மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
வீரச்சாவை, உயிரிழந்தவனின் சமாதியை அழிப்பவன் கௌரவமானவன் அல்ல. ஆனால் கடந்த ஆட்சியில் எமது மாவீரர்களின் சமாதிகள் - வீர மறவர்களின் புகழுடல்களைத் தாங்கிய கல்லறைகள் புல்டோசர்கள் கொண்டு அழிக்கப்பட்டன. கார்த்திகை மாதம் தமிழர்களின் விரத மாதம். எமக்காக உயிர்நீத்த மாவீரர்களை நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்தும் மாதம்.

நாம் மாவீரர்களை நினைவு கூர்ந்தால் - நினைவுறுத்தினால் இராணுவத்தினரின் வயிற்றில் புளி ஊறுகின்றது.

போரில்உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலிகளைச் செலுத்தவும் எமக்காக உயிர் நீத்த மாவீரர்களுக்குச் சமாதி கட்டவும் எமக்கு உரிமை இல்லையா? தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாது உங்களின் பொருளாதார அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட எந்த வரவு - செலவுத் திட்டத்தையும் விருத்தி செய்ய முடியாது - என்றார். (த-5)

# ஒரு நாள் ஆட்டமல்ல இது டெஸ்ட் போட்டி

## நல்லாட்சி குறித்து சபையில் அமைச்சர் கபீர் காசிம்

நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான முதலாம் நாள் விவாதத்தில் அவர் மேலும் தெரிவித்தாவது:
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தவிர இந்தச் சபையில் இருக்கும் ஏனைய அனைத்துக் கட்சியினரும் ஏதாவது ஒருகாலப் பகுதியில் அரசொன்றில் அங்கம் வகித்திருக்கின்றனர். 10, 20 வருடங்கள் ஆட்சியில் இருந்திருக்கின்றனர். அவர்கள் தீர்க்கத் தவறிய பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினைகள் தான் இன்று விஸ்வரூபம் எடுத்து நிற்கின்றன.

பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினைகள் இந்த வருடத்தில் உருவாகியதில்லை. மைத்திரிபால சிறிசேன மற்றும் ரணில் விக்கிரமசிங்கவின் காலத்தில் உருவாகியதில்லை. ஒன்றிணைந்த எதிர்கட்சியில் தற்போது இருப்பவர்கள் ஆட்சியில் இருந்த கடந்த காலங்களில் உருவாகிய பிரச்சினைகளே தற்போது காணப்படுகின்றன.

சிலருக்கும் இன்று ஞாபக மறதி நோய் ஏற்பட்டுள்ளது. நாங்கள் உங்களைப்போன்று மக்களை அடக்குமுறைக்கு உட்படுத்தவில்லை. 10, 20 வருடங்களாக ஆட்சியில் இருந்தபோது உருவாக்கிய பிரச்சினைகளைத் தீர்க்காமல் தற்போது இவர்கள் சுத்தமானவர்கள் போன்று பேசுகிறார்கள். சிறந்த நடிகர்களாகவும் இருக்கின்றனர்.

மகிந்தவின் ஆட்சிக் காலத்தின் போது 2014 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் அத்தியாவசிய பொருள்களுக்கு வரிகள் அதிகரிக்கப்பட்டன. வரிகள் எதுவும் அதன்போது குறைக்கப்படவில்லை என்று நாம் கூறவில்லை. நாய் உணவுகளுக்கே அந்த வரவு - செலவுத் திட்டத்தில் வரி குறைக்கப்பட்டது. அன்று அவற்றுக்கு ஆதரவளித்த தற்போதைய பொது எதிர்க்கட்சியினர் இந்த வரவு - செலவுத் திட்டத்தைப் பார்த்து வெறும் வரி விதிப்பென விமர்சிக்கின்றனர்.

2020ஆம் ஆண்டாகும்போது அடைவதற்கான 5 இலக்குகள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்டுள்ளன. 10 லட்சம் தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல், சகல குடும்பங்களினதும் வருமானங்களை அதிகரித்தல், பிரதேச மற்றும் கிராமியப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல், சகல மக்களுக்குமான காணி உரிமையை வழங்குதல், பலமான மத்திய தர மக்களை உருவாக்குதல் ஆகியனவே அவை. நாம் இந்த இலக்குகளை நோக்கிச் செயற்படுகிறோம்.

2017ஆம் ஆண்டை வறுமை ஒழிப்பு வருடமாக ஜனாதிபதி சிறிசேன பிரகடனப்படுத்தியுள்ளார். நாம் அதை எமது பணியிலக்குகளில் உள்வாங்கியுள்ளோம்.

ஐரோப்பிய ஒன்றியத்தைப் பொறுத்த வரையில் 4 ஆயிரம் பில்லியன் யூரோ பெறுமதியான சந்தைப் பொருளாதாரம் இருக்கிறது. 500 மில்லியன் மக்கள் இருக்கின்றனர். ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை கடந்த ஆட்சியாளர்களினால் இல்லாமலாக்கிக் கொள்ளப்பட்டது. இலங்கையின் ஆடைத் தொழிற்துறை உற்பத்தி மற்றும் ஏற்றுமதி 42 சதவீதம் வீழ்ச்சியடைந்ததுடன், 782 மில்லியன் அமெரிக்க டொலர் இழப்பும் ஏற்பட்டது. அவர்களால் திரும்ப பெற்றிருக்க முடியவில்லை.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் பிரஸ்சல்ஸ் சென்றிருந்தபோது ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை திரும்பப் பெறுவது தொடர்பில் வெற்றிகரமான முன்னெடுப்புகளை மேற்கொள்ள முடிந்துள்ளது. இது எமக்கு கிடைத்த வெற்றியாகும் - என்றார். (த-5)

# 65000 வீடுகளுக்கு மாற்றுத் திட்டம்

## உள்ளூர் வங்கிகளின் துணையுடன் முன்வைத்தது கூட்டமைப்பு

ஆராய்ந்து தயாரித்த புதிய வீட்டுத் திட்டத்துக்கு உதவ ஐந்து உள்ளூர் வங்கிகள் முன்வந் துள்ளன. இவ்வாறுதமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்றஉறுப் பினரும், அந்தக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வரவு- செலவுத் திட்ட விவாதத்தை ஆரம் பித்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் தெரிவித்த தாவது:
வடக்கில் 65 ஆயிரம் வீடுகளை அமைத்துக் கொடுக்கும் திட்டத்தை மீள்குடியேற்ற அமைச்சர் முன்வைத்தார். இந்தத் திட்டத்துக்கு நாம் எதிர்ப்புத் தெரிவித்தோம். இரும்பு உருக்கிலான பொருத்து வீடுகள் வேண்டாம். பல தடவைகள் இடம்பெயர்ந்த மக்கள் சொந்த வீட்டில் இருக்கவே விரும்புகின்றனர். பொருத்து வீடுகளை அவர்கள் தங்களுடைய பிள்ளைகளுக்கு வழங்கிச் செல்ல முடியாது. இந்த வீடுகளுக்கு அத்திவாரங்கள் இல்லை.

இவ்வாறு அமைக்கும் வீட்டுக்கான செலவு 7 லட்சம் ரூபாவாக மதிப்பிடப்பட்டது. அமைச்சர் முன்வைத்த வீடொன்றின் பெறுமதி இதனைவிட மூன்று மடங்கு அதிகமானது. எமது மக்களுக்கு வீடுகள் அவசியம். இது தொடர்பில் சிவில் அமைப்புக்களுடன் இணைந்து நாம் ஆராய்ந்தபோது வீட்டுத் திட்டத்துக்கு உதவ ஐந்து உள்ளூர் வங்கிகள் முன்வந்துள்ளன. இது பற்றிய திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. 65 ஆயிரம் வீட்டுத் திட்டத்துக்கு மாற்றான திட்டமொன்றைச் சபையில் சமர்ப்பிக்கின்றேன். இதற்கமைய ஒவ்வொரு வீடும் தலா 8 இலட்சம் ரூபா பெறுமதியானவை. ஏனைய வசதிகளுடன் வீடொன்று ஏறக்குறை ஒரு மில்லியன் பெறுமதியில் அமைக்க முடியும். மீள்குடியேற்ற அமைச்சர் முன்மொழிந்த வீட்டின் பெறுமதியைவிட அரை மடங்கு குறைந்த விலையில் இந்த வீடுகளை அமைக்க முடியும்.

2017 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் வடக்கில் 50 ஆயிரம் வீடுகளை அமைப்பதற்கு 5 பில்லியன் ரூபா ஒதுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. வீடொன்றுக்கு ஒரு மில்லியன் ரூபா செலவாகிறது. நாம் முன்வைக்கும் திட்டத்துடன் இது ஒத்துப்போகிறது. இதனைக் கவனத்தில் எடுக்குமாறு அரசிடம் கேட்கின்றோம்.

வடக்கில் வீடுகள், கடைத் தொகுதிகளைக் கொண்ட கலப்புத் திட்டமொன்றை அமைப்பதற்கான யோசனையொன்றும் முன்வைக்கப்பட்டுள்ளது. ஒரு பில்லியன் ரூபாவில் இதனை அமைப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. ஒரு கட்டடத்தை அமைப்பதற்கு எதற்கு ஒரு பில்லியன் ரூபா? நாம் அவ்வாறானதொரு கட்டடத்தைக் கேட்கவில்லை. மக்களின் பொருளாதாரத்தையும் வாழ்வாதாரத்தையும் ஊக்குவிப்பதற்கே நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்-என்றார். (த-5)

# காங்கேசன் ரயில்நிலையம் அருகே காணிகள் விடுவிப்பு

பார்வையிடலாம் என்று வலி.வடக்குப் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

வலி. வடக்கில் 454 ஏக்கர் நிலப்பரப்பு பொதுமக்கள் பாவனைக்குக் கையளிக்கப்பட்டது. எந்தெந்தப் பிரதேசங்கள் விடுவிக்கப்பட்டன என்பது தெரியாமையினால், மக்கள் சில பகுதிகளைச் சென்று இதுவரையில் பார்வையிடவில்லை.

காங்கேசன்துறை மத்தி (ஜே-234), காங்கேசன்துறை தெற்கு (ஜே-235) கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட காங்கேசன்துறை ரயில் நிலையத்துக்குப்பின்புறம்உள்ள கல்லூரி வீதி, 3ஆம் குறுக்குத் தெரு, சோதி வீதி, கேசரி வீதி என்பன விடுவிக்கப்பட்டன. இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்களை, அவர்களது காணிகளைப் பார்வையிட வருமாறும், தமக்குரிய கிராமசேவையாளர்களிடம் பதிவுகளை மேற் கொள்ளுமாறும் பிரதேச செயலக வட்டாரங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன. (த-5)

# அமைச்சர்களை விசாரிக்க குழு

## தீர்மானம் கோரும் வடக்கு ஆளுநர்

வடக்கு மாகாண சபையின் அமைச்சர் குழாமுக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்கு, முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் ஓய்வு பெற்ற நீதிபதிகள், ஓய்வு பெற்ற மாவட்டச் செயலர் ஆகியோரை உள்ளடக்கிய குழு நியமிக்கப்பட்டது. இந்தக் குழுவின் செயற்பாட்டுக்கு நிதி வழங்குவதற்கு வடக்கு மாகாண ஆளுநரிடம் அனுமதி கோரப்பட்டிருந்தது.

மேற்படி குழு நியமிப்புக்காக வடக்கு மாகாண சபையில் நிறை வேற்றப்பட்ட பிரேரணையை அனுப்பி வைக்குமாறு, வடக்கு மாகாண ஆளுநர் குரே, பேரவைத் தலைவரிடமும், வடக்கு மு லமைச்சரிடமும் கோரியுள்ளார். கடிதம் பேரவைத் தலைவருக்கு மு வரியிட்டு முதலமைச்சர், ஜனாதிபதி, ஜனாதிபதியின் செயலா தலைமைச் செயலர் ஆகியோருக்குப் பிரதியிடப்பட்டுள்ளது. (த-5-

# பிரபாகரனுடன் ஒப்பந்தம் செய்து அரசமைக்கவில்லை

## பிரதமர் சபையில் தெரிவிப்பு

செய்து ஆட்சி பீடம் ஏறவில்லை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் மகிந்த அணி நேற்று வெள்ளிக்கிழமை எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினரான தினேஸ் குணவர்தன, ஜனாதிபதி செயலகம் முன்பாக சிறப்புத்தேவையுடைய படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பில் கேள்வி எழுப்பினார். இதற்குப் பதிலளித்த பிரதமர் உங்களின் (நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ்குணவர்தன) கேள்விக்குச் சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரட்ணாயக்க நாளை (இன்று) பதிலளிப்பார். ஆனால் நான் ஒன்றைக் கேட்க விரும்புகின்றேன். சிறப்புத்தேவையுடைய படையினரின் போராட்டத்தில் பிக்குகள் கலந்துகொண்டது ஏன் ? பௌத்தத்தில் பிக்குகளுக்கு இயலாமை ஏற்பட்டு விட்டதா ?

சிறப்புத்தேவையுடைய படையினரின் பிரச்சினைகள் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சில்தான் கலந்துரையாடல் நடத்தப்படவிருந்தது. இந்த நிலையில் ஜனாதிபதி செயலகத்துக்குச் செல்வதற்கு அவர்களை உசுப்பேற்றி விட்டவர்கள் யார்? அவ்வாறு செய்வது தவறானது என்றார்.

இதன்போது எழுந்த நாடா மன்ற உறுப்பினர் விமல் வன்ச, எல்லாப் போராட்டங்க லும் பிக்குகள் பங்கேற்பது பிர ருக்குத் தெரியாதா எனக் கேட் இதற்குப் பதிலளித்த பிரத ரணில், நான் சோபித தே தொடர்பில் எதுவும் கூறவில்ல ஆனால் கடந்த ஆட்சியில் ரின் போராட்டங்களைத் தடு துடன் பிக்குகளுக்கிடையே பிளவை ஏற்படுத்தினார்கள். ந துட்டகைமுனுவுடனோ, எல்ல னோடோ அல்லது பிரப னோடோ ஒப்பந்தம் செய்து அ பீடம் ஏறவில்லை என்றார். (த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.கல்வி வலய வினாடி வினாப் போட்டியில் புனித பரியோவான் கல்லூரி முதலிடத்தை பெற்றுக்கொண்டது.



புனித பரியோவான் கல்லூரி



யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி



யாழ்.மத்திய கல்லூரி

போட்டி நிகழ்வில் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி இரண்டாம் இடத்தையும் யாழ்.மத்தியகல்லூரி மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டது

சம்பத் வங்கியின் கூட்டு சமூகப் பொறுப்பு (CSR- Corporate Social Responsibility) திட்டத்தின் கீழ் யாழ். கிளையினரால் வருடந்தோறும் நடத்தப்பட்டு வருகின்ற யாழ்ப்பாணம் கல்வி வலயப் பாடசாலை களுக்கிடையிலான வினாடி வினாப் போட்டியில் நடப்பாண்டுக்கான போட்டி நிகழ்வில், யாழ்.புனித பரியோவான் கல்லூரி முதலிடத்தை பெற்றுக்கொண்டது.

தொடர்ச்சியாக நான்காவது வருடமாகவும் இடம்பெற்றுள்ள மேற்படி போட்டி நிகழ்வில் யாழ். கல்வி வலயத்தைச் சேர்ந்த 27 பாடசாலைகள் கலந்து கொண்டிருந்தது. போட்டி நிகழ்வில் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி இரண்டாம் இடத்தையும்,யாழ்.மத்தியகல்லூரி மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த போட்டி நிகழ்வின்போது பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக் கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட பீடாதிபதி பேராசிரியர் த.வேல் நம்பி,சிறப்பு விருந்தினராக சம்பத் வங்கியின் வட பிராந்திய முகாமை யாளர் ப.சங்கர் மற்றும் உதவி பிராந்திய முகாமையாளர் த.அரவிந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர். வெற்றி பெற்ற பாடசாலை மாணவ அணிகளுக்கான பதக்கங்களையும், கேடயங்களையும் , பணப்பரிசில் களையும் வழங்கி கௌரவித்தனர்.

## விற்பனைச் செயற்பாடுகளை இடைநிறுத்தவுள்ளது மைக்ரோசொப்ட்




கோடிக்கணக்கான கணினி களில் இயங்குதளமாக செயற்பட்டுவரும் விண் டோஸ் இணையதளத்தின் பிரதான அங்கமான விண் டோஸ்-7 மற்றும் விண் டோஸ்-8 இயங்குதளங் களின் புதிய விற்பனை செயற்பாடுகளை வருங் காலத்தில்நிறுத்திக்கொள்ள வுள்ளதாக மைக்ரோ சொப்ட் நிறுவனம் அறி வித்துள்ளது.

இதன்பிரகாரம் எதிர் காலத்தில் புதிதாக தயா ரிக்கப்படும் கணினிகளில் விண்டோஸ்-7 மற்றும் விண்டோஸ்-8 பதிவேற் றம்செய்யப்படமாட்டாதுஎன அறியத் தந்துள்ளது. அத் துடன் அனைத்து கணினி களுக்கும் விண்டோஸ்-10 இயங்குதளம் மூலமாக செயற்படக்கூடிய வகை யிலே வடிவமைக்கப்பட் டுள்ளதாக அந்த நிறுவ னம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, இதுவரை காலமும் பயன்படுத்திவரு கின்றகணினிஇயங்கு தளங் களை இன்னும் சில காலம் வரைபயன்படுத்தலாம்என சுட்டிக்காட்டியுள்ளது.

விண்டேஸ்-7 இயங்குதள மானது கடந்த 2009ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது என்பதுடன்விண்டோஸ்-8 இயங்குதளமானது 2012 ஆம் ஆண்டு தொடங் கப்பட்டது என்பது குறிப் பிடத்தக்கது.

## வணிகம்

# தேசிய வெற்றியாளராக கொமர்ஷல் கிரெடிட்

ஆசிய சந்தைப்படுத்தல் சிறப்பு விருதுகள் நிகழ்வில் நடப்பாண்டுக்கான சந்தைப்படுத்தல் கம்பனி விருதை கொமர்ஷல் கிரெடிட் பெற்றுக்கொண்டது.

கொரியாவின் சியோல் நகரில் அண்மையில் இடம்பெற்ற 2 ஆவது ஆசிய சந்தைப்படுத்தல் சிறப்பு விருதுகள் (AMEA) நிகழ்வில் சந்தைப்படுத்தல் துறையில் ஆசியாவின் மிக முக்கியமான நிர்வாக ஆளுகை அமைப்பாக திகழும் ஆசிய சந்தைப்படுத்தல் சம்மேளனத்தினால், நடப்பாண்டின் சந்தைப்படுத்தல் கம்பனி விருதுப் பிரிவின் தேசிய வெற்றியாள ராக கொமர்ஷல் கிரெடிட் நிறுவனம் அறிவிக்கப்பட்டது.

நிறுவனத்தினதும் ஊழியர்களின தும் வளர்ச்சிக்கு பங்களிப்பு செய் யக்கூடிய வகையிலே பல்வேறு சந்தைப்படுத்தல் தந்தி ரோபாயங்களை நடை முறைப்படுத்தி காண்பித் தமைக்காகவே இந்த விருது வழங்கி வைக்கப் , பட்டது.




இந்த அங்கீகா ரம் தொடர்பில் கருத்துரைத் துள்ள கொமர் ஷல் கிரெடிட் நிறு வனத்தின் பிரதம தொழிற்பாட்டு அதிகாரி ரஜீவ் காசி சிட்டி,

“கொமர்ஷல் கிரெடிட் நிறுவனம் தொடர்ச்சியாக கடைப் பிடித்து வருகின்ற புத்தாக்கமான சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்கள் மற்றும் பெறுமானங்களை இவ்விருது அங்கீகரித்து பாராட்டுகின்றது. அத்தோடு விற்பனை வளர்ச்சி, சந்தைப்பங்கு மற்றும் தேறிய வருமானம் ஆகியவற்றில் இவ்வாறான மூலோ பாயங்கள் பெற்றுத் தந்துள்ள பெறுபேறுகளை மேலும் வெளிக்காட்டுவதாகவும் அமைகின் றது.

இந்த விடயமானது எமது நிறுவனத்தின் பயணத்தில் ஒரு குறிப்பிடத்தக்க மைல் கல்லாக காணப்படுகின்றது" - என்றுள் ளார்.

சந்தைப்படுத்தல் துறையிலான மதிப் பீட்டின் போது முன்னிலையிலுள்ள கம்பனிகளுக்கே இந்த சிறப்பு விருதுகள் வழங்கப்பட்டது.

எ.எம்.எவ். அங்கத்துவ நாடுகளி னுள் பங்களாதேஷ், கம்போடியா, சீனா, ஹொங்கொங், இந் தோனேஷியா, ஜப்பான், கொரியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங் கப்பூர், இலங்கை, தாய்வான் மற்றும் தாய்லாந்து ஆகி யவை உள்ளடங்கு கின்றமை குறிப்பிடத் தக்கது.

# நிவாரணக் கடன் திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு மடிக்கணினிகள்

பல்கலைக்கழக மாணவர்களுக்கு நிவாரணக் கடன் திட்டத் தின் கீழாக மடிக் கணினி களைக் கொள் வனவு செய்வதற்கான வாய்ப்புக் களை ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாகவும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான கல்வி நிறுவ னங்களின் எண்ணிக் கையை அதிகப்படுத்து வதற்கு தாம் தீர்மானித் துள்ளதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அண் மையில்தெரிவித்தார்.


ஹொங்கொங்கில் இடம் பெற்றுவரும் ஜேர்மனின் வர்த்தகத்துக்கான 15 ஆவது ஆசிய பசுபிக் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளதுடன் “13 வருட பாடசாலைக் கல்வி மற்றும் கற்றல் செயற்பாடுகளை கட்டாய மாக்குவதுடன், தொழிற் றுறையை மேம்படுத்தி, அதன்வழி முன்னிலை பெறும் சிறந்த முன்மாதிரிச் சமூகம் ஒன்றை உரு வாக்க வேண்டும்.அதன் ஊடாக இலங்கையில் முக் கிய சீர்திருத்தங்களை முன் னெடுத்துச் செல்லவுள் ளோம். அடுத்த இரண்டு வருடங்களுக்குள் உயர்தர மாணவர்களுக்கு இலவச வகுப்புக்களை வழங்குவ தற்கு நாம் நடவடிக்கை எடுப்போம்” - என்றுள் ளார்.அதேவேளை, ஜேர் மனின் பிரதி தூதுவர் சிக்மா கெப் ரியலுடன் இருதரப்புக் கலந்துரை யாடலிலும் பிரதமர் ஈடுபட்டதாகவும் ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையை மீண்டும் பெற்றுக்கொள் ளும் நடவ டிக்கைகளில் இலங் கைக்கு தங்களுடைய முழு ஒத்துழைப்பை வழங்க சிக்மா கெப்ரியல் இணக்கம் தெரி வித்துள் ளதாகவும் பிரதமர் அலு வலகம் மேலும் சுட்டிக் காட்டியுள்ளது.

## பங்குச் சந்தை தகவல்கள்

CSE COLOMBO STOCK EXCHANGE

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை – யாழ் கிளை 147-2/3, K.K.S Road Jaffna - 212221455

| 11/11/2016 | | |
|---|---|---|
| www.cse.lk | | |
| சுட்டிகள் | இன்று | நேற்று |
| ASPI ↓ -5.19 | 6,415.59 | 6,420.78 |
| S&P SL20 ↓ -3.68 | 3,589.97 | 3,593.65 |
| வியாபாரப்புரள்வு | 112,413,448 | 294,312,544 |
| உள்நாடு:- கொள்வனவு | 107,186,016 | 229,258,272 |
| விற்பனை | 108,750,864 | 244,079,792 |
| வெளிநாடு:- கொள்வனவு | 5,227,436 | 65,054,276 |
| விற்பனை | 3,662,590 | 50,232,748 |




| அதிகூடிய பங்குப்பரிமாற்றம் கம்பனி | குறியீடு | இறுதி விலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| டோக்கியோ சிமெண்ட் | TKYO.N0000 | 63 | 431,844 | 27,480,545 |
| செரெண்டிப் ஹோட்டேல்ஸ் | SHOT.N0000 | 25.5 | 594,370 | 15,750,287 |
| சிலோன் கிரேன் எலிவேட்டர்ஸ் | GRAN.N0000 | 90.0 | 75,469 | 6,846,725 |
| டோக்கியோ சிமெண்ட் | TKYO.X0000 | 53.5 | 119,381 | 6,429,056 |
| சம்பத் வங்கி | SAMP.N0000 | 266 | 20,383 | 5,390,434 |
| அக்ஸஸ் இஞ்சினியறிங் | AEL.N0000 | 25.9 | 199,141 | 5,175,541 |
| சிற்றிசன் டெவலப்மென்ட் பைனான்ஸ் | CDB.N0000 | 76 | 64,552 | 4,906,114 |
| கண்டி ஹோட்டேல்ஸ் | KHC.N0000 | 7.0 | 525,875 | 3,681,127 |
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.N0000 | 149.5 | 16,615 | 2,487,186 |
| ரெக்ஸ்டைல் பொலி | TJL.N0000 | 45 | 38,658 | 1,740,258 |

அறிவித்தல்கள்

பங்குலாபம்

சிலோன் [illegible] (CCS) - பங்கு ஒன்றிற்கு [illegible]

லங்கா [illegible] (LHCL) - பங்கு ஒன்றிற்கு Rs. 1.00

கொமர்சியல் வங்கி (COMB) - பங்கு ஒன்றிற்கு Rs. 1.50

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| கம்பனிகள் | 294 |
| பரிமாற்றத்தில் | 186 |
| விலை உழைப்பு | 13.3 |
| புத்தகப்பெறுமதி | 1.5 |
| பங்குலாப விளைவு | 3 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீள்குடியமர்வுக்கு...

றத்தில் நேற்று நடைபெற்ற 2017ஆம் நிதியாண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான முதலாம் நாள் விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

2016ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டதிலும் பார்க்க 2017ஆம் ஆண்டுக்கான வரவு –செலவுத் திட்டத்தில் அரச செலவினம் குறைந்துள்ளது. செலவுகளைக் குறைப்பதற்காக மூலதனச் செலவினங்கள் குறைக்கப்பட்டுள்ளன. மூலதனச் செலவினங்களைக் குறைப்பதன் மூலம் எப்படி வளர்ச்சியை எட்ட முடியும் என்பதே இங்குள்ள கேள்வியாகும். இது எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்தும்.

வருவாய் திரட்டலைப் பரவலாக்கப் போவதாகக் கடந்த வரவு – செலவுத் திட்டத்தில் முன்மொழிவொன்று முன்வைக்கப்பட்டிருந்தது. பிரதேச செயலாளர்களுக்குப் பணியிலக்குப் பொறுப்பை வழங்கும் இந்த ஏற்பாட்டை நாம் வரவேற்றிருந்தோம். எனினும், துரதிர்ஷ்டவசமாக இந்த முக்கிய முன்மொழிவு நடைமுறைப் படுத்தப்படவில்லை. அது மட்டுமல்லாது, இந்த விடயம் பற்றிய எந்தவொரு குறிப்பும் இம்முறை சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு-செலவுத் திட்டத்தில் இடம் பெற்றிருக்கவுமில்லை.

அரச நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்துவது தற்காலிக நிவாரணமாக இருக்கலாம். ஆனால், நீண்ட கால நோக்கில் பார்க்கும்போது இந்த நகர்வானது பாதிப்பான தாக்கத்தையே ஏற்படுத்தும்.

கல்வித் துறைக்கான ஒதுக்கீடானது கடந்த வருடத்தையும் விட இந்த முறை குறைக்கப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாது, ஒதுக்கீடுகள் அதிகரிக்கப்பட்டிருக்க வேண்டிய பல்வேறு துறைகளுக்குமான ஒதுக்கீடுகள் இம்முறை குறைக்கப்பட்டுள்ளன.

விவசாயம் மற்றும் கிராமிய பொருளாதார அபிவிருத்தி போன்ற விடயங்கள் தொடர்பில் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் உறுதியான முன்மொழிவுகளைக் காணக் கிடைக்கவில்லை. சில விடயங்களுக்கு ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலுமே கூட அது போதுமானதாக இல்லை. முன்னுரிமைகள் வேறு எங்கோ இருக்கின்றன.

கல்விப் பொதுத் தராதர உயர் தரத்தில் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதியைப் பெறாதவர்கள் தனியார் உயர்கல்வி கல்லூரிகளுக்கு பிரவேசிப்பதற்கு கடன் வசதி வழங்கப்படும் என்ற முன்மொழிவானது கல்வித்துறை தனியார் மயப்படுத்தலை சுட்டிக்காட்டுகிறது. இந்த விடயத்தை நான் எதிர்க்கவில்லை. இந்த முன்மொழிவு முன்வைக்கப்படுவதற்கு முன்னதாகக் கலந்துரையாடப்பட்டிருக்கவேண்டும். ஏனெனில், கொள்கைகளுக்காக ஒதுக்கீடுகள் இருக்க வேண்டுமே தவிர, ஒதுக்கீடுகள் கொள்கைகளைத் தீர்மானிப்பதாக இருக்கக் கூடாது.

வடக்கின் மீள்குடியேற்றம் உள்ளிட்டவற்றுக்கான ஒதுக்கீடு போதுமானதல்ல. கடந்த வருடம் குறைந்த பணம் ஒதுக்கப்பட்ட போது உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு நடத்தப்பட்டு மேலதிக பணம் வழங்கப்படும் என்று அரசு கூறி யது –என்றார். (த-5)

## வடக்கு மக்களின்...

மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். இந்தியாவின் 'த இந்து' ஊடகத்துக்கு வழங்கியுள்ள செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

தென்னிலங்கை மக்கள் கூட்டாட்சி என்ற சொல்லுக்கும், வட பகுதி மக்கள் ஒற்றையாட்சி என்ற சொல்லுக்கும் அச்சப்படுகின்றனர். இந்தச் சொற்கள் தொடர்பில் விவாதம் நடத்திக் கொண்டிருப்பதை விட, அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய-திருப்தியடையக் கூடிய முறைமையைக் கொண்டுவர வேண்டும். அதிகாரப் பகிர்வு தொடர்பில் முதிர்ச்சி ஏற்படுவதற்குக் காலம் எடுக்கும். வடக்கிலும்-தெற்கிலும் இருக்கின்ற தீவிரப் போக்குடையவர்களின் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்திசெய்ய முடியாது. சரியானதும், பெரும்பான்மையான மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியதையுமே செய்ய முடியும்.

**பன்னாட்டுப் பொறிமுறை**

நாம் ஆட்சிக்கு வரும்போது எமது நீதித்துறை பலவீனமாக இருந்தது. சிறுபான்மையினர் நீதித்துறையின் மீது நம்பிக்கை வைக்கவேண்டும் என்பதற்காகவே, சிறுபான்மையினத்தைச் சேர்ந்த ஒருவரைத் தலைமை நீதியரசராக நியமித்தோம். கடந்த காலங்களில் தொலைபேசி அழைப்புக்களை மேற்கொண்டு நீதிமன்றத் தீர்ப்புக்களை மாற்றியது போல நாம் செய்யவில்லை. நீதித்துறையில் நாம் தலையீடு செய்யவில்லை.

எமது அரசமைப்பில் பன்னாட்டு நீதிபதிகளை அனுமதிக்க முடியாது. அரசமைப்பை மீறி எதுவும் செய்ய முடியாது.

வடக்கு மக்களின் முழுமையான நம்பிக்கையைப் பெற்றுக் கொள்ளும் நீதிப் பொறிமுறையையே உருவாக்க விரும்புகின்றோம். வெளிநாடுகளில் உள்ள நீதித்துறை தொடர்பான இலங்கையர்களின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்வோம். பன்னாட்டு விசாரணையைக் கோருகின்றவர்களும் ஏற்றுக் கொள்ளக் கூடியநடைமுறையையேபின்பற்றவிரும்புகின்றோம். எல்லோரையும் நூறு வீதம் திருப்திப்படுத்த முடியாது. இது இயற்கை. பெரும்பான்மையானவர்கள் திருப்திப்படுத்துவதைச் செய்ய முடியும்.

மேலும், கடந்த காலங்களில் எந்தவொரு நாட்டின் தலைவரும் செய்யாததை நான் செய்துள்ளேன். பதவியேற்று 22 மாதங்களில் 11 தடவைகள் வடக்குக்குச் சென்றுள்ளேன். அங்கு சென்று தமிழ்த் தலைவர்களை மாத்திரம் நான் சந்திக்கவில்லை. மக்களைச் சந்தித்தேன். வடக்கு மக்களில் 90 சதவீதமானோர் எனக்கு வாக்களித்திருக்கின்றனர். நான் அவர்களது பிரச்சினைகளைத் தீர்ப்பேன் என்று நம்பி வாக்களித்தனர். அவர்களின் பிரச்சினையைத் தீர்த்து வைப்பது எனது பொறுப்பு.

புதிய அரசமைப்பின் ஊடாக எல்லோரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய நல்லிணக்கம் உருவாகும். இந்தச் செயற்பாடுகள் சிங்கள-பௌத்த மக்களையும் திருப்திப்படுத்தும் வகையில் செயற்படுத்தவேண்டும். சிங்கள மக்கள் இதனை எதிர்த்தால் நாம் நல்லிணக்கச் செயற்பாட்டை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியாது என்றார். (த-5)

**45ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்**

மண்ணில் 1933 . 07 . 05



விண்ணில் 2016 . 09 . 29

சரசாலை மத்தி சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் 2ஆம் கண்டம், முத்துவிநாயகபுரம், ஒட்டுசுட்டானை வதிவிடமாகவும் கொண்ட

**அமரர் இளையதம்பி பொன்னுத்துரை**

கடந்த 29.09.2016 சிவபதமடைந்த எனது அன்புத் தந்தையின் 45ஆம் நாள் நினைவு நிகழ்வும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் நாளை மறுதினம் (14.11.2016) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பை அனைவரும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

116/02, முத்துவிநாயகபுரம், முத்துஐயன்கட்டு, ஒட்டுசுட்டான்.

மகன்: பொ.பாஸ்கரன்(சிறி) 077 2417075

(J6053)(10,17,19)

## மரண அறிவித்தல்கள்

### செல்லத்துரை மோகன்



கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை மோகன் கடந்த (08.11.2016) செவ்வாய்க்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-மங்களம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் சொர்ணம் தம்பதியரின் அன்பு மருமகனும் பவானியின் பாசமிகு கணவரும் டர்ஜன், பானுஜன், சதுர்ஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் பத்மாவதி (ஜேர்மனி), சறோஜினிதேவி (கனடா), மதிமுகன், மனோதீபன்(ஜேர்மனி), சியாமளா, காலஞ்சென்ற காந்திமதி மற்றும் வளர்மதி (ஜேர்மனி), மால்மருகன் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும். அன்னாரின் சகோதரன் மதிமுகன் இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வைத்தியசாலை அருகில், கோப்பாய் மத்தி, கோப்பாய்.

(ஜே.6057) (16.17.19)

தகவல்: மதிமுகன் (சகோதரன்) 077 0340842

### திருமதி இந்திராதேவி (கிளி) சுப்பிரமணியம்



தெல்லிப்பழை குருநாத சுவாமி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் அம்பனை அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இந்திராதேவி சுப்பிரமணியம் 08.11.2016 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பிள்ளையினார் - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற உஸ்திரா மற்றும் வசந்தாதேவி, ஆனந்தராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் வதனி, வரதராஜன்(இத்தாலி), வசந்தராஜன்(உரிமையாளர் - P.S.V கேட்டின்ஸ் அன்ட் குசன்ஸ்), வனஜா, வசந்தரூபன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜெயக்குமார்(கட்டார்), சுதர்சினி, மதனிகா, சுகிர்தன் ஆகியோரின் பாசமிகு மாமியும் நிதுசனன் , கம்சிகா, கேதாயினி, தர்மிகா, வித்ஜன், யஸ்வினி, சேருஜன், பிருந்தவி, சரன்ஜா, கிருஷியன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(13.11.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கேணிப்பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அம்பனை அளவெட்டி - வடக்கு.

(J 6055), (14,17,21)

தகவல்: குடும்பத்தினர்.

076 707 3511 / 077 235 6076

## கண்ணீர் அஞ்சலி

எமது சனசமூக நிலைய தலைவர் கா. சசிகரன், விளையாட்டுக்கழகத் தலைவர் கா. சுதாகரன் ஆகியோரின் அன்புத் தாயார்

**திருமதி செல்வராணி காசிநாதன்**



அவர்கள் 10.11.2016 இறைபதமடைந்து விட்டார். அவரது மறைவையொட்டி துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கொக்குவில் மத்திய சனசமூக நிலையமும் விளையாட்டுக் கழகமும்

K.C.C.C & K.C.C.C S.C

(J 6054) (16,17,19)

## மரண அறிவித்தல்

### இராசதுரை கதிர்வேல் முதலித்தம்பி



பிறப்பு 31.08.1947 இறப்பு 10.11.2016

கண்டியைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கு, சிவகாமி அம்மன் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்வேல் முதலித்தம்பி கடந்த (10.11.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசதுரை-பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும் கமலாதேவியின் பாசமிகு கணவரும் சுமத்திராதேவி (ஜேர்மனி), சறோஜினிதேவி (கனடா), மகாலட்சுமி (இணுவில்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சிவநேசன், குலேந்திரராஜா, ஜீவராஜ் ஆகியோரின் மைத்துனரும் சுபாகரனின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.11.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிவகாமி அம்மன் கோயிலடி, இணுவில் கிழக்கு, இணுவில்.

(ஜே.6049) (16.17.19)

தகவல்: இராசதுரை குடும்பத்தினர். 076 6191416

**கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு**

வான்கோழிக்குஞ்சு, சிலிக்கிக்குஞ்சு, ஊர் கோழிகள் விற்பனைக்கு உண்டு.

(J 6059)(16,17,19) 076 3488645

**பணியாளர்கள் தேவை**

யாழ் நகரிலுள்ள கையடக்க தொலைபேசி விற்பனை நிலையத்திற்கு
1) தொலைபேசி விற்பனையாளர்
2) சிட்டை எழுதுனர்
3) உதவியாளர்
4) Sim card/ Kit card விற்பனையாளர்கள் தேவை.

தகைமை O/L,A/L

(C 23374) (16,17,19)

தொடர்பு: 077 3611282

**வேலை வாய்ப்பு**

பொதி செய்தல் வேலைக்கு பெண் பிள்ளைகள் தேவை. சுய விவரக் கோவையுடனும், சிபாரிசுக் கடிதத்துடனும் மதியம் 2.00 மணியிலிருந்து 4.00 மணி வரை நேரில் வரவும்.

(திங்கள்-சனி) (C 23378) (16,17,19)

தொடர்பு: சிவர் நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 021 222 2567

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### தாமோதரம்பிள்ளை சண்முகநாதன்

(ஓய்வு பெற்ற பிரதம போதனாசிரியர், அஞ்சல் பயிற்சி நிலையம், மட்டக்களப்பு, முன்னைநாள் முகாமையாளர் வடிவேலர் மணிமண்டபம், அல்லையம்பதி - சமாதான நீதிவான், கரவெட்டி. )



அல்லையம்பதி, துன்னாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை சண்முகநாதன் 11.11.2016 வெள்ளிக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோ தரம்பிள்ளை - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும் இராமலிங்கம் - பாய்க் கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் சந்திரமலரின் அன்புக் கணவரும் தா. சிவகுருநாதன், தா.விஜயநாதன் ஆகியோ ரின் அன்புச் சகோதரரும் திருமதி சி.செல்வநாயகி, திருமதி வி.செல்வராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் திருமதி பகீரதி கலைச்செல்வன்(ஆசிரியர் - யா/குடத்தனை அ.மி.த.க.பாடசாலை), திருமதி சுமதினி உதயகுமார்(ஆசிரியர் யா/தாளையடி றோ.க.த.க.பாடசாலை), காலஞ்சென்ற சுகந்தினி சுரேஸ்குமார், திருமதி யாழினி வைகுந்தராசா, சண்முகநாதன் உமாகாந்தன்(மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் - யா/போதனாவைத்தியசாலை) திருமதி காயத்திரி மயூரன் (தாதிய உத்தியோகத்தர் ஆதார வைத்தியசாலை - பருத்தித்துறை) ஆகியோரின் அன்புத் தந்தையும் தி.கலைச்செல்வன் (முகாமைத்துவ உதவியாளர் பிரதேச செயலகம் - கோப்பாய்), சு.உதயகுமார் (வர்த்தகர்), பா.சுரேஸ்குமார்(சமுர்த்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் (கரவெட்டி), த.வைகுந்தராசா (வர்த்தகர்), திருமதி சுபாஷினி உமாகாந்தன்(வங்கி அலுவலர் மக்கள் வங்கி - பருத்தித்துறை), ம.மயூரன்(உரிமையாளர் மயூரா தொலைத் தொடர் பகம் - அல்லையம்பதி) ஆகியோரின் அன்பு மாமனாரும் உ.அனுஷாந், உ.வினுஷா, க.துளசிகா, சு.அபிலாஷ், வை.சந்தோஸ்ஜி, வை.அபிஷா ஆகியோரின் அன்புப் பாட்டனாரு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.11.2016) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று மு.ப 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கருகம்பன் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


அல்லையம்பதி,
துன்னாலை, கரவெட்டி.

(C/23373),
(14,17,21)

தகவல்:
குடும்பத்தினர்.

**தொடர்பு : 077 670 1185(மகன்)**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
28 . 03 . 1938

மறைவு
13 . 10 . 2016

### அமரர் சுப்பிரமணியம் கந்தசாமி

ஆலமரம் போல் நிழல்பரப்பி
ஆணி வேர் ஊன்றி எமக்கு வழிகாட்டி வந்த
எங்கள் குடும்ப விளக்கே! இன்று நாள்களே
31 ஆகியும் ஆறவில்லை எங்கள் நெஞ்சம்
ஆறுவதற்கு ஓர் வழியிருந்தால்
அதையேன் காட்டிவிட்டு செல்லவில்லை
சிவன் பாதத்தில் நீங்கள் அமர பிரார்த்திப்போம்

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

சு. கந்தசாமி
பொன்னாலை வீதி,
மானிப்பாய்.

(j/8084)
(12.18.21)

குடும்பத்தினர்.

## யாழ்...

சபையுடனான சந்திப்பில் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தினால் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

நகரில் 5 நாள்களாகச் சுகாதாரத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். நகரின் சுகாதாரச் சீர்கேடுகள் தொடர்பில் பத்திரிகைகள் செய்திகள் வெளியிட்டுள்ளன. பொறுப்பு வாய்ந்த உள்ளூராட்சி அதிகாரிகள் எவரும் நடவடிக்கை எடுக்கவில்லை. நகரில் ஒரு நாள் சுத்திகரிப்பு நடைபெறாது விடினும் எந்தளவு பாதிப்பு ஏற்படும் என்பதை அறிந்திருந்தும், அதிகாரிகளின் பாராமுகத்தினால், நகர உணவு விடுதிகளின் உரிமையாளர்கள் மிகவும் கொந்தளித்துள்ளனர்.

உணவகங்களில் துர்நாற்றம் வீசும் நிலைமையும், மக்களின் ஆரோக்கியம் பாதிக்கப்படக் கூடிய ஏது நிலையும் காணப்படுகின்றது. இதைப் பொதுச் சுகாதாரத்தைக் கண்காணிப்பவர்களும் கண்டும் காணாதது போல் இருப்பது குறித்தும் அவர்கள் விசனமடைந்துள்ளனர்.

போர்க் காலத்தில் கூட இவ்வாறான நிலை இருந்ததில்லை என்று உணவு விடுதி உரிமையாளர்கள் அங்கலாய்கின்றனர். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாண அரசும் கூடக் கண்டுகொள்ளவில்லை. இதன் மர்மம் தான் புரியவில்லை.

பொறுப்புக் கூற வேண்டியவர்கள் மௌனமாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதனால் அப்பாவி மக்கள் பாதிக்கப்பட முடியாது. அவர்களின் நலன் கருதி உடனடியாக உணவு விடுதிகளை நிலைமை சீர்திருந்தும் வரையில் மூடி விடுவதாக உணவு விடுதி உரிமையாளர்கள் இன்று (நேற்று), வணிகர் கழக நிர்வாக சபையுடன் நடந்த கூட்டத்தில் அறிவித்துள்ளார்கள்.

சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் தங்கள் பொறுப்புக்களைஉணர்ந்து நிலைமையைச் சீர்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அல்லது உடனடி மாற்று ஏற்பாட்டை மேற்கொள்ள வேண்டும் - என்றுள்ளது. (த-5)

## நன்றி நவிலல்



திருமதி **திரேசம்மா பூகோனப்பர்**

கடந்த 03.11.2016 வியாழக்கிழமை இறைபதமடைந்த எமது அன்புத் தாயாரின் மரணச் சடங்கில் சகல வழிகளிலும் எமக்கு உதவிய உற்றார், உறவினர், தேவாலய பங்குத் தந்தை, பாடகர்குழு அனைவருக்கும் நன்றி கூறுகின்றோம்.

**ஜெபத்துரை மற்றும் குடும்பத்தினர்.**
**நவாலி தெற்கு, மானிப்பாய்.**

## நீங்கா நினைவலைகள் அமைதியே ஆனந்தம்

14 ஆம் ஆண்டு



பாரகம்
28.05.1928

பரமபதம்
03.12.2002

அமரர் **கே.ஜி.மகாலிங்கம்**
(இளைப்பாறிய பாடசாலை அதிபர்)

25 ஆம் ஆண்டு



பாரகம்
31.08.1930

பரமபதம்
13.11.1991

அமரர் **விடியா புண்ணியவதி மகாலிங்கம்**
(இளைப்பாறிய ஆசிரியை)

" உயிரோடிருந்து என்னில் விசுவாசம் வைக்கிறவன் எவனும் என்றென்றைக்கும் மரிப்பதேயில்லை "

' புண்ணியமகால் '
அல்வாய் வடமேற்கு, அல்வாய்.

நீங்கா நினைவுகளுடன்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



*அமரர்* **திருநாவுக்கரசு இராணிரத்தினம்** *(இராணி)*

| மண் மகிழ | கண் நெகிழ |
|---|---|
| 21.03.1945 | 11.10.2016 |

கடந்த 11.10.2016 அன்று இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவி அமரர் திருநாவுக்கரசு இராணிரத்தினம் அவர்களின் மரணச் செய்தி அறிந்து வைத்திய சாலைக்கும் வீட்டிற்கும் வந்து பல வழிகளில் உதவிபுரிந்த ஸ்ரீறங்கன் என்ரப்பிறைஸ் உரிமையாளர் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள், தொலைபேசி மூலம் வெளிநாட்டில் உள்ள உறவினர், உயிர்த் தோழர்கள், அனுதாபம் தெரிவித்த அத்தனை உள்ளங்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (12.11.2016) சனிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**"இராணி பவனம்"**
**போத்தலை, மாவிட்டபுரம்.**

குடும்பத்தினர்.
**077 167 3649**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஆவா குழு...

கொழும்பு நீதிவான் மன்றில் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் அறிக்கையிடப் பட்டது.

யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டவர்களில் 4 பேரை கொழும்பு நீதிவான் மன்றில் நேற்று பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் முற்படுத்தினர். இதன்போதே சந்தேகநபர்கள் மீது மேற்கண்டவாறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் மன்றில் அறிக்கை தாக்கல் செய்தனர்.

சில நாள்களுக்கு முன்னர்வரை 14 பேர் வரையில் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டனர். அவர்கள் பகுதி பகுதியாக நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் 4 பேர் கொழும்பு மேலதிக நீதிவான் அருணி ஆட்டிக்கல முன்னிலையில் நேற்று முற்படுத்தப்பட்டனர். அதன்போது அறிக்கை ஒன்றையும் பயங்கரவாதப் பிரிவினர் மன்றில் முன்வைத்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்களுடன் சேர்ந்து இவர்கள் ஆவா என்ற குழுவை உருவாக்கி, அதன் மூலமாக அரசுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தினர் என்று அந்த அறிக்கையில் குற்றஞ்சாட்டப் பட்டது. அத்துடன் முன்னர் 3 பேர் வீதம் 6 பேர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது, அறிக்கையிட்டிருந்த குற்றச் சாட்டுக்களையும் இணைத்திருந்தனர். அதுமட்டுமன்றி கொள்ளைச் சம்பவங்களுடனும் அவர்கள் தொடர்புபட்டுள்ளதாகவும் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களான ரவீந்திரன் நிதர்சன், லோகநாதன் தர்சிகன், மகாதேவன் கந்தகன், ரவீந்திரன் நிலூசன் ஆகியோரே நேற்று மன்றில் முற்படுத்தப் பட்டனர். அவர்களில் நிதர்சனின் கால் பகுதியிலிருந்தே கத்தியின் தலைப் பகுதியை மீட்டதாகவும் மற்றையவர்களிடமிருந்து வாள் கத்தி என்பனவற்றை மீட்டதாகவும் அறிக்கையிட்டனர்.

இவர்களில் கந்தகன் இந்தமுறை ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சை எழுதவுள்ளவர் என்று கூறப்பட்டதனால், அவரைச் சிறைச்சாலை ஊடாகப் பரீட்சை எழுத ஏற்பாடு செய்யமுடியும் என்று நீதிமன்று தெரிவித்ததாகக் கூறப்பட்டது. அவர்கள் 4 பேரையும் எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது.

இதுதவிர, நேற்றுமுன்தினமும் ஒருவர், அதே நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு 16 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இதனைவிட ஏற்கனவே 2 நாள்களில் 3 பேர் வீதம் 6 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (வ-4-21)

## யாழ்ப்பாண...

நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன நாடாளுமன்றத்தில் நேற்றுக் கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:

கடந்த சில நாள்களாக சிறப்புத் தேவையுடைய இராணுவத்தினர் தமது கோரிக்கைகளை வலியுறுத்திப் போராட்டத்தில் ஈடுபட்டனர். ஜனாதிபதி செயலகத்துக்குச் சென்ற இவர்கள் மீது கண்ணீர்ப் புகைக் குண்டு பிரயோகிக்கப்பட்டதுடன் நீர்த் தாரைப் பிரயோகமும் மேற்கொள்ளப் பட்டது. இது மிகவும் இழிவான செயல். இது குறித்து அரசு எடுக்கப்போகும் நடவடிக்கை என்ன? இந்தத் தாக்குதலுக்கு உத்தரவிட்டவர் யார்? தாக்குதல்களை நடத்தியவர்கள் யார்? தான் நாட்டில் இருந் திருந்தால் இவ்வாறான ஒரு சம்பவம் இடம்பெற இட மளித்திருக்க மாட்டேன் என்று ஜனாதிபதி கூறியுள்ளார். அப்படியாயின் இந்தத் தாக்குதல் தவறானது என்று அரசு ஏற்றுக்கொள்கின்றதா?

யாழ்ப்பாணத்தில் துப்பாக்கிச் சூட்டில் பல்கலைக் கழக மாணவர்கள் இருவர் உயிரிழந்த சம்பவங்களுடன் தொடர்புடைய பொலிஸார் மீது சட்டம் உடனடியாகப் பாய்ந்தது. ஆனால் சிறப்புத் தேவையுடைய இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தியோர் மீது இதுவரை சட்டம் ஏன் பாயவில்லை எனக் கேள்வி எழுப்பினார். (த-5)

## ரேடியோவுக்குள்...

தெரிவித்தனர்.

வவுனியா லக்சபான வீதியிலுள்ள இலத்திரனியல் பொருள்களைப் பழுது பார்க்கும் நிலையத்திலிருந்தே இந்தக் கைக் குண்டு மீட்கப் பட்டுள்ளது.

இலத்திரனியல் உபகரணங்கள் பழுது பார்க்கும் நிலையத்தில் பழுதடைந்த ஒலிச் சாதனப் பெட்டியைக் கழற்றித் திருத்தவேலை மேற்கொண்டபோது, ஒலிச் சாதனப் பெட்டியில் கைக்குண்டு மறைத்து வைக்கப்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

'ஒலிச்சாதனப் பெட்டியை ஒரு நபரிடமிருந்து 150 ரூபாவுக்குக் கொள்வனவு செய்தேன். அது பழுதடைந்திருந்த காரணத்தினால் கழற்றித்திருத்தவேலை மேற்கொண்டேன். இதன்போது கைக் குண்டு இருப்பதை அவதானித்தேன்' என்று இலத்திரனியல் உபகரணங்கள் பழுது பார்ப்பவர் பொலிஸாருக்குத் தெரிவித்தார். சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். (த-5)


# கிழக்குப் பல்கலையில் விரிவுரை அடுத்த வாரம்

கிழக்குப் பல்கலைக்கழக 2015 - 2016 கல்வியாண்டுக்கு புதிதாக அனுமதிக்கப்பட்டுள்ள முதலாம் வருட மருத்துவபீட மாணவர்களுக்கான விரிவுரைகள் சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீடத்தில் எதிர்வரும் 16ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாகப் பல்கலைக் கழகத்தின் பதிவாளர் வி.காண்டீபன் தெரிவித்துள்ளார்.

மாணவர்கள் எதிர்வரும் 15ஆம் திகதி 50, புதிய வீதி, மட்டக்களப்பு எனும் முகவரியில் அமைந்துள்ள சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானபீடத்தில் காலை 9 மணி முதல் தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுகளுக்குப் பின்னர் விடுதி வசதிகளுக்கு உரித்துடைய மாணவர்களுக்கு விடுதி வசதி வழங்கப்படும்.

மேலதிக தகவல்களுக்கு 065 2227025 (உதவிப் பதிவாளர்) எனும் தொலைபேசி இலக்கத்துடன் அல்லது 065 2240731 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டது. (த-ய-47)

## மரண அறிவித்தல்



### வைத்தியலிங்கம் இராமகிருஸ்ணன்

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்தியலிங்கம் இராமகிருஸ்ணன் 10.11.2016 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான வைத்தியலிங்கம் - யானகி அம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான யோசசேப் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் மேரியின் அன்புக் கணவரும் சிறீதரன் (கனடா), சிறிஸ்கந்தராஜா (சவுதி), காந்தரூபி (கனடா), ஜெயரூபி(ஆசிரியர் யா/ கொக்குவில் இ.கல்லூரி), கிருஸ்ணகுமாரி, வசந்தகுமாரி (முன்பள்ளி ஆசிரியர்), ஜெயவதனி, கிருபராஜ்(சவுதி) ஆகியோரின் அன்புத் தந்தையும் மைதிலி, சயந்தினி, ஜீவகுமார், முருகதாஸ், ஜெயபால சுப்பிரமணியம், இளந்திரையன், சிவகுமாரன், பிரசாந்தி ஆகியோரின் அன்பு மாமாவும் சுஜீதரன், கஜானன், உமேஸ், ஆதித்தியன், அபிசன், ஜீவிகா, ரிசாந், உசந்திகா, சாய்னேஸ், சோபிகா, வைஸ்ணவி, யதீபன், அபினாஷ், அகிலாஸ்,பிரகஸ்வினி ஆகியோரின் ஆசை மிகு தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.11.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.122,**
**பாற்பண்ணை வீதி,**
**திருநெல்வேலி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**மனைவி - மேரி**
**மகன்மார் - ஸ்ரீதரன்,**
**சிறிஸ்கந்தராஜா**

(J/5844)(12.18.21)

## மரண அறிவித்தல்



### இராஜரட்ணம் பகீரதன்

உரும்பிராய் வடக்கு, உடையார் வளவைப் பிறப்பிடமாகவும் அமெரிக்காவை வதிவிடமாகவும் கொண்ட இராஜரட்ணம் பகீரதன் (Consortium of Humanitarian Agencies District Officer) 11.11.2016 வெள்ளிக் கிழமை அமெரிக்காவில் காலமாகி விட்டார்.

அன்னார் அளவெட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னதம்பர் இராஜரட்ணம் (இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்) காலஞ்சென்ற உரும்பிராய் உடையார் வளவு திருமதி யோகலட்சுமி இராஜரட்ணம் (இளைப்பாறிய அதிபர் மருதனார்மடம், இராமநாதன் கல்லூரி) தம்பதியரின் அன்பு மகனும் சந்திரவதனி(சுரேசினி - ஆசிரியை வ/மத்திய மகாவித்தியாலயம்,உரும்பிராய் இந்துக் கல்லூரி)யின் அன்புக் கணவரும் சஞ்சேயன், தனஞ்சயன், ஐஸ்வரியா ஆகியோரின் அன்புத் தந்தையும் கன்னிகாவின் அன்பு மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அமெரிக்காவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**தகவல்: பகீரதன் சஞ்சயன்**
**(அமெரிக்கா)**

**தொடர்பு**
**001 775 747 4944**

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் சிவபாதம் (சிவம்)

**(நயினாதீவு)**



நயினாதீவைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில், முத்தட்டுமடலேனை (பழைய சாயி நிலையம்) வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சிவபாதம் (சிவம்) 08.11.2016 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் -வயிரிப்பிள்ளை தம்பதியரின் மகனும் தனலெட்சுமி, பத்மநாதன், வேதாரணியம் (சின்னமணி), இராசலெட்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் கணேசு, புவனேஸ்வரி, பிரேமாவதி, சிவநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் மல்லிகாதேவி, இந்திராதேவி, சிவகுமார், கருணாநிதி, செல்வரஞ்சி, சசீதா, நாகேஸ்வரன், மீனலோஜினி, செல்வலோஜினி, மஞ்சுளா ஆகியோரின் மாமனாரும் சுதர்ஷன், சுதர்ஷினி, சுபாஷினி ஆகியோரின் சித்தப்பாவும் கார்த்திகா, சிந்துஜா,வதனா, பிறேமகாந் ஆகியோரின் பெரியப்பாவும் காலஞ்சென்ற ஞானசுந்தரம், மற்றும் திருமதி இராஜேஸ்வரி ஆகியோரின் உடன் பிறவா சகோதரனும் றமணி, றமேஷ், றஞ்சன், றஜீவன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.11.2016) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11 மணியளவில் காரைக்கால் இந்து மயானத்தில் பூதவுடல் தகனஞ் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**முத்தட்டுமடலேன்,**
**கோண்டாவில் மேற்கு,**
**கோண்டாவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**


**077 737 1860**

(கே/6035(12..18)

## மரண அறிவித்தல்

### கிட்டிணர் நாகராசா

(குனியார் பேருந்து உரிமையாளர் வழி - 759)



**தோற்றம்** **24.11.1957**
**மறைவு** **10.11.2016**

வரணி மாசேரியைப் பிறப்பிடமாகவும் வதிரிச் சந்தி, நெல்லியடியை வசிப்பிடமாகவும் கொண்ட கிட்டிணர் நாகராசா 10.11.2016 வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கிட்டிணர் மற்றும் இலட்சுமி தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்ற பாலு மற்றும் மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் மல்லிகாதேவியின் பாசமிகு கணவரும் மதிவதனி (நோர்வே), கபீஸ், கார்த்திகா, தர்ஷிகா, கிருத்திகா, கஜேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் பார்த்தீபனின்(நோர்வே) மாமனாரும் பாருஜன், பானுஜன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.11.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஆலங்கட்டை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வதிரிச்சந்தி,**
**நெல்லியடி.**

(N 174),
(14,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 892 8571 / 077 895 8570**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கால்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், நவ. 12

இலங்கை பாடசாலை கால் பந்தாட்டச் சம்மேளனத்தினால் தேசியமட்டத்தில் நடத்தப்படும் 13 வயதுப் பிரிவினருக்கான இருபாலாருக்குமான கால்பந் தாட்டத் தொடரில் வவுனியா மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான ஆட்டங்கள் வவு னியா சிறுவர் பூங்கா மைதா னத்தில் இன்று இடம்பெறவுள் ளன. (ம-23)

## அறிவிக்கப்பட்டது நியூசிலாந்து அணி

பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான நியூ சிலாந்து அணி நேற்று அறி விக்கப்பட்டது.



இரு ஆட்டங்கள் கொண்ட தொடரில் பங்கேற்பதற்காக பாகிஸ்தான் அணி நியூசிலாந் துக்குச் சென்றுள்ளது. முதல் டெஸ்ட் எதிர்வரும் 17 ஆம் திகதி யும், இரண்டாவது டெஸ்ட் எதிர் வரும் 25 ஆம் திகதியும் நடை பெறவுள்ளன. இந்தத் தொடருக் காக நியூசிலாந்து அணி நேற்று அறிவிக்கப்பட்டது.

நியூசிலாந்து அணி விவரம்: வில்லியம்சன் (தலைவர்), டொட் அஸ்டில், போல்ட், கொலின் டி கிராண்ட்ஹொம், ஹென்றி, லாதம், ஹென்றி நிக்கொல்ஸ், ஜிம்மி நீஸ்கம், ஜீட் றாவல், டிம் சவுத்தி, றொஸ் ரெய்லர், வாக் னர், வற்லிங். (ம)



# கபில்தேவ் சாதனையை தகர்த்தார் ரங்கன கேரத்

அணித்தலைவராக ஓர் இன்னிங்ஸில் அதிக இலக்கைக் கைப்பற்றியவர் என்ற கபில்தேவின் சாதனையை கேரத் தகர்த் தார்.

சிம்பாப்வே, இலங்கை அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் நேற்றுமுன்தினம் முடிவுக்கு வந் தது. மத்தியூஸுக்கு ஏற்பட்ட காயம் கார ணமாக குறித்த தொடரிலிருந்து அவர் விலகியதால் கேரத்துக்கு தலைமைப் பதவி வழங்கப்பட்டது. இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் இரண்டாவது இன் னிங்ஸில் கேரத் 63 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 8 இலக்குகளைக் கைப்பற் றினார். ஓர் அணித் தலைவர் பந்துவீச்சில் வெளிப்படுத்திய ஆகச் சிறந்த அடைவு மட்டமாக இதுவே பதிவானது.

1985 ஆம் ஆண்டு இந்திய அணியின் தலைவராக இருந்த கபில் தேவ் அடி லெய்டில் நடந்த ஆஸ்திரேலியா அணிக்கு எதிரான ஆட்டத்தின்போது 106 ஓட்டங் களை விட்டுக்கொடுத்து 8 இலக்குகளைக் கைப்பற்றியதே இதுவரை சாதனையாக இருந்தது. கடந்த 31 ஆண்டுகாலமாக நீடித்திருந்த இந்தச் சாதனையை கேரத் தற்போது தகர்த்துள்ளார். (ம)

## ஸ்ராக் விளையாடுவார் ஆஸ்திரேலியா உறுதி




தென்னாபிரிக் காவுக்கு எதிராக இன்று நடை பெறவுள்ள இரண்டாவது டெஸ்ட் ஆட்டத் தில் ஆஸ்திரே லிய அணியின் வேகப்பந்து வீச் சாளர் ஸ்ராக் நிச்சயம் களமி றங்குவார் என்று தெரிவிக்கப்பட் டது.

காயம் காரண மாக நீண்டகால மாக ஓய்விலி ருந்த ஸ்ராக், தென்னாபிரிக் காவுக்கு எதி ரான முதலாவது டெஸ்ட் ஆட்டத் தில் விளையாடி னார். சீரான தயார்ப்படுத்தல் கள் இல்லாம லேயே அவர் இந்த ஆட்டத் தில் களமிறங்கி னார். காயம் முழுமையாகக் குணமடையாத நிலையில் அவர் ஏராளமான பந்துப் பரிமாற்றங் களை வீசியமையால் மீண்டுமொருதடவை அவ ருக்குக் காயம் ஏற்படுவதற்கான வாய்ப்புள்ளது என்று ஆஸ்திரேலிய அணியின் மருத்துவக் குழு எச்சரித்தது. இதனால் இரண்டாவது டெஸ்டில் அவர் களமிறங்குவதில் சந்தேகம் நிலவிய நிலை யில் அவர் நிச்சயம் களமிறங்குவார் என ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை தெரிவித்தது. (ம)

## கால்பந்தாட்ட பயிற்சிமுகாம்

நெஸ்லே நிறுவனத்தின் அனுசரணையில் யாழ். மாவட்டச் செயலக விளையாட்டுப் பிரிவு நடத்தும் 15 வயதுக்குட்பட்ட வீர, வீராங்கனைகளுக்கான கால்பந்தாட்ட பயிற்சி முகாம் ஒன்று இன்று நடை பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதா னத்திலேயே இந்த முகாம் நடைபெறவுள்ளது. ஒட்டுமொத்தமாக ஆயிரம் வீர, வீராங்கனைகள் முகாமில் கலந்துகொள்வார்கள் என்று எதிர் பார்க்கப்படுகிறது. (ம-422-23)



# ஏராளமான வாய்ப்புக்களை கோட்டை விட்டது இந்தியா

இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து 537 ஓட்டங்களைக் குவித் தது. இதற்கு இந்திய அணி பத்துக்கும் அதிகமான வாய்ப்புக்களைக் கோட்டை விட்டமையே முக்கிய காரணமாக அமைந் தது.

சமி வீசிய முதல் பந்துப் பரிமாற்றத்தில் குக் கொடுத்த பிடியெடுப்பை ரகானே தவறவிட்டார். இதனால் குக் ஓட்டமெதனை யும் பெறாமல் ஆட்டமிழக்க வேண்டிய நிலையில் இருந்து தப்பினார்.

இரண்டாவது பந்துப் பரிமாற்றத்தை யாதேவ் வீசினார். குக் மீண்டும் ஒரு வாய்ப்பு கொடுத்தார். இந்த முறை விராட் கோக்லி பிடியெடுப்பைத் தவறவிட்டார்.

யாதேவ் வீசிய ஆறாவது பந்துப் பரிமாற் றத்தை ஹமீட் எதிர்கொண்டார். அவர் கொடுத்த வாய்ப்பை முரளி விஜய் தவற விட்டார்.

113 ஆவது பந்துப் பரிமாற்றத்தை யாதேவ் வீசினார். ஸ்ரோக்ஸ் 60 ஓட்டங்கள் எடுத்தி ருந்த நிலையில் கொடுத்த வாய்ப்பை இலக் குக் காப்பாளர் சகா தவறவிட்டார். அடுத்த சில நிமிடங்களில் ஸ்ரோக்ஸ் கொடுத்த மற்றுமொரு வாய்ப்பையும் சகா தவறவிட் டார்.

119ஆவது பந்துப் பரிமாற்றத்தில் பரிஸ் ரெளவ் கொடுத்த வாய்ப்பை புஜாரா தவற விட்டார். பரிஸ்ரெளவின் பிறிதொரு வாய்ப்பை கோக்லியும் மற்றொரு வாய்ப்பை ஜடேயாவும் தவறவிட்டனர்.

ஸ்ரோக்ஸ் 90 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் ஜடேயாவின் பந்துவீச்சில் கொடுத்த வாய்ப்பை கோக்லி தவறவிட் டார். சில ரண்அவுட்களும் தவறவிடப்பட் டன. ஒட்டுமொத்தமாகச் சேர்த்து கிட்டத்தட்ட 12 வாய்ப்புக்களை இந்திய அணி தவற விட்டது.

இந்திய அணி ஒரே இன்னிங்ஸில் எதிர் அணியின் அதிக வாய்ப்புக்களை தவற விட் டமை இதுவே முதற் தடவையாகும். (ம)




அண்மையில் கொழும்பில் நடைபெற்ற இருபாலாருக்குமான சைக்கிள் ஓட்டப் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் கைப்பற்றிய வீர, வீராங்கனைகளுக்கு விளையாட்டுத் துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகரவால் சைக்கிள்கள் வழங்கப் பட் டன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மைலோ கிண்ணத் தொடரில்

# மேரிஸின் ஆதிக்கம் முடிவு வெளியேற்றியது பாடும்மீன்

யாழ்ப்பாணம், நவ. 12

மைலோ கிண்ணத் தொடரில் தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக சம்பியனாகிய நாவாந்துறை சென். மேரிஸ் அணியைத் தோற்கடித்து இறுதிக்குத் தகுதி பெற்றது குருநகர் பாடும்மீன்.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று அரையிறுதி ஆட்டங்கள் நடைபெற்றன. முதலாவது அரையிறுதியில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் அணி மோதியது. முதல் பாதியில் பாடும்மீன் அணிக்கு ஏகப்பட்ட வாய்ப்புக்கள் கிடைத்தன. ஆனால் எவையும் கோலாக்கப்படவில்லை. கோல் கணக்கு இல்லாமலேயே முதல் பாதியின் முப்பது நிமிடங்களும் ஓடி மறைந்தன. இரண்டாம் பாதியில் ஆட்டத்தின் விறுவிறுப்புத் தன்மை மேலும் இரட்டிப்பானது. பாடுமீன் அணி வீரர் மதுசன் 35 ஆவது நிமிடத்தில் உள்ளெறி கையை எறிய அந்தரத்தில் பறந்தபடி அதிரடிக் கோலைப் பதிவுசெய்தார் சாந்தன். அதன் பின்னர் பாடுமீன் அணியின் ஆதிக்கம் மேலோங்க ஆரம்பித்தது. 38 ஆவது நிமிடத்தில் பாடுமீன் அணி வீரர் சேயன் கொடுத்த பந்தை சக வீரர் ஞானப்பிரதாப் கோலாக்கி 2:0 என்று முன்னிலை பெற்றுக் கொடுத்தார்.

Nestlé MILO
மைலோ கிண்ணத் தொடர்

45வது நிமிடத்தில் பாடுமீன் அணி வீரர் முறையற்ற ஆட்டத்தை வெளிப்படுத்த சென். மேரிஸ் அணிக்கு தண்டனை உதை கிடைத்தது. அதனை மிகச் சிறப்பாக பாடுமீன் அணி கோல் காப்பாளர் தடுக்க வாய்ப்பைத் தவறவிட்டது சென். மேரிஸ். 54 ஆவது நிமிடத்தில் பிறிதொரு வாய்ப்பைத் தவறவிட்டார் நிதர்சன். முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது குருநகர் பாடும் மீன். கடந்த மூன்று வருடமாக தொடர்ச்சியாக மைலோ கிண்ணத்தைக் கைப்பற்றி ஏக ஆதிக்கத்தை நிலைநாட்டி வந்த சென். மேரிஸ் அணியின் வெற்றிநடைக்கு பாடும்மீன் முற்றுப்புள்ளி வைத்தது. (ம-23-422)



## சென். அன்ரனிஸ் இறுதியில் யங்கம்பன்ஸை வெளியேற்றி

மைலோ கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் கம்பர்மலை யங்கம்பன்ஸை வெளியேற்றி இறுதிக்குத் தகுதிபெற்றது பாசையூர் சென். அன்ரனிஸ்.

துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று முற்பகல் 11 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெற்றது. ஆட்டத்தின் 18 ஆவது நிமிடத்தில் அன்ரனிஸின் முதல் கோலைப் பதிவுசெய்தார் கலிஸ்ரஸ். யங்கம்பன்ஸ் பலமுறை முயற்சித்த போதிலும் எவையும் பயனளிக்கவில்லை. அன்ரனிஸின் ஆதிக்கத்துடனேயே முதல் பாதி முடிவடைந்தது. 36 ஆவது நிமிடத்தில் யங்கம்பஸின் குகரதன் பதிலடி கொடுத்து கோல் கணக்கை 1:1 என்று சமப்படுத்தினார். ஆட்டத்தின் 44ஆவது, 4[illegible] குமார் அன்ரனிஸ் சார்பாக கோல்களை அடுக்கினார். முடிவில் 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது அன்ரனிஸ். (ம-23-422)

### அபிவிருத்தித் திட்டம்

தேசிய விளையாட்டு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தரம் 7 மாணவர்களின் தகைமையைப் பரிசோதிப்பதற்கான செயற்றிட்டம் நாடு முழுவதும் இடம்பெற்று வருகின்றது. வவுனியாவுக்கான நிகழ்ச்சித் திட்டம் வவுனியா தமிழ் மத்தியில் நேற்று இடம்பெற்றது. (ம-108)

### இன்றைய மோதல்கள்

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கபடித் தொடரில் இன்று இடம்பெறும் ஆட்டமொன்றில் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து சித்திவிநாயகர் 'ஏ' அணி மோதவுள்ளது. (ம-108)

## நெருக்கடியில் ஆஸ்திரேலியா

தென்னாபிரிக்கா – ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

தொடரின் மூன்று ஆட்டங்களில் முதலாவது ஆட்டம் பேர்த்தில் நடைபெற்றது. ஆஸியின் கோட்டையான குறித்த மைதானத்தில் ஆஸியைச் சரித்து அபார வெற்றிபெற்றது தென்னாபிரிக்கா. இரண்டாவது ஆட்டம் ஓவல் மைதானத்தில் இன்று ஆரம்பமாகிறது. இந்த ஆட்டத்திலும் தென்னாபிரிக்கா வெற்றிபெற்றால் கிண்ணம் அந்த அணியிடம் சென்றுவிடும். எனவே தொடரில் தனது இருப்பை தக்கவைக்க வேண்டுமாயின் இந்த ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டிய நெருக்கடி ஆஸிக்கு ஏற்பட்டுள்ளது. (ம)

## ஆஸியிடம் தன்னம்பிக்கை இல்லை; கிரேம் சிமித் கடுமையாக விமர்சனம்

ஆஸ்திரேலிய அணியிடம் தன்னம்பிக்கை இல்லை. அந்த அணி இன்னும் ஏகப்பட்ட தோல்விகளைச் சந்திக்கப்போகிறது எனத் தெரிவித்தார் தென்னாபிரிக்காவின் முன்னாள் தலைவரான கிரேம் சிமித்.

ஆஸ்திரேலிய அணியின் அண்மைக்காலப் பெறுபேறுகள் மிகவும் மோசமாக உள்ளன. டெஸ்ட் தொடரில் இலங்கையிடம் 0:3 என்ற அடிப்படையில் வாங்கிக் கட்டியது. ஒருநாள் தொடரில் தென்னாபிரிக்காவால் 0:5 என்று வழித்துத் துடைக்கப்பட்டது. ரி-20 உலகக் கிண்ணத்தில் இந்தியாவிடம் படுதோல்வியடைந்தது. இவை அனைத்தும் அந்நிய மண்ணில் அந்த அணி சந்தித்த மோசமான தோல்விகளாக உள்ளன. தற்போது ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையே டெஸ்ட் தொடர் ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வருகிறது. பேர்த் ஆடுகளத்தில் முதலாவது ஆட்டத்தில் தென்னாபிரிக்கா வெற்றிபெற்றது. பேர்த் ஆடுகளம் ஆஸியின் கோட்டை என வர்ணிக்கப்படும் அளவுக்கு அங்கு அந்த அணி ஏராளமான வெற்றிகளைக் குவித்திருந்தது. ஆனால் வழக்கத்துக்கு மாறாக தென்னாபிரிக்கா சாதித்ததையடுத்தே சிமித் இவ்வாறு தெரிவித்தார்.

ஆஸ்திரேலிய அணி பெரும் குழப்பத்தில் உள்ளது. தொடர் தோல்விகள் மூலம் தன்னம்பிக்கையை இழந்துள்ளது. என்னைப் பொறுத்தவரை ஆஸ்திரேலிய அணி திறமை என்ற காரணியை கொண்டு கட்டப்பட்டதாகும். மேலும் கடினமாக ஆடுவது என்ற பண்பாட்டின் அடிப்படையில் கட்டமைக்கப்படும் அணியாகும். ஆனால் தற்போது இந்த நிலையை ஆஸி இழந்துள்ளது என்றே எனக்குப் புலப்படுகிறது என சிமித் மேலும் தெரிவித்தார். (ம)



## மைலோ கிண்ணம்; இறுதியாட்டம் இன்று

மைலோ கிண்ணத்துக்காக நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டமும் மூன்றாமிடத்துக்கான ஆட்டமும் இன்று நடைபெறவுள்ளன.

யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்திலேயே இந்த ஆட்டங்கள் நடைபெறவுள்ளன. மு.ப. 11 மணிக்கு இடம்பெறவுள்ள மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் கம்பர்மலை யங்கம்பன்ஸும் நாவாந்துறை சென். மேரிஸும் மோதவுள்ளன.

பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும் இறுதி ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து பாசையூர் சென். அன்ரனிஸ் அணி மோதவுள்ளது.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். மாவட்டச் செயலர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினர்களாக நெஸ்லே லங்கா நிறுவனத்தின் பிரதித் தலைவர் நோமன் கன்னங்கரா, நெஸ்லே லங்கா நிறுவனத்தின் விற்பனை மேம்படுத்தல் முகாமையாளர் சுகத் சஜீவ விக்கிரமசிங்க, பிரதிப் பொலிஸ்மா அதிபர் சுஜீவ தர்மரட்ன 512ஆவது படைப்பிரிவின் பிரிகேடியர் பி.ஜெ.கொடித்துவக்க ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர் காயத்தால் வின்செண்ட் அவதி

தொடர்ச்சியான காயங்கள் காரணமாக பெல்ஜியம் அணித் தலைவர் வின்சென்ற் ஓய்வு பெறவுள்ளார் எனக் கருதப்படுகிறது. பெல்ஜியம் – நெதர்லாந்து அணிகளுக்கு இடையில் அண்மையில் நடைபெற்ற ஆட்டமொன்றில் வின்சென்ற் களமிறங்கவில்லை. காயம் காரணமாகவே அவர் விலகினார் எனச் சொல்லப்படுகிறது. வின்சென்ற் கடந்த பல மாதங்களாகவே தொடர்ச்சியான காயங்களால் அவதிப்பட்டு வருகிறார். அவருக்கு தற்போது 30 வயதாகிறது. எனவே அவர் மீண்டும் அணிக்குத் திரும்பாமல் ஓய்வை அறிவிக்கவும் அதிக வாய்ப்புக்கள் உள்ளது எனக் கருதப்படுகிறது. (ம)

## திறமையின் தேடல்

**நீங்களும் அறிவிப்பாளராக ஊடகவியலாளராக மிளிர அரிய சந்தர்ப்பம்**

100% கலையக பயிற்சி / New Trends Of Fm வானொலித்துறை. பத்திரிகைத்துறை. செய்தி. சந்தைப்படுத்தல்.Public Relation & Advertising, Production Audio, Social Media,Media Ethics & Law போன்ற துறைகளை உள்ளடக்கிய 3 மாத கால பயிற்சி நெறியில் நீங்களும் இணைந்து கொள்ளுங்கள்.

- ஏனைய துறைகளில் உள்ளவர்களும் இத் துறையினைக் கற்று மேலதிக தகைமையினை வழங்கும் இக் கற்கை நெறியில் இணைந்து கொள்ளலாம்.

ICVE மற்றும் அரச அங்கீகரிக்கப்பட்ட 2 சான்றிதழ்கள்

- **ஆரம்பம்: யாழ்ப்பாணத்தில் 13.11.2016**
**வவுனியாவில் 20.11.2016**

**சனி/ஞாயிறு தினங்களில் வகுப்புக்கள் நடைபெறும்**

பதிவுகளுக்கு முந்துங்கள்

North Mass media College
No. 221 , Kandy Road, Jaffna.
**077 747 5783**

32 ஆவது ஆண்டை முன்னிட்டு
உதயன் உம் தென்மராட்சி கல்விவலயமும்
இணைந்து நடாத்தும்

## சிறுவர் மகிழ்களம் - 2016

காலம் : 12.11.2016 சனிக்கிழமை
நேரம் : காலை 8.00 மணி
இடம் : சாவகச்சேரி டிறிபேர்க் (கல்லூரி மைதானம்)



தலைமை
**கௌரவ ஈ.சரவணபவன்**
(தலைவர் உதயன் குழுமம்)

முதன்மை விருந்தினர்
**உயர்திரு. பா.செந்தில் நந்தனன்**
(மேலதிக அரசாங்க அதிபர் – யாழ் மாவட்டம்)

சிறப்பு விருந்தினர்கள்
**உயர்திரு. சு.கிருஸ்ணகுமார்**
(வலயக்கல்விப் பணிப்பாளர் – தென்மராட்சி வலயம்)

**உயர்திரு. கா.சண்முகதாசன்**
(செயலாளர் –நகரசபை சாவகச்சேரி)

கௌரவ விருந்தினர்கள்
**உயர்திரு. நா.கந்ததாசன்**
(பிரதிக்கல்வி பணிப்பாளர் கல்வி முகாமைத்துவம்)

**உயர்திரு.சிவத்திரை சிவநாதன்**
(பிரதிக்கல்வி பணிப்பாளர் கல்வி அபிவிருத்தி)

**உயர்திரு. ந.ஜெயக்குமாரன்**
(அதிபர் சா/டிறிபேர்க் கல்லூரி)



அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்



# இந்தியா – இங்கிலாந்து டெஸ்ட் சமநிலையை நோக்கி நகர்கிறது

இந்தியா– இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் ஆட்டத்தின் மூன்றாம் நாளான நேற்றைய நிலவரத்தின் படி ஆட்டம் சமநிலையில் முடிவடைவதற்கு அதிக வாய்ப்புக்கள் உள்ளதாகக் கருதப்படுகிறது.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ஆட்டம் ராஜ்கோட் மைதானத்தில் நடைபெற்று வருகிறது. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற அலிஸ்டர் குக் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார். 517 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்து இங்கிலாந்தின் முதல் இன்னிங்ஸ் முடிவு கண்டது. பந்துவீச்சில் ஜடேயா மூன்று இலக்குகளையும், யாதேவ், அஸ்வின், சமி மூவரும் தலா இரு இலக்குகளையும், மிஸ்ரா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணி இரண்டாம் நாள் முடிவில் இலக்குச் சரிவில்லாமல் 63 ஓட்டங்களைப்பெற்றிருந்தது. முரளி விஜய் 25 ஓட்டங்களுடனும் கம்பீர் 28 ஓட்டங்களுடனும் மூன்றாம் நாளுக்காகக் களமிறங்கினர். அணி 68 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது, 29 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் கம்பீர். வீழ்த்தியவர் புரோட். முரளிவிஜய், புஜரா இணைந்து இந்தியாவின் இன்னிங்ஸை நேர்த்தியாகக் கட்டமைத்தனர். இருவரும் ஆளுக்கொரு அரைச்சதம் கடந்து சதத்தையும் நெருங்கினர். 200 ஓட்டங்ளை இந்திய அணி எட்டிய பின்னரும் இலக்குச்சரிவு ஏற்படவில்லை. இருவரும் சதம் கடந்தனர். புஜாரா 124 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ஸ்ரோக்ஸ் அனுப்பி வைத்தார். முரளி விஜய் 126 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். மந்தமான வெளிச்சத்தைக் கருத்திற்கொண்டு களமிறங்கப்பட்ட மிஸ்ராஓட்டம்எதனையும் பெறாது ஆட்டமிழந்தார். நாள் முடிவில் இந்தியா 319–4 என்றுள்ளது. கோக்லி 26 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளார். (ம)



அருள்மிகு சபரி ஐயப்பன் திருக்கோயில்,சில்வா வீதி, வட்டக்கச்சி, கிளிநொச்சி

**மாலை அணிதல்:16.11.2016 (புதன்)**

அன்று காலை 9.00 மணிக்கு மேற்படி ஆலயத்தின் விநாயகர் மண்டபத்தில் வைத்து குரு சாமியாரால் சாமியார்களுக்கு மாலை அணிவிக்கும் நிகழ்வு நடைபெறவுள்ளது என்பதை மாலை அணியவுள்ள ஐயப்பன் அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

**ஆலய பரிபாலன சபையினர்.**

(K 214)(16,17,19)

**தொடர்பு: 077 3891969**

## “A” என்ற அருங்கனியைப் பெற்றிட வணிகக்கல்வி தொடர் பரீட்சை (2017 A/L )- பரீட்சை-04

**மாவட்ட ரீதியில் நடத்தப்பட்ட பரீட்சையில் 60 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களை பாராட்டி வாழ்த்துதல்**

**வளவாளர் (வலிகாம கல்வி வலயம்,வணிகக்கல்வி)**

**S.K.Balasabesh,H.N.Dip.in ACC (ATI)
P.G.Dip.in.Ed (OUSl)
Tutorial staff, Jaffna College**

| இல | மாணவர் பெயர் | புள்ளி | மாவட்ட நிலை | பாடசாலை பெயர் |
|---|---|---|---|---|
| 01 | S.ஸ்ரீவித்தியா | 86 | 01 | யா/கொக்குவில் இந்து கல்லூரி |
| 02 | S.அனோயா | 85 | 02 | யா/மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி |
| 03 | P.மரிஸ்ரலா | 72 | 03 | யா/வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை |
| 04 | R.றொமிஷியா | 71 | 04 | யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி |
| 05 | S.கீர்த்தனா | 70 | 05 | யா/கொக்குவில் இந்து கல்லூரி |
| 06 | K.றஜிதா | 69 | 06 | யா/கொக்குவில் இந்து கல்லூரி |
| 07 | S.டிலக்ஷனா | 66 | 07 | யா/சாவகச்சேரி இந்து கல்லூரி |
| 08 | T.லக்சனா | 66 | 07 | யா/இந்து மகளிர் கல்லூரி |
| 09 | N.டெப்னியா | 66 | 07 | யா/திருக்குடும்ப கன்னியர் மடம் |
| 10 | J.ஜெகாயினி | 65 | 10 | யா/இந்து மகளிர் கல்லூரி |
| 11 | K.பனுஷியா | 65 | 10 | யா/வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை |
| 12 | B.தயானிகா | 65 | 10 | யா/மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி |
| 13 | S.பானுஷா | 64 | 13 | யா/இந்து மகளிர் கல்லூரி |
| 14 | J.அபிராமி | 63 | 14 | யா/இந்து மகளிர் கல்லூரி |
| 15 | A.லூர்திகா | 63 | 14 | யா/திருக்குடும்ப கன்னியர் மடம் |
| 16 | G.சஸ்மிதா | 62 | 16 | யா/கொக்குவில் இந்து கல்லூரி |
| 17 | T.திருமகள் | 62 | 16 | யா/இந்து மகளிர் கல்லூரி |
| 18 | S.அனார்த்தனி | 61 | 18 | யா/திருக்குடும்ப கன்னியர் மடம் |
| 19 | P.ஜனனி | 60 | 19 | யா/இந்து மகளிர் கல்லூரி |

'பரீட்சை கடினமாக அமைந்தால் பெறுபேறுகள் உயர்வாக அமையும்'

**NEC**
மணிக்கூட்டு கோபுரவீதி,
பெருமாள் கோயில் அருகில், யாழ்ப்பாணம்.

வணிகக்கல்வி - SK.பாலசபேஷ்
கணக்கீடு - KB.பாலகஜன்
பொருளியல் - NB.கஜிதரன்

(C 23380) (16,17,19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.11.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.